கல்கி



KALKI ஜூன் 13,1954 4 அணா



இந்தியாவில் தயாரித்தது. L. 244-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 46	1954 ஜுன் 13	ஜய ஸ்ரீ வைகாசி 31

பீரங்கிக்குப் போஜனம்!	(தலையங்கம்)	...	3
1970-ல் இந்தியாவின் அமோகம்!	...	...	4
அராஜகத்துக்கு யோகம்!	(கார்ட்டூன்)	...	5
வார்த்தைகள் முறிந்தன ; வாக்கு பொய்க்காது!	...	...	6
டிராம் வேண்டுமா! டிராம்!!	...	...	7
நாஞ்சில் நாட்டில் வீர முழக்கம்	...	...	8
இலங்கையில் வள்ளுவர்	கே. கணேஷ்	...	11
உழைப்பால் உயர்ந்தவர்	சி. அ. மகாலிங்கம்	...	14
அட்டைப்பட விளக்கம்	...	...	16
சக்கரவர்த்தித் திருமகன்	ராஜாஜி	...	19
பானுவின் அன்னை (போட்டிக் கதை)	நி. கோமளா	...	24
வேணு கானம் (பாப்பா மலர்)	விஜயம்	...	31
அன்பின் பாதையிலே...	பி. எஸ். மணி	...	33
இது இலட்சிய சகாப்தம்!	...	...	36
திரு. வி. க. மணிமண்டப நிதி	...	...	40
மலர்ந்த மனம்	ஆர். எஸ். ஞானம்பாள்	...	43
கோகிலா	ரமண்லால் வஸந்தலால் தேசாய் - ரா. வீ.	...	49
யோகாசனச் சிகிச்சை	வி. என். குமாரஸ்வாமி	...	62
வட்ட மேஜை	...	...	64
கனவு காட்டிய வழி	கு. ப. சேது அம்மாள்	...	67
படித்துப் பாருங்கள்!	...	...	72

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 46

பீரங்கிக்குப் போஜனம்!

அமெரிக்காவில் இப்போது புகழ் பெற்ற தளபதிகள் பலர் இருக்கிறார்கள். மரத்துக்கு மரம் அவர்கள் காய்த்துத் தொங்குகிறார்கள் என்றாலும், மிகையாகாது. சென்ற மகா யுத்தத்தில் பல போர்க்களங்களில் வெற்றி கண்ட தளபதிகள் அவர்களில் பலர். அது போதாது என்று, கொரியாவில் சமீபத்தில் நடந்து இன்னமும் குற்றுயிராக இருந்து வரும் யுத்தத்தில் வெற்றி கண்ட வீராதி வீர சேனாபதிகள் பலரும் அமெரிக்காவில் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் யுத்த அநுபவங்களை எழுதுகிறார்கள். அப்படி எழுதும் போது, அரசாங்கத்தை நடத்தும் அரசியல்வாதிகளின் மடத்தனத்தைப் பற்றியும் சக்கைப் போடு போடுகிறார்கள்; அந்த அரசியல்வாதிகளால் எப்படி யுத்தம் நடத்துவது கஷ்டமாகிற தென்றும், வெற்றி அடைவது தடைப்பட்டு வீணில் உயிர் நஷ்டம் உண்டாகிற தென்றும் குறிப்பிடுகிறார்கள்.

கடைசியாக, அவரவர்களும் எப்படி இந்த உலகத்தைக் காப்பாற்றுவது என்பதற்குத் தங்கள் யோசனைகளையும் தெரியப்படுத்துகிறார்கள்! "உலகத்தைக் காப்பாற்றுவது" என்றால், (இவர்களுடைய அபிப்பிராயத்தில்) அமெரிக்காவின் ஆதிக்கத்தை உலகமெங்கும் நிலைநாட்டிக் கம்யூனிஸ்ட் நாடுகளான ருஷிய - சீன ஆதிக்கம் பரவாமல் தடுத்து, முடிவில் அந்நாடுகளின் பலத்தை ஒழித்துக் கட்டி விடுவதே யாகும்!

இம்மாதிரி உலகத்தைக் காப்பாற்றுவதற்கு வழி ஒன்றைக் கொரியாவில் போரிட்ட ஜெனரல் வான் பிளீட் என்னும் சேனாபதி சமீபத்தில் பத்திரிகைகளில் எழுதியிருந்தார்.

கொரியா யுத்தத்தில் அமெரிக்கா செய்த பெருந் தவறை அவர் அதில் எடுத்துக் காட்டி யிருந்தார். தென் கொரியாவில் உள்ள மக்களைப் புதிய போர் முறைகளில் பழக்கி அவர்களைக் கொண்டே கொரியா யுத்தத்தை நடத்தியிருக்க வேண்டுமாம். தென் கொரியர்களைப் பழக்கி அவர்களுக்கு வேண்டிய யுத்த தளவாடங்களையும் நவீன ஆயுதங்களையும் வேண்டிய அளவு கொடுத்திருந்தால், தென் கொரியர்களே வடகொரியர்களையும் சீனர்களையும் துரத்தி அடித்திருப்பார்களாம்.

அதற்குப் பதிலாக அமெரிக்கச் சைன்யங்களைத் தென் கொரியாவுக்கு அனுப்பியதனால், அபரிமிதமாகப் பணச் செலவு ஆயிற்றாம்.

ஓர் அமெரிக்க வீரனைக் கொரியாவுக்கு அனுப்பி அவனுக்கு உணவும் மற்ற நாகரிக வசதிகளும் அளிப்பதில் ஏற்படும் செலவைக் கொண்டு, இருபத்தைந்து தென் கொரிய வீரர்களைச் சிறந்த முறையில் தயாரித்திருக்கலாம்!

அமெரிக்க வீரர்களுக்குப் போர்க்களத்திலே கூடச் சாக்கலேட்டு, 'ஐஸ்கிரீம்', உயர்தர சிகரெட் எல்லாம் அமெரிக்காவிலிருந்து அனுப்ப வேண்டி யிருக்கிறது.

தென் கொரிய வீரனோ தவளையைப் பிடித்துத் தின்று விட்டு, அமெரிக்க வீரனைப் போலவே சண்டை போடுவான்! அவனுக்கு நவீன யுத்த முறைகளில் பயிற்சி அளித்து நவீன யுத்தக் கருவிகளையும் அளித்தால் போதும்!

"இப்படித் தென் கொரியாவைப் போல் உலகில் பற்பல இடங்களில் கம்யூனிஸ்ட் நாட்டினர் தலையை நீட்டப் பார்ப்பார்கள். அங்கே யெல்லாம் அவர்களை மண்டையில் தட்டிப் பின்வாங்கச் செய்ய வேண்டி யிருக்கும். இப்படி நேரும் ஒவ்வொரு சிறு யுத்த களத்துக்கும் அமெரிக்க வாலிப வீரர்களை அனுப்பிப் பலி கொடுத்துக் கொண்டிருந்தால், அமெரிக்காவின் கதி என்ன ஆவது? நாளடைவில் அமெரிக்காவின் ஆள் பலம் அநியாயமாய்க் குறைந்து விடுமே? என்றாவது ஒரு நாள் ருஷிய - சீனாவுடன் கடைசிப் பல பரீட்சை பார்க்கும்படியான சந்தர்ப்பம் நேரிடலாம். அப்போது அந்த ராட்சதர்களுடன் சண்டை போடுவதற்கு அமெரிக்க வீரர்கள் போதிய அளவு இருக்க மாட்டார்களே?" என்று மேற்படி அமெரிக்கத் தளபதி அங்கலாய்ப்பது இயல்பே அல்லவா?

"ஆகையால், தென் கொரியாவில் அமெரிக்கர்கள் செய்த பிசகை மற்ற இடங்களில் செய்யக் கூடாது. உலக முழுவதிலும் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் தலைகாட்டக் கூடிய இடங்களிலெல்லாம் நாம் அங்கங்கே சிநேகிதர்களைப் பிடிக்க வேண்டும். அந்தந்த

நாட்டு சைன்னியங்களைக் கொண்டே கம்யூனிஸ்ட் வல்லரசு ஆதிக்கத்தை எதிர்த்து யுத்தம் நடத்த வேண்டும்!'' என்று முடித்திருந்தார்.

இந்த வெற்றி வீரரான அமெரிக்கத் தளபதியின் அபிப்பிராயமே இப்போது அமெரிக்காவில் மற்றும் பல தளபதிகள் – அரசியல் தலைவர்களின் அபிப்பிராயமாக இருந்து வருகிறது. தற்போது அமெரிக்க அரசாங்கத்தின் அக்கிராசன பதவி வகிக்கும் ஐசன் ஹவர் அமெரிக்காவின் பெரிய வீர தளபதிகளுக்கெல்லாம் பெரிய வீர தளபதி. ஆகையால் அவருடைய கொள்கையும் மேற்கண்டவாறுதான் இருக்க வேண்டும்.

ஆகவே உலக அரசியலில் இப்போது அமெரிக்கா கடைப்பிடிக்கும் இராஜ தந்திரம் என்னவென்றால், அங்கங்கே ருஷியாவையும்-சீனாவையும் ஒட்டியுள்ள நாடுகளிலெல்லாம் 'பீரங்கி போஜனம்' தயார் செய்து வைப்பதேயாகும்.

அந்தந்த நாடுகளில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பைத் தீவிரமாக்கி, இராணுவ தளவாடங்களை உதவி, நவீன இராணுவப் பயிற்சி அளித்து வைக்க வேண்டியது. சமய சந்தர்ப்பம் சரியாக வரும் போது, அந்தந்த நாட்டுச் சைன்னியத்தைக் கொண்டே கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தைத் தாக்கிப் பலவீனப்படுத்த வேண்டியது.

இந்த முறையைப் பின்பற்றித்தான் இந்தோ—சீனாவில் காலங் கடந்து துருப்பிடித்துப் போன பிரஞ்சு ஆட்சிக்கு அமெரிக்கர்கள் முட்டுக் கொடுத்து நிலைநாட்டி வருகிறார்கள். கோடானு கோடி டாலர்களும் மற்றத் தளவாட உதவிகளும் செய்து வருகிறார்கள்.

பார்மோஸாவில் சியாங்-காய்-ஷேக்கை இன்னமும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

துருக்கிக்கும் ஈரானுக்கும் பண உதவியும் தளவாட உதவியும் செய்து வருகிறார்கள்.

மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்காகப் பல நாடுகளின் ஐக்கிய சைன்யத்தை நிறுவுவதற்காக அமெரிக்கர்கள் செய்திருக்கும் பணச் செலவும் தளவாட உதவியும் பிரமிக்கத் தக்கவை.

அந்த வரிசையில் அமெரிக்காவின் இராணுவ தளவாட உதவிக்கு ஆளாகும் துர்ப்பாக்கியம் இப்போது பாகிஸ்தானுக்கு நேர்ந்திருக்கிறது.

தற்போதைய பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் முகம்மது அலி முன்னம் அமெரிக்காவில் பாகிஸ்தான் தூதராக இருந்ததை நேயர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

பாகிஸ்தானில் 'பீரங்கி போஜனம்' தயாரிப்பதற்குச் சம்மதம் அளித்துவிட்டு அவர் பாகிஸ்தானுக்குத் திரும்பி வந்து அந்த நாட்டுப் பிரதம மந்திரி பதவி ஏற்றார் போலும்!

கிழக்குப் பாகிஸ்தானில் நாலு கோடி மக்கள் ஜனாப் பஸ்லுல் ஹக்கையும் அவரைச் சேர்ந்தவர்களையும் ஏறக்குறைய 'ஒருமுகமாக' என்று சொல்லும்படி அரசாங்க பீடத்துக்குத் தேர்ந்தெடுத்திருக்கும்போது, கிழக்குப் பாகிஸ்தானில் ஜனநாயகத்தையே தீர்த்துக் கட்டி விடும் தைரியம் ஜனாப் முகம்மது அலிக்கு எங்கிருந்து வந்தது! ஜனாப் பஸ்லுல் ஹக்கைப் பதவியிலிருந்து விலக்கி விட்டுப் பாதுகாப்பில் வைத்தது மட்டுமன்றி, அவருடைய சகாக்கள் அவரைப் பார்க்க முடியாமலே தடுத்து விட்டிருக்கிறார்.

ஏன்? தேர்தலில் மகத்தான வெற்றி அடைந்த கட்சியினர் கூட்டம் போடுவதைக் கூடத் தடை செய்திருக்கிறார்!

இவ்வளவும் 'பொது உடைமை'யை எதிர்ப்பதன் பேராலேயே நடந்திருக்கிறது!

உண்மையில், இவை எல்லாம் அமெரிக்க ராணுவ உதவி செய்திருக்கும் காரியங்கள்தான்!

பாகிஸ்தானில் 'பீரங்கி போஜனம்' தீவிரமாகத் தயாராகிக் கொண்டு வருகிறது என்பதற்கு இது நல்ல அறிகுறி அல்லவா!

'பீரங்கி' என்று இங்கே பொதுப்படையாகக் குறிப்பிட்ட போதிலும், தற்காலத்திய பயங்கரமான யுத்த ஆயுதங்கள் எல்லாவற்றையும் அது குறிக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம்.

ருஷியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நிச்சயமாக மோதல் ஏற்படும் என்று அமெரிக்கத் தளபதிகளும், ராஜதந்திரிகளும், அரசியல் தலைவர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

அந்த மோதலின் முதற் பலன்களை நடுமத்தியில் உள்ளவர்கள் அநுபவிக்கட்டும் என்ற ஜீவகாருண்ய நோக்கத்துடனேதான் உலகில் பல நாடுகளுக்கும் இராணுவ தளவாட உதவி அளிக்க முன் வந்து கொண்டிருக்கிறார்கள்!

பாவம்! அந்த ஜீவகாருண்ய வலையில் பாகிஸ்தான் நன்றாகச் சிக்கிக் கொண்டிருக்கிறது.

தற்சமயம் எந்த தேசத்துக்காவது நன்மை விளைய வேண்டும் என்று நாம் விரும்பினோமானால், ''ஆண்டவனே! அமெரிக்கா தேசத்தின் ஜீவகாருண்யம் நிறைந்த இராணுவ உதவியிலிருந்து அந்த ஏழை நாட்டைக் காப்பாற்றுங்கள்!'' என்று பிரார்த்திக்க வேண்டியதுதான்.

1970-ல் இந்தியாவின் அமோகம்!

இந்தியா தேசத்தில் இப்போது வாழ்ந்திருப்பவர்களில் 1970-ம் ஆண்டு வரையில் உயிரை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பெரிய பாக்கியசாலிகள்! ஏனென்றால், அந்தப் புண்ணிய வருஷத்தில் இந்தியாவின் தேசிய வருமானம் ஒட்டிக்கு இரட்டியாகிவிடப் போகிறது!—இந்த நல்ல சமாசாரத்தை நம் பாரத நாட்டு நிதி மந்திரி தேசமுக் அவர்கள் புதிய ஆந்திரத் தலைநகரமாகிய கர்நூலில் வெளியிட்டிருக்கிறார்!


நிதி மந்திரியின் வாக்குப் பலிக்கப் போகிறதா, இல்லையா என்று பார்ப்பதற்காவது நாம் அனைவரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு இன்னும் பதினாறு வருஷம் உயிரோடிருப்பது அவசியமாகிறதல்லவா! ''யமனே! எட்டிப் போ! இங்கு வராதே! இன்னும் பதினாறு வருஷம் இந்தியாவைத் திரும்பிப் பாராதே!'' என்று எச்சரிக்கத் தோன்றுகிறதல்லவா!

நமது தேசிய வருமானம் பதினாறு வருஷத்தில் ஒட்டிக்கு இரட்டி ஆக உயரப் போகிறதென்றால், அதைப் பற்றி நாம் மகிழ வேண்டும்; குதூகலப் பட்டே தீர வேண்டும்!

வேறு எதைப் பற்றியும் அதிகமாகக் குதூகலப் படுவதற்கில்லை. குதூகலப் படக்கூடிய செய்திகள் இப்போதெல்லாம் பத்திரிகையில் கிடைப்பதில்லை. எனவே, நமது தேசிய வருமானம் பதினாறு வருஷத்தில் ஒன்றுக்கு இரண்டுமடங்கு ஆகப்போவது பற்றியாவது உற்சாகப்படலாமே!

தென் அமெரிக்கா தேசத்தில் சிறிய சிறிய இராஜ்யங்கள் பல உண்டு. அவற்றில் சில்லி என்னும் நாட்டின் இராணுவ மந்திரி ஒரு வருஷம்

அராஜகத்துக்கு [illegible]



பாரிசில் பிரான்ஸ், இந்தியா பிரதிநிதிகளுக்குள் நடந்த பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டதால், பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் குண்டர்களின் அட்டூழியங்கள் மேலும் அதிகமாகலாம்.

பார்லிமெண்டு சபையில் பின்வருமாறு தெரிவித்தாராம்: "கனவான்களே! உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி ஒன்றை இப்போது சொல்லப் போகிறேன். நமது கப்பற் படை போன வருஷத்தை விட இந்த வருஷத்தில் ஒட்டிக்கு இரட்டியாகப் பெருகி யிருக்கிறது!"

இதைக் கேட்டதும் அந்தப் பார்லிமெண்ட் சபை அங்கத்தினர்கள் எல்லாரும் எழுந்து நின்று கரகோஷம் செய்தும், மேஜைகளைத் தட்டியும், மைக் கூடுகளை எடுத்தெறிந்தும் ஆர்ப்பரித்தார்களாம்! சிலர் தத்தம் ஆசனங்களில் தலைகீழாகக் கூட நின்றார்களாம்!

கடைசியில் அந்த அங்கத்தினரில் ஒரு சந்தேகப் பிராணி எழுந்து நின்று, "சென்ற வருஷம் நமது கடற்படையில் எத்தனை யுத்தக் கப்பல்கள் இருந்தன! இந்த வருஷம் எவ்வளவு இருக்கின்றன!" என்று வினவினாராம்.

இராணுவ மந்திரி, "ஆகா! யுத்தக் கப்பல்களைப் பற்றி யார் பேசினார்கள்! சென்ற வருஷத்தில் நம் சர்க்காருக்குச் சொந்தமான நீராவிப் பிரங்கிப் படகு ஒன்று இருந்தது; இந்த வருஷத்தில் இரண்டு நீராவிப் படகுகள் இருக்கின்றன! கடற் கங்கத் திருடர்களைத் தேடிப் பிடிக்க அவை உதவுகின்றன!" என்றாராம்.

நம் நிதிமந்திரி தேசமுக் இன்னும் பதினைந்து வருஷத்தில் இந்தியாவின் தேசிய வருமானம் ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஆகிவிடும் என்று நமக்கு ஆசை காட்டி யிருக்கிறார். ஆனால் அவர் இப்போது நமது தேசிய வருமானம் எவ்வளவு என்று சொல்லவில்லை. அவருடைய பிரசங்கத்தைத் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் யாரும் அந்தத் தகவலை அவரிடம் கேட்கவில்லை என்று தோன்றுகிறது.

போனால் போகட்டும். நமக்குத் தெரிந்தவரையில், இந்தியாவில் உள்ள மக்களின் இப்போதைய சராசரி வருமானம் வருஷத்துக்கு 75 ரூபாய்!

மாத வருமானம் 75 ரூபாய் அல்ல; வருஷம் ஒன்றுக்கு 75 ரூபாய்!

அதாவது ஒவ்வொரு மாதமும் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆடவர், பெண்டிர், வயோதிகர், குழந்தை அனைவருக்கும் தலைக்கு ஆறு ரூபாய் நாலு அணா வருமானம் கிடைக்கிறது!

இது சராசரிக் கணக்கு என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் சில பணக்காரர்களும் முதலாளிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். மாதம் ஒன்றுக்குப் பதினாயிரக் கணக்கில் வருமானம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். லட்சக் கணக்கில் வருமானம் உள்ளவர்களும் இருக்கிறார்கள்.

அப்படியானால், சராசரியில் மாதம் ஆறு ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களும் இருக்கத்தான் வேண்டும் அல்லவா!

இவர்கள் எல்லாரும் எப்படி உயிர் வாழ்கிறார்கள் என்று கேட்டால், தென் கொரியர்கள் எப்படித் தவளைகளைப் பிடித்துத் தின்று உயிர் வாழ்வதில் கெட்டிக்காரர்களோ, அதுபோல் நம் நாட்டிலும் தினம் ஒரு அணா சோளத்தில் உயிர் வாழக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அதுகூட இல்லாவிட்டால், சப்பாத்திப் பழத்தையும் நாவற் பழத்தையும் சாப்பிட்டுப் பசியைத் தணித்துக் கொண்டு ஜீவித்திருப்பவர்களும் இருக்கிறார்கள்!

ஏன்! சென்னை முதலிய நகரங்களில் மாதம் சுமார் நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் என். ஜி. ஓ. க்கள், உபாத்தியாயர்கள் முதலியோர், அந்தப் பணத்துக்குள் வீட்டு வாடகை கொடுத்து, அரிசி வாங்கி, மளிகை சாமான் வாங்கி, எண்ணெய், நெய் வாங்கி, பால் வாங்கி, காப்பிக் கொட்டை வாங்கி, துணிமணி வாங்கி, பஸ் சார்ஜும் கொடுத்துக் கடனுக்கு வட்டியும் கொடுத்துக் கொண்டு எப்படிக் குடித்தனம் நடத்துகிறார்கள்! இதைவிட அதிசயமான, மர்ம இரகசியமான விஷயம் ஒன்று உண்டா!

அதுமாதிரி காற்றைப் புசித்துக் கொண்டு காலட்சேபம் நடத்தக் கூடிய அதிசய சக்தி வாய்ந்த மக்களும் இந்தியாவில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

ஆகையினாலேதான் மாதம் சராசரி ஆறு ரூபாய் நாலு அணா வருமானத்தில் மக்கள் உயிர் வாழ்ந்து ஜனத் தொகையையும் பெருக்கி வர இயலுகிறது.

இப்படிப் பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு, "இன்னும் பதினறு வருஷத்தில் நம் தேசிய வருமானம் இரட்டிப்பு ஆகலாம்" என்ற நிதி மந்திரியின் ஆசை வார்த்தையைக் கேட்டதும், ஒருவேளை வயிற்றில் புளியைக் கரைத்தது போலிருக்கலாம். (தவறு! தவறு! இப்போது புளி விற்கும் விலையில் குழம்புக்குக் கரைப்பதற்கே புளி கிடைக்க வில்லையே! வயிற்றில் கரைக்க எங்கே கிடைக்கப் போகிறது!)

இந்தியாவில் மிகப் பெரும்பாலான மக்கள் இன்னமும் ஏதோ ஓரளவு உற்சாகத்துடன் வாழ்க்கை நடத்துவதற்குக் காரணம், வருங்கால முன்னேற்றத்தைப் பற்றிய நம்பிக்கையேயாகும்.

நேருஜி அங்கங்கே சுற்றுப் பிரயாணம் செய்யும் போதெல்லாம், பெருந் திரளான மக்கள் கூடுகிறார்கள். நேருஜியும், "இதோ என் அருமை மக்களைப் பார்க்கிறேன். அவர்களுடைய கண்களைப் பார்க்கிறேன். அவர்களுடைய கண்களின் மூலம் அவர்களின் உள்ளங்களைப் பார்க்கிறேன். மக்களின் உள்ளமும் என் உள்ளமும் கலந்து விடுகின்றன!......" என்றெல்லாம் பேசுகிறார்.

மக்கள் உடனே நம்பிக்கை கொள்கிறார்கள். "நம்முடைய தலைவர் நம்முடைய குழி விழுந்த கண்களைப் பார்ப்பதாகச் சொல்கிறாரே! நம்முடைய வயிற்றுப் பசி அவருக்குத் தெரியாமலா இருக்கும்! நம் உள்ளங்களை ஊடுருவிப் பார்ப்பதாகச் சொல்கிறாரே! நம் உள்ளங்களில் குடி கொண்டிருக்கும் ஆதங்கம் அவருக்குத் தெரியாமலா இருக்கும்! ஆகையால், சீக்கிரத்தில் ஏதாவது வழி பிறக்கும்!" என்ற ஆசையுடன் இந்திய மக்கள் நம்பி இருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கையைப் பூர்த்தி செய்யப் பண்டித ஜவாஹர்லால் முதலிய தலைவர்கள் இன்னும் கொஞ்சம் அவசரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

"பதினறு வருஷத்தில் தேசிய வருமானம் இரட்டிப்பு ஆகலாம்" என்று சொல்லுவதுடன் திருப்தி யடைந்து இருந்துவிட மாட்டார்கள் என்று ஆசையுடன் நம்பியிருக்கிறோம்.

வார்த்தைகள் முறிந்தன; வாக்கு பொய்க்காது!

பிரஞ்சுக்காரர்கள் சில தினங்களுக்கு முன் இந்தோ சீனப் போர்முனையில் கோட்டை விட்டது போல், இப்போது பாரிஸ் சமாதான முனையிலும் கோட்டை விட்டு விட்டார்கள்.

பாரிஸ் தலைநகரில், பிரஞ்சு இந்தியப் பிரச்னை சம்பந்தமாக இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் முறியும்படி செய்து விட்டார்கள்.

பிரஞ்சுக்காரர்களின் மண்ணாசையும் பிடிவாதமும் கண்மூடித்தனமும் மேற்படி பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்து விட்டன.

பிரஞ்சு இந்தியப் பிரச்னையைத் தீர்த்து, இந்தியாவுடன் நீடித்த நட்பை நிலைநிறுத்திக் கொள்வதற்குக் கிடைத்த கடைசி சந்தர்ப்பத்தை பிரஞ்சு சர்க்கார் இழந்து விட்டார்கள்.

பிரஞ்சு இந்தியாவில் ஜனநாயக ஆட்சிக்கு ஜன்ம விரோதிகளான குண்டர்களின் ஆட்சிக்கு ஆக்கம் அளித்து விட்டார்கள்.

** ** **

ஜனநாயக அரசாங்கமாகிற ரதத்துக்கு ஜனப் பிரதிநிதிகளான மந்திரிகள்தான் சக்கரங்கள் என்று பிரபல அரசியல் நிபுணர் கூறியுள்ளார். ஜனப்பிரதிநிதிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரர்களான மந்திரிகள் இல்லாவிட்டால் ஜனநாயக சர்க்கார் ரதம் சரிவர ஓடமுடியாது என்பது அவரது சித்தாந்தம்.

ஆனால், சக்கரங்களே இல்லாமல் ரதத்தைச் செலுத்தும் வித்தையில் இன்று பிரஞ்சுக்காரர்கள் தேர்ச்சி பெற்று வருகிறார்கள். பிரஞ்சு இந்திய அரசாங்க ரதத்தைச் செலுத்திவந்த ஆறு மந்திரிகளையும் அவர்கள் விலக்கி விட்டார்கள். அவர்களுடைய ஸ்தானத்தில் இப்போது குண்டர்களும் குடிகாரர்களும் பிரஞ்சு இந்திய சர்க்காருக்கு உதவியாக இருந்து வருகிறார்கள்.

இந்தியாவில் ஜனநாயக தர்மத்துக்கு விரோதமாக உரிமை கொண்டாடும் திட்டுப் பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொடுக்க, ஜனநாயக வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸ் ஒரு சில குண்டர்களின் உதவியை நாடும்படி நேர்ந்திருப்பது உலகில் வேறு எந்த இடத்திலும் கண்டிராத விசித்திரம் அல்லவா!


மேற்படி குண்டர்கள் கொள்ளைக்காரர்களைப் போல் நள்ளிரவிலும் பட்டப்பகலிலும்கூட வந்து ஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களைத் தாக்கிவிட்டு ஓடி விடுகிறார்கள்.

போலித் தலைவர்களைச் சேர்த்துக் கொண்டு ஆர்ப்பாட்டக் கூட்டம் நடத்துகிறார்கள்; அன்னிய ஆட்சிக்கு ஜே கோஷம் போடுகிறார்கள்.

இந்தியாவில் பிரஞ்சுக்காரர்களின் சுண்டைக் காய் சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள குண்டர்களின் திருவிளையாடல்களைப் பிரஞ்சு இந்தியப் போலீஸார் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.

அதாவது வேலியே பயிரை மேய்வது போன்று, ஜனங்களின் உயிருக்கும், சொத்துக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டிய பிரஞ்சு இந்தியப் போலீசார், மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்தை விளைவிக்கும் அராஜகக் கோஷ்டியினருக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள்!

டிராம் வேண்டுமா! டிராம்!!



டிராம் வண்டிப் போக்குவரத்து நிர்வாகத்தை யாராவது ஏற்றுக் கொள்வதாயிருந்தால் ஒப்புவித்துவிட தயாராயிருப்பதாகச் சென்னை சர்க்கார் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆனால் இதுவரை யாரும் அதை ஏற்பதற்கு முன் வரவில்லை:

இத்தகைய போலீஸ் படையின் தலைவர்களான பிரஞ்சு அதிகாரிகள்தான், பிரஞ்சு இந்திய மக்களின் சம்மதத்தைக் கேளாமல், அதாவது சர்வ ஜன வாக்கு எடுக்காமல் பிரஞ்சு இந்தியாவின் எதிர்கால விதியை நிர்ணயிக்க மாட்டோம் என்று ஜனநாயக வேஷம் போடுகிறார்கள்.

எனினும் பிரஞ்சு இந்திய எல்லைப் பிரதேசத்தில் உள்ள இந்தியர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கும் இந்திய போலீசாரிடம் பிரஞ்சு இந்திய போலீஸ் வீரர்கள் தங்களுடைய கைவரிசையைக் காட்டத் தவறுவதில்லை.

சில தினங்களுக்கு முன் இரு சாராருக்கும் புதுச்சேரிக்கு அருகில் நடந்த சண்டையில் உயிர்ச் சேதமும் உண்டாயிற்று.

நிரபராதிகளான தேச பக்தர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் துஷ்டர்களும், அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் போலீசாரும் பிரஞ்சு இந்திய மக்கள் பிறப்புரிமையான சுதந்திரம் பெறுவதற்கு இன்னும் எவ்வளவு காலம்தான் முட்டுக்கட்டையாக இருந்துவர முடியும்!

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களின் எதிர்காலம் பற்றிப் பாரிசில் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டதால், இனி பிரஞ்சு இந்தியாவில் துஷ்டர்களின் திருவிளையாடல்கள் உச்ச நிலையை அடையும் என்பதில் சந்தேகமில்லை. அது போலவே, தேசபக்தர்களின் விடுதலைப் போரும் இறுதிக் கட்டத்தை அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைந்து தீர வேண்டும் என்பதைச் சிறிதும் ஐயம் திரிபுக்கு இடமின்றிப் பிரஞ்சு இந்தியப் பிரதிநிதிகளும் மக்களும் ஏகோபித்துத் தெரிவித்து விட்டார்கள்.

தெளிவாகத் தெரிந்துள்ள அவ் விஷயத்தைக் குறித்து இனி பொதுஜன வாக்கு எடுப்புக்கு அவசியமில்லை என்பதை இந்தியப் பிரதிநிதிகள் பிரஞ்சு சர்க்காருக்கு வற்புறுத்தினார்கள்.

போலீஸ், நீதி, நிதி இலாகாக்களை உடனடியாக இந்திய சர்க்கார் நிர்வாகத்துக்கு மாற்றிட வேண்டும்; பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களை இந்தியாவுடன் நிரந்தரமாக இணைக்கும் விஷயமாகப் பிறகு நிதானமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்று இந்தியப் பிரதிநிதிகள் பிரஞ்சு சர்க்காருக்கு யோசனை கூறினர்.

இந்த யோசனையைப் பிரஞ்சு சர்க்கார் ஏற்றுக் கொண்டிருந்தால், பிரஞ்சு இந்தியப் பிரச்னை சுமுகமாகவும் அமைதியாகவும் தீர்ந்திருக்கும். பிரான்ஸ் – இந்தியா நட்பு பலமடைந்து நீடிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆனால், பிரஞ்சு சர்க்காரோ வெனில், ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் சர்வ ஜன வாக்கு எடுப்பை நடத்த வேண்டும்; இல்லாவிடில் பிரான்ஸ்-இந்தியாவின் கூட்டு நிர்வாகத்தில் பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இருந்து வர வேண்டும் என்று கூறி விட்டார்கள்.

உருப்படாத அந்த யோசனைகளில் எதையும் இந்தியப் பிரதிநிதிகள் ஒத்துக் கொள்ளாததைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிரஞ்சு இந்தியப் பொதுமக்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெளிவாகத் தெரிவித்து விட்ட பின், சர்வ ஜன வாக்கு எடுக்க வேண்டும் என்று கூறுவது அர்த்தமற்ற காரியம்.

பிரஞ்சு இந்தியப் பிரச்னையைப் பல வருஷங்கள் வரை வாதித்துக் குழப்பிக் கொண்டிருப்பதற்கு, ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் சர்வ ஜன வாக்கு எடுப்பை நடத்துவதைக் காட்டிலும் வேறு வழி இருக்க முடியாது.

தவிர, அராஜகம் தாண்டவமாடி வரும் பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் ஜனங்கள் பீதியின்றி வாக்கு எடுப்பில் கலந்து கொள்வது என்பது முற்றிலும் முடியாத காரியம் என்பதை ஏற்கெனவே பிரஞ்சு சர்க்கார் நியமித்த சர்வதேசப் பார்வையாளர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சர்வஜன வாக்கு எடுப்பில் தங்களுக்கு அக்கறை இருப்பதுபோல் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதிகள் நடிப்பது அப் பிரச்னையைக் குட்டிச்சுவராக்கும் காலம் கடத்தும் வித்தையேயன்றி, வேறு எதுவுமில்லை.

அது போலவே, கூட்டு ஆட்சி முறையினால் சிக்கல்களும் அபிப்பிராய பேதமும் வாதப் பிரதிவாதங்களும் அதிகமாகி விடும்.

எனவே, அத்தகைய விபரீதமான நிலைமையை உண்டாக்கக் கூடிய யோசனைகளை இந்தியப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது முற்றிலும் நியாயமே என்பதை ஒப்புக் கொள்ளாதவர் இருக்க முடியாது. பாரிஸ் பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டன என்ற செய்தி கிடைத்தபின் புது டில்லியில் உள்ள பிரஞ்சு ஸ்தானீகர் ஜவாஹர்லால்ஜியைக் கண்டு பேசி யிருப்பதன் பயனாக மறுபடியும் சமரசப் பேச்சு ஆரம்பமாகலாம் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அது எப்படியாயினும், இப்போது பிரஞ்சு இந்தியாவைச் சேர்ந்த பல பகுதிகளில் பொது ஜனப் பிரதிநிதிகளின் ஆட்சி ஏற்பட்டு விட்டது.

படித்தவர்-பாமரர், பணக்காரர் – ஏழை முதலிய யாவரும் ஒருமித்துப் பிரஞ்சு இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலை பெறும் வரையில் ஓயமாட்டோம் என்று உறுதி கொண்டுள்ளனர்.

எனவே, பிரஞ்சு சர்க்கார் தங்களுடைய பிடிவாதத்தைக் கைவிட்டு, உலக தர்மத்துக்கும் ஜனநாயக தத்துவத்துக்கும் தலை வணங்கினாலன்றி, பிரஞ்சு இந்தியாவில் விடுதலை பெறாத மற்றப் பகுதிகளிலும் பொது மக்களின் ஆட்சி ஏற்படுவதற்கு அதிக காலம் ஆகாது.

விண்ணை யிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ

என்ற பாரதியாரின் திருவாக்கு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த இந்தியர்கள் விஷயத்தில் பொய்த்துப் போக வில்லை.

அது போலவே, அந்த மகானின் வாக்கு பிரஞ்சு ஆட்சியில் அல்லலுறும் இந்திய சகோதர சகோதரிகள் விஷயத்திலும் பொய்க்காது என்பதைச் சொல்லவும் வேண்டுமா !

நாஞ்சில் நாட்டில் வீர முழக்கம்

மலையாளிகள் ஆந்திரர்களைத் தூக்கியடித்து விட்டார்கள் ! சென்னைமாநகர் ஆந்திர ராஜ்யத்தைச் சேர வேண்டும் என்பதற்கு ஆந்திரர்கள் கூறிய காரணங்களைக் காட்டிலும், நாஞ்சில் நாடு என்றென்றும் மலையாள ராஜ்யத்தைச் சேர வேண்டும் என்பதற்கு மலையாளிகள் கூறும் காரணம் அதிக அக்கிரமமானதாக இருக்கிறது.

நாஞ்சில் நாட்டில் அதிக நெல் விளைகிறதாம். திருவாங்கூர்—கொச்சி ராஜ்யங்களைச் சேர்ந்த மற்றப் பிரதேசங்களில் உள்ள அரிசிப் பஞ்சத்தைத் தீர்க்க நாஞ்சில் நாடு தங்களுடையதாக இருக்க வேண்டும் என்று மலையாளிகள் கூறுகின்றனர். இந்தக் கூற்றை நியாயம் என்று ஒப்புக் கொள்வதாயின். தமிழ் நாட்டில் அதிகமாக மழை பெய்யும் இடம் இல்லை என்பதற்காக, தமிழர்கள் அதிக மழை பெய்யும் கன்னிக் கோட்டை தங்கள் ராஜ்யத்தைச் சேரவேண்டும் என்று கேட்கலாம் அல்லவா ! யுரேனியம் உற்பத்தியாகும் இடம் தமிழ் நாட்டில் இல்லை என்பதற்காகத் தமிழர்கள் மேற்படி உலோகம் உற்பத்தியாகும் திருவனந்தபுரத்தைத் தமிழ் ராஜ்யத்துடன் சேர்க்க வேண்டும் என்று கூறுவது நியாயமாக இருக்கும் அல்லவா!

பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பதென்ற முறை அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது, அதற்கு முரணாகக் கூறப்படும் எந்தக் காரணத்தையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. மலையாளிகளுக்கு அத்தியாவசியமான நெல் நாஞ்சில் நாட்டில் விளைகிறது என்பதற்காக, தொண்ணூறு சத விகிதத்துக்குமேல் தமிழ் மக்கள் ஜனங்கள் வாழும் பிரதேசங்கள் நிரந்தரமாக மலையாள ராஜ்யத்துடன் சேர்ந்திருக்க வேண்டும் என்று கூறுவது எள்ளளவும் நியாயம் ஆகாது.

சென்ற வாரம் நாகர்கோவிலில் நடந்த திருவாங்கூர் தமிழ்நாடு தமிழ் அரசு மகாநாட்டில், தமிழர்களின் கோரிக்கையை மறுபடியும் வற்புறுத்தி யிருக்கிறார்கள். திருவாங்கூர் - கொச்சி ராஜ்யத்தைச் சேர்ந்த தமிழர்கள் வாழும் பிரதேசங்களான நாஞ்சில் நாட்டைத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தைச் சேர்ந்த தமிழர்கள் பிரச்னை திருப்திகரமாகத் தீராவிட்டால், அந்த ராஜ்யத்தில் உள்ள தமிழ்த் தாலூக்காக்களைத் தமிழ் நாட்டுடன் இணைக்காவிட்டால், தமக்கும் தமது சகாக்களுக்கும் திருவாங்கூர் சிறைகளில் இடம் ஒதுக்கி வைக்கும்படி நேரும் என்று மேற்படி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார் எச்சரித்திருக்கிறார்.

திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட தாலூகாக்களைத் தமிழ் நாட்டுடன் சேர்ப்பது, பாஷாவாரி மாகாணத்தைப் பிரிப்பது போன்ற அவ்வளவு பெரிய கஷ்டமான காரியம் அல்ல. புதிய ஹைகோர்ட் கட்டிடத்துக்கு எங்கு போவது ! புதிய சட்ட சபைக் கட்டிடத்தை எங்கே நிர்மாணிப்பது ! இவை போன்ற பிரச்னைகள் எதுவும் எழ இடமில்லை அல்லவா ! எனவே, நாஞ்சில் நாட்டு மக்களின் வெகு காலத்திய ஏகோபித்த கோரிக்கையை நிறைவேற்றி வைக்க இந்திய சர்க்கார் இனியும் தாமதமின்றி முன்வரவேண்டும் என்று விரும்புகிறோம்.



● சென்னை நகரம், வட, தென்னாற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லாக்களுக்கு: ராஜா பிலிம்ஸ், 11-ஏ, மவுண்ட் ரோடு, சென்னை-2. ● திருச்சி, தஞ்சாவூர்: ராணி பிலிம்ஸ், திருச்சி. ● மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி: எவரெஸ்டு பிக்சர்ஸ், மதுரை. ● மைசூர் ஸ்டேட்: நல்லம் பிக்சர்ஸ், பெங்களூர். ● மலபார், திருவாங்கூர், கொச்சி: ராதா கிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட், எர்ணாகுளம். ● சேலம், கோயமுத்தூர்: ஜெயலட்சுமி பிலிம்ஸ், சேலம். ● F. M. S.: பல்வந்த் சிங் & கம்பெனி, பம்பாய்.

மற்ற விபரங்களுக்கு

M. A. V. பிக்சர்ஸ், C/o சென்டிரல் ஸ்டுடியோஸ், கோயமுத்தூர்

இலங்கையில் வள்ளுவர்

கே. கணேஷ்

பொய்யா மொழியார் பிறந்த வைகாசி அநுட நாள்தான் "வள்ளுவர் நாள்" என்பது தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் திரு கா.பொ. இரத்தினம் அவர்களின் முடிவு. அதன்படி கழகத்தின் சார்பில் நடக்கும் திருக்குறள் மாநாட்டைத் தேயிலைத் தோட்ட வாயிலான நாவலப் பட்டியில் கூடச் செய்தார்.


நாவலப்பட்டி இந்து வாலிபர் சங்கத்தினர் அந்தப் பொறுப்பை ஏற்றனர். செயலாளர் திரு இராசரத்தினம் போன்றவர்களின் முயற்சியில் வைகாசித் திங்கள் 3, 4, 5-ம் நாட்களில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

மாநாடு நடந்த மூன்று நாட்களிலும் சொரிந்த சொல்மாரியிலும் பொழிந்த இசை வெள்ளத்திலும் இலங்கைத் தமிழர்கள் மூழ்கி டி. ஆர். பி. குடியுரிமை, கொத்தலாவலை அனைத்தும் மறந்து வள்ளுவர் உலகத்தை எண்ண வாய்ப்புக் கிடைத்தது. மாநாட்டில் கூடியிருந்த தொழிலாளர்களும்,

திருக்குறளில் பல அத்தியாயங்கள் பாடமாகியுள்ளதாகக் கூறினார்.

மகாராணிக்கு வாழ்த்துக் கூறியபொழுது தமிழ் மொழி ஒதுக்கப்பட்டது முதல் பல நிகழ்ச்சிகளினால் தமிழ் மொழியும் நாட்டு மொழியாகவிருக்கும் நிலை மாறலாம் என்று எண்ணியிருக்கும் தமிழ் மக்களுக்கு ஓர் உறுதி மொழி கூறினார். மந்திரி சபையைச் சேர்ந்த அவர், 1951-ம் ஆண்டே சிங்களமும் தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாக இருக்கும் என அரசாங்கம் தீர்மானித்திருப்பதாவும், அந்நிலையிலிருந்து அரசாங்க நிலை துளிக்கூட மாறவில்லையெனவும் கூறினார். இடையிலே சில தவறுகள் தோன்றியிருப்பினும் அங்ஙனம் மேலும் தோன்றாதவாறு மந்திரி சபையினர் செய்திருப்பதாகவும் இருமொழிகளுமே நாட்டு மொழிகளாகவிருக்குமென அரசாங்கத்தை அறிக்கை விடச் செய்திருப்பதாகவும் கூறினார்.

இலங்கைவாழ் 23 லட்சம் தமிழர்களின்



நாவலப்பட்டி இந்து வாலிபர் சங்க ஆதரவில் மேய் 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தமிழ்மறைக் கழகத்தின் இரண்டாவது திருக்குறள் மகாநாட்டில் பங்குபற்றிய விரிவுரையாளர், செயலாளர், உதவியாளர்கள்.

அப்படிக் இல்லாது அரசியல்வாதிகளுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அழிவுச் செயலன்றி ஆக்க எண்ணத்தை உணர்த்தும் பெரும் ஆயுதம் திருக்குறள். அதுவே வெளியுலகுக்குத் தமிழுலகம் அளிக்கும் பெரும் பரிசாகும் என உணர்த்தினார்.

இலங்கை வானொலி கல்வி ஒலிபரப்பு உதவி அதிகாரியான திருமதி ஞானம் இரத்தினம் 'வான் மறை' என்ற பொருள் பற்றிப் பேசினார்.

காரைக்குடி அழகப்பா கல்லூரிப் பேராசிரியர் திரு ஆ. முத்துசிவன் 'குறள் கண்ட இன்பம்' என்னும் பொருள் குறித்துப்பேசினார்.

நாவலப்பட்டி கதிரேசன் கல்லூரித் தமிழ் மன்றத்து மாணவர்கள் அன்று இரவு 'தமிழ்ச் செல்வம்' என்னும் நாடகத்தைச் சிறப்பாக நடித்துக் காட்டினார்கள்.

இரண்டாம் நாள் தலைமை வகித்த கதிரேசன் கல்லூரி அதிபர் பண்டிதர் திரு க. சபாஆனந்தர் ஈழத்தின் எல்லா மதத்தினரும் சென்று வணங்கும் கதிர்காமம், சிவனொளி பாதம் போல் எல்லாச் சாதி, சமயத்தவரும் தம தமதெனப் போற்றும் தன்மை கொண்டதென விளக்கினார்.

"வாழ்வு தரும் காடு" என்பது குறித்துப் பேசிய ஜனாப் எஸ் எம். கமால்தின் இலங்கை முஸ்லிம்களைச் சிங்களம் படிக்கத் தூண்டுவோரைக் கண்டித்தார். அவர்கள் தாய் மொழி தமிழ் மொழியே என்பதை வன்மையாகக் குறிப்பிட்டார்.

அநுராத புரத்தைச் சேர்ந்த திரு என். ஜகந்நாதாச்சாரி "வள்ளுவன் வகுத்த அரசு" பற்றி நெடுநேரம் பேசினார்.

தென்னிந்திய திருநெல்வேலி (யாழ்ப்பாணத்திலும் ஒரு திருநெல்வேலி இருக்கிறது.) இந்துக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரான வித்துவான் திரு மு. அருணாசலக் கவுண்டர் 'வள்ளுவர் அறநெறி' பற்றி விரிவாகக் கூறி, யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களையும் அவர் வழி வந்த தமிழ்த் தொண்டர்களையும் பாராட்டினார். கதிரேசன் கல்லூரி வித்துவான் திரு மு. கந்தையா அவர்கள் 'வள்ளுவன் கவிநய'த்தை விளக்கிக் காட்டினார். இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திருமதி பரஞ்சோதி இராசமாணிக்கம் இசைவிருந்துடன் முடிவுற்றது.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு வி. செல்வநாயகம் மூன்றும் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். தமிழர் தம் மொழியைப் போற்றாது விட்டதால்தான் தாழ்வுற்று, துயருற நேர்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டினார். ஆயிரக் கணக்கான புலவர்கள் கோடிக் கணக்கான நூல்களைப் பார்த்திருப்பினும் 'திரு' வென்ற அடை மொழி பலவனுக்கும் நூலுக்கும் வைத்துப் போற்றப் பட்ட பெருமை திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்குமே சேரும் என்பதை அழகாகக் கூறினார்.


பண்டிதர் திரு மு. ஆறுமுகம் 'திருக்குறளும் பிற காவியங்களும்' எனப் பேசுகையில் வைகாசிப் பனை (அநுடம்) நாளில் வையமெல்லாம் வள்ளுவர் முழக்கம் கேட்கின்ற மகிழ்ச்சி மிக்க செய்தியைக் கூறினார்.

பல்வேறு பொருளியலாரின் முடிவுகளை ஒப்பிட்டுச் சபையோர் நகைக்க நகைக்கப் பேராசிரியர் முத்து சிவன் 'குறள் நெறி' என்ற தலைப்பில் பேசினார்.

'அறிவு அருளிய அறவோன்' ஆன வள்ளுவப் பெருந்தகைமையாரை திரு ச. சேதுகாவலர் வாயார வாழ்த்தினார்.

செல்வி இராணி ஹியுபேட் இன்னிசை நிகழ்ச்சிக்குப் பின் வெள்ளவத்தை இசைக் கலை மன்ற மாணவிகளான செல்விகள் கமலா சுந்தரம் பிள்ளை, தேவிகாராணி ஹியுபேட் நாட்டியத்துடன் மூன்று நாள் நடந்த மகாநாடு இனிது முடிவுற்றது. மூன்று நாளும் முறையாகக் கேட்டோர் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் வள்ளுவர் விழாவாக இருந்தாற் கூடப் பரவாயில்லை என்ற எண்ணத்துடன் திரும்பினார்கள்.

மன்னார்குடியில் பிரபல உபநயனம்



தஞ்சை ஜில்லா பிரபல மிராசுதார் குன்னியூர் ஸ்ரீ D. நாராயணசாமி அய்யர் அவர்கள் புதல்வன் சிரஞ்சீவி கே. என். சுவாமிநாதனின் உபநயன முகூர்த்தம் 2-6-54 புதன் அன்று மன்னார்குடியில் 'வனிதா வதன'த்தில் சிறப்பாக நடந்தது. இச்சுப வைபவத்தை யொட்டி நான்கு நாட்கள் இன்னிசைக் கச்சேரிகளும், விமான ஊர்வலமும் வெகு விமரிசையாக நடந்தன. தினசரி பத்தாயிரம் ஏழைகளுக்கு அன்னதானமும் ஐந்நூறு ஏழைகளுக்கு வஸ்திரதானமும் வழங்கப்பட்டன. முகூர்த்தத்துக்கு விஜயம் செய்து சிறுவனை ஆசிர்வதித்த எல்லாப் பெரியோர்களுக்கும் பிரமுகர்களுக்கும் ஸ்ரீ நாராயணசாமி அய்யர் அவர்களும் குன்னியூர் எஸ். சாம்பசிவய்யர் அவர்களும் தங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.






உழைப்பினால் உயர்ந்தவர்

சி. அ. மகாலிங்கம்

நாற்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டணா தினக் கூலிக்குப் பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் வேலை கற்றுக் கொள்ளும் சாதாரணத் தொழிலாளியாகப் போய் அமர்ந்தார் ஸ்ரீ முனுசாமிப் பிள்ளை. பிறகு அதில் அவர் கைதேர்ந்த வேலைக்காரரானார். அவரது கையெழுத்தைக் கண்ட அதிகாரிகள் அன்றே அவரைக் குமாஸ்தாவாக வேலை செய்யும்படி செய்தனர். இதனால் "ரைட்டர் முனுசாமி" என்ற பெயரும் அவருக்கு வழங்கி வந்தது. பல ஆண்டுகள் அவர் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தார். அதற்குப் பிறகு தமது சுயமுயற்சியால் 'பிட்டர்' வேலைக்கு வந்து சூபர்வைஸராகிப் பின்னர் சார்ஜ்மென்னாக வேலை பார்த்து 1952-ல் ஓய்வு பெற்றார்.

1933-ல் செம்பியத்தில் உள்ள அவர்கள் பேட்டையில் முதல் முதலாக "சந்திரா ஸ்போர்ட்ஸ் கிளப்" என்ற ஒரு விளையாட்டுச் சங்கத்தை நிறுவினார். தற்போது அதுவே ஹரிஜன இளைஞர் மன்றம் என்ற பெயர் தாங்கி நிற்கிறது.

அந்த மன்றம் காலம் முழுதும் காங்கிரஸ் மகாசபையின் திட்டங்களைப் பரப்புவதிலும், காந்தியடிகள் ஹரிஜன மக்களுக்குச் செய்த நன்மைகளை விளக்கிப் பிரசாரம் செய்வதிலும் ஹரிஜனங்களையும் மற்றவர்களையும் தேசப் பற்றுள்ளவர்களாக்குவதுமே அதன் நோக்கமாகக் கொண்டு வேலை செய்து வருகின்றது. இந்த உண்மையைச் சென்னையிலுள்ள பல தேசியத் தலைவர்கள் அறிவார்கள். அதன் ஆரம்பத் தலைவரும் அவரே; இன்றும் அதற்கு அவரே தலைவரென்றால் கடந்த இருபத்தோரு ஆண்டுகளாக அவர் அந்தச் சங்கம் நிலை பெற்றிருக்கச் செய்த தன்னலமற்ற தொண்டையே அது எடுத்துக் காட்டுகிறது.



புதிய மேயர் ஸ்ரீ முனிசாமிப் பிள்ளை பெரம்பூர் சங்கீத சபையில் நடந்த ஸ்ரீ அரியக்குடி இராமானுஜய்யங்கார் கச்சேரியை ஆர்வத்துடன் கேட்கிறார்.

அச்சங்க வேலைகளால் பலர் இன்று பொது ஜன சேவையில் ஆர்வம் உள்ளவர்களாக இருந்து அரும் பணியாற்றி வருகின்றனர். அதோடு எங்கள் பேட்டையும் தேசிய மயமாகவே விளங்கி வருகிறது. மேயர் கனம் முனுசாமிப் பிள்ளையே இவைகள் அனைத்துக்கும் முக்கிய காரணமென்பதில் ஐயமில்லை.

திரு ஆர். முனுசாமிப் பிள்ளை அவர்கள் ரயில்வே தொழிற் சங்க ஆரம்ப காலத்திலேயே அதாவது 1919-ம் வருஷத்துக்குப் பிறகு அதில் சேர்ந்து பணியாற்றி வந்தார். அதன் மகா நாடுகளில் முக்கிய பங்கு பற்றித் தொண்டாற்றியுள்ளார். தொழிற் சங்கத்தின் ஆதரவில் நடந்த பல கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி அவைகளைச் சிறப்பாக நடத்தியும் உள்ளார். கிராமப் பொது விஷயங்களில் அவருக்கு நிறைய அனுபவம் உண்டு. தேசிய வேலைகளிலே அவருக்கு மிகுந்த அக்கறையுண்டு. வெறும் மேடைப் பேச்சாளராகவே காலங்கடத்தாமல் எடுத்த காரியத்தையும் முடித்து வைக்கும் ஆற்றல் படைத்தவர். படாடோபமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து வருபவர். தன்னடக்கமும் நிதான புத்தியும் உடையவர்.

தமிழ் வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைக்கவே தோன்றியவரென அறிஞர் பலர் போற்றிய வழக்கறிஞர் திருவாளர் டி. என். சேஷாசல ஐயர் அவர்களிடமும் சித்தூர் ஜில்லாவில் தமிழ் நாட்டின் எல்லைப் போராட்டத்தில் மிகத் தீவிரமாகப் பங்கு கொண்ட வித்துவான் திருவாளர் குப்புசாமி முதலியார் என்ற மங்களக் கிழார் அவர்களிடமும் திரு எஸ். சோமசுந்தர செட்டியார் அவர்களிடமும் முறையாகத் தமிழ் ஆங்கிலப் பாடங்களைப் படித்தறிந்தார். அதன் காரணமாகவே அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் பயிற்சியுடையவராகிப் பிற்காலத்தில் விருத்தம், அகவற்பா, சிந்து முதலிய சந்தங்களில் இறைவன் மீதும், திருமணக் காலங்களில் மணமக்களை வாழ்த்தி

யும் யாப்பிலக்கணத்துக்கு ஏற்பப் பாட்டுகள் பல அமைத்திருக்கிறார்.

அவரது பாக்கள் இனிய எளிய நடையையும் சிறந்த கருத்துக்களையும் பொருத்தமான சொற்றொடர்களையும் தாங்கி நிற்கும் என்பதை அவரது பாட்டுக்களைப் படித்தோர் நன்கு அறிவார்கள்.

ஆங்கிலத்திலும் அவருக்கு அவசியமான அளவு ஞானமுண்டு.

இது வரையில் மிகப் பெரிய செல்வவந்தர்களுக்கே சொந்தச் சொத்தாக அமைந்த இம்மேயர் பதவி தன்னடக்கமும் நிதான புத்தியுமுடைய ஒரு சாதாரணத் தொழிலாளிக்குக் கிடைத்திருக்கிறதென்றால் தொழிலாளியாகப் பிறந்த யாரும் இதைக் குறித்து குதூகலம் அடையாமலிருக்க முடியாது.

மேயர் கனம் முனுசாமிப் பிள்ளையைப் பற்றி நினைக்கும் போதும் அவரைப் பாராட்டும் போதும் தன்னைத் தானே பாராட்டிக் கொள்வதாக நினைத்து மகிழ்வார்கள் ஒவ்வொரு தொழிலாளியும்.

அநுபவ ஞானமும் தாய்மொழி அறிவும் நல்லொழுக்கமும் தியாக புத்தியும் உள்ள யாரும் எந்தப் பதவியும் வகிக்கலாம் என்ற நம்பிக்கையை ஏழை எளியவர்களிடத்தும் உண்டாக்கி வைக்கும் சூழ்நிலையையே கனம் ஆர். முனுசாமிப் பிள்ளை அவர்கள் பெற்ற மேயர் பதவி ஞாபகமூட்டுகிறது.

நமது இலங்கைக் கடிதம்

இலங்கைக்குத் தலையிடி!

ரஜனி

கொழும்பு ஜூன் மீ 5உ

இந்திய அரசாங்கம் இவ் வாரத்திலிருந்து அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் விஸா சட்டங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு புதிய பெரிய தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. இந்திய அரசாங்க நடவடிக்கையின் இலட்சியம் இலங்கையிலுள்ள பத்து லட்சம் இந்தியர்களிலே தோட்டத் தொழிலாளர்களான எட்டு லட்சம் இந்தியர் வம்சாவளியினர்களை எப்படியும் இலங்கை சர்க்காரின் தலையில் கட்டி விட வேண்டுமென்பதே யாகும்.

இந்தத் தொழிலாளர் இதுவரையில் தோட்ட முதலாளிகள் வழங்கிய பற்றுச் சீட்டுகளை பாஸ்போர்ட் போல உபயோகித்துக் கொண்டு இந்தியாவுக்குப் போய் வந்தார்கள். ஜூன் முதல் தேதியிலிருந்து பற்றுச் சீட்டுகளை பாஸ்போர்ட்டுகளாக அங்கீகரித்து வந்ததை இந்திய அரசாங்கம் ரத்துச் செய்து விட்டது. இதன் விளைவாக தோட்டத் தொழிலாளர் இனி இந்தியாவுக்குப் போவதானால் ஒன்று இந்தியப் பிரஜைகளென்று சொல்லிக் கொண்டு இந்தியா பாஸ்போர்ட் வாங்கி இந்தியாவுக்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்லுகிறவர்கள் இலங்கைக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் இந்தியப் பிரஜைகள் வெளி நாடுகளில் உரிமைகளில்லாமல் கூலி வேலை செய்வதை இந்திய சர்க்கார் அனுமதிக்க முடியாதென்றும் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக இந்தத் தொழிலாளருக்கு இலங்கை அரசாங்கம் தன்னுடைய பொறுப்பில் பிரயாண தஸ்தாவேஜுகளை வழங்குமானால் இந்தத் தொழிலாளர் இந்தியர்களல்ல வென்றும் அவர்கள் இலங்கையின் பொறுப்பென்றும் அடிக்கடி கோஷ்டி இடித்துக் காட்டி வருவதை ஒப்புக் கொள்ளுவதா யிருக்கும். இதை ஒப்புக் கொண்டால் இன்றைக்கில்லா விடினும் சீக்கிரத்தில் எட்டு லட்சம் தொழிலாளருக்கும் பிரஜாவுரிமை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்படும்.

இந்தியத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் இந்திய அரசாங்கத்தின் புதிய உத்தரவை அனுசரித்து இந்தியாவுக்குப் போகாமல் இலங்கையிலேயே நிலைத்திருந்து போராடத் தயாரா யிருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு காலமும் அடிக்கடி இந்தியா போய் வந்தவர்களைத் திடீரென்று தடை செய்து தோட்டங்களிலேயே அடைத்து வைத்தால் அவர்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்பட்டுத் தோட்டத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்படுமென்று தோட்ட முதலாளிகள் அஞ்சுகின்றனர். நாட்டின் பொருளாதார நிலைமை சீர்குலையாமலிருக்க வேண்டுமானால் தோட்டத் தொழிலாளருக்கு இலங்கை அரசாங்கம் தனது பொறுப்பில் பிரயாண தஸ்தாவேஜுகளை வழங்க வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்கிடையில் தொழிலாளர் போக்கு வரத்துக்காக ஏற்பட்ட மண்டபம், தட்டப்பாறை முகாம்களையும், திருச்சி, துறையூர் முதலான இடங்களிலிருக்கும் இலங்கை தொழில் கமிஷனர் காரியாலயங்களையும் இந்திய பூமியிலிருந்து அப்புறப்படுத்தி விட வேண்டுமென்றும் இந்தியா கோரியிருப்பது இலங்கைக்குப் பெரிய பண்டை பிடியைக் கொடுத்திருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து எப்படித் தலை தப்புவதென்பதைக் குறித்துத் திருச்சியிலிருக்கும் இலங்கை இமிகிரேஷன் கமிஷனருடன் கலந்து பேசத் தொழில் மந்திரி மேஜர் ஜயவர்த்தனா புறப்பட்டுப் போயிருக்கிறார்.

நிற்க, இந்திய வம்சாவளியினர்களின் பிரஜாவுரிமைக்குக் கிளர்ச்சி செய்பவர்களை மிரட்டி வாயடைக்க, அரசாங்கத்துக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யும் பதிவுப் பிரஜைகளின் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யச் சட்டமியற்றப் போவதாய்ப் பிரதம மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலை பூச்சாண்டி காட்டியிருக்கிறார். இதற்கு இந்திய ஹைகமிஷனர் சரியானபடி பதில் கொடுத்திருப்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். பதிவுப் பிரஜைகளை இலங்கை அரசாங்கம் பிரஜைகளல்லவென்று அறிவித்தால் அந்த நபர்கள் முன்பிருந்ததைப் போல பழையபடி இந்தியப் பிரஜைகளாகிவிட மாட்டார்கள். எப்பொழுது ஒருவர் இந்தியப் பிரஜாவுரிமையைத் துறந்து இலங்கைப் பிரஜையானாரோ அத்துடன் அவருக்கும் இந்தியா

வுக்குமுள்ள தொடர்பு நீங்கி விட்டது. இந்திய வம்சாவளியினர் அனைவரையும் இந்தியப் பிரஜைகள் என்று கருதினால், இலங்கையில் உள்ள சிங்களவர்கள் உள்பட 80 லட்சம் ஜனங்களும் இந்தியப் பிரஜைகளாகி விடுவர். சிங்களவர்களும் ஒரு காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த இந்திய வம்சாவளியினர்கள் தானே! இவ்விதம் ஸ்ரீ தேசாய் கூறினார். இதன் உண்மையைப் பிரதம மந்திரி கொத்தலாவலையும் நன்கு உணர்ந்திருப்பதாகவே கூறவேண்டும். ஏனெனில் நமது நிருபர் இவ்வாரம் பிரதமரைப் பேட்டி கண்டு பேசிய பொழுது "உங்களுடைய இலங்கைப் பிரஜாவுரிமையை நான் ரத்துச் செய்தாலும் அது உங்களைப் பாதிக்காது. ஏனெனில் உங்களை இலங்கையிலிருந்து வெளியில் அனுப்ப முடியாதல்லவா!" என்றார் பிரதமர்.

இதற்கிடையில் இலங்கையில் இந்தியப் பிரஜைகளாயிருப்பவர்களை இந்திய மத்திய அரசாங்கம் காலைவாரி விட்டு விட்டது. இலங்கைப் பிரஜாவுரிமை பெறாத இந்தியர்கள் இந்நாட்டில் நிரந்தரமாகத் தங்கியிருந்து தொழில் நடத்த அனுமதிக்கப்படுவார்களென்று இந்நாட்டின் முதலாவது பிரதம மந்திரி காலஞ் சென்ற டி. எஸ். சேனநாயகா உறுதிமொழி யளித்திருந்தார். இந்த உறுதி மொழியை வலியுறுத்த இந்திய அரசாங்கம் இப்பொழுது தயாரில்லையென்று இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ தேசாய் அறிவித்திருப்பது பலருக்கும் கவலையைக் கொடுத்திருக்கிறது. இந்திய அரசாங்கம் இலங்கையிலுள்ள இந்தியர்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியா விட்டாலும் வாயை மூடிக் கொண்டாவது இருக்கப்படாதா என்று கேட்கின்றனர். இந்தியப் பிரஜைகளாயிருப்பவர்கள் எப்படியும் இந்தியாவுக்குத் திரும்பிப் போக வேண்டியவர்கள் தானென்பதைப் பிரதமர் கொத்தலாவலையும் ஒரு பேட்டியில் இவ்வாரம் அறிவித்திருப்பது இந்தியப் பிரஜைகளின் கவலையை அதிகரித்திருக்கிறது.

இந்த மாதிரியான சூழ் நிலையிலேயே ஸ்ரீ தேசாய் நேருஜியுடன் கலந்து பேசுவதற்காகப் புதுடில்லிக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

அவர் இலங்கைக்குத் திரும்பிய பிறகு தான் அடுத்தபடியாக இலங்கை அரசாங்கம் கொண்டு வர உத்தேசித்திருக்கும் பல சட்டங்களைக் குறித்தும் இந்தியாவின் அபிப்பிராயங்களை உத்தியோக பூர்வமாக அவர் வெளியிடுவார்.

ஸ்ரீ தேசாயைத் திருப்பியழைத்து அவருடைய ஸ்தானத்தில் ஒரு தமிழரை நியமிக்க வேண்டுமென சென்னைப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை இந்தியரிடையே ஆதரவில்லை. ஒரு காலத்தில் ஸ்ரீ தேசாய் திரும்பிப் போக வேண்டுமென எல்லோரும் விரும்பியது உண்மையென்றாலும் இப்பொழுது வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்ட படியால் "ஸ்ரீ தேசாய் அவரது விபரீத ராஜ தந்திரத்தின் பலனை நேரில் பார்த்து விட்டுத் தான் இலங்கையை விட்டுப் போக வேண்டும்" என்று பொதுவாக எல்லோரும் கருதுகின்றனர்.

அணங்கும் அணிலும்

அந்த நங்கை இடையில் குடத்துடனும், கண்களில் வியப்புத் தோன்றவும் நிற்கும் அழகே தனியாக இருக்கிறது. பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றுகிறது.

ஆனால் அவளோ அந்த அணிற் பிள்ளையையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்குத் தன் பாட்டி சொன்ன கதை நினைவுக்கு வந்து விட்டது போலும். ஸ்ரீராமன் சேது அணை கட்டியபோது, அணில் ராமனுக்குத் தன்னாலான உதவி செய்ய வேண்டும் என்று எண்ணி, மணலில் போய்ப் புரளுவதும் அணை கட்டுமிடத்துக்கு வந்து தன் உடலைச் சிலுப்பி, மணலை உதிர்ப்பதுவுமாக இருந்ததாம். ராமனுக்கு அணிலின் காரியம் புரியவில்லை. "நீ என்ன செய்கிறாய்! ஏன் இப்படிக் குறுக்கும் நெடுக்குமாகப் போய்விட்டு வருகிறாய்!" என்று கேட்டானாம். "என்னாலான உதவி செய்கிறேன்" என்றதாம். உடனே ராமனுடைய நெஞ்சம் தழதழத்தது. தன் மூன்று விரல்களால் அந்த அணிலைத் தடவிக் கொடுத்தானாம். அந்த மூன்று விரலின் வடுவே இன்றும் அணிலின் முதுகில் கிடப்பதாகத் தன் பாட்டி சொன்னதை ஒப்பிட்டுப் பார்க்கிறாளா!

அழகிய அணிலின் துரு துருப்பான பார்வையும், அந்தக் கிளையில் மேலும் கீழும் சுறு சுறுப்பாக ஓடி ஆடித் திரியும் காட்சியும், முன் கால்களால் தன் ஆகாரமாகிய பழம், காய் முதலியவற்றைப் பற்றிக் கொறிக்கும் காட்சியும் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் கூடச் சலிக்காது.

ஆம், வயது வந்து வாழ்க்கை சலித்து விட்டவர்களுக்கே சலிக்காது என்றால் எதிலுமே சுவாரஸ்யமும் சுவையும் காணும் பருவத்திலிருக்கும் அந் நங்கை, தண்ணீர் முகர்ந்து செல்லக் குளக் கரைக்கு வந்ததையும், இடுப்பில் குடம் இருப்பதையும் மறந்து சிலைபோல் வைத்த கண் வாங்காமல் அணிற் பிள்ளையைப் பார்த்த வண்ணம் நிற்பதில் என்ன அதிசயம் இருக்கிறது!

* * * *

இந்தக் காட்சியை நமது சித்திரக்காரர் மணியம் இவ்வார அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார். இந்தச் சித்திரத்தைப் பார்த்தபோது கவி மணியின் பின் வரும் வரிகள் நினைவுக்கு வந்தன:

அலகில் சோதியான—ஈசன்
அருளினாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும்—கவிக்கு
உரிய பொருளாமையா!

கவிக்கு உரிய பொருள் சித்திரத்துக்கும் உரிய பொருள்தானே! ஏன், எந்தக் கலைக்குமே பொருத்தமாக இருக்கக் கூடுமல்லவா! இதுவும் ஓர் அரிய உண்மையே அன்றோ!

நான் முழுவதும் அவர்கள் எல்லோருக்கும்



அதிகப்படியான சக்தி தேவை



க்ளூகோவிடா

உடலூக்கத்தரும் உணவு

காரன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 994, பம்பாய் 1 தபால் பெட்டி நெ. 982, கல்கத்தா 1

6 திரிசங்கு

விசுவாமித்திரர் தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் சூரிய குல அரசன் திரிசங்கு என்பவன் பெரும் புகழுடன் அனேக ஆண்டுகள் அரசு புரிந்து தேகத்துடன் சுவர்க்கம் போக வேண்டும் என்று ஆசை கொண்டான். அதற்காக வசிஷ்டரிடம் சென்றான்.

வசிஷ்டர் அவனுடைய குல குரு. அவர், "உம்மால் இது இயலாது. வேண்டாம். இந்த யோசனையை விட்டு விடுவீராக" என்றார். திரிசங்குவுக்கு இது பிடிக்க வில்லை. வசிஷ்டருடைய புத்திரர்களிடம் போய், "உங்களுடைய தகப்பனார், என்னுடைய குருவானவர், முடியாது என்று சொல்லி விட்ட இந்த யாகத்தை நீங்கள் நடத்தித் தாருங்கள். என்னுடைய குரு என்னைக் கை விட்டு விட்டார். நீங்கள் என் வேள்வியை நடத்தித் தர வேண்டும்" என்றான்.

வசிஷ்ட குமாரர்களுக்கு மிகுந்த கோபம் வந்தது.

"ஏன் உமக்கு இந்தத் துர்ப்புத்தி பிடித்தது? உம்முடைய குருவும் எங்கள் பிதாவும் சொன்ன சொல்லுக்குக் கட்டுப் படாமல் எங்களிடம் வந்திருக்கிறீர். திரும்பிப் போவீராக" என்றார்கள். திரிசங்கு அதைக் கேட்காமல், மீண்டும் மீண்டும் வற்புறுத்திக்கொண்டே நின்றான்.

"மூர்க்க அரசனே! எங்கள் பிதாவை அவமதிக்க எங்களை நீர் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறீர்; திரும்பிப் போவீராக!" என்றார்கள்.

"உங்களால் முடியாவிட்டால் வேறு யாரையாவது நான் தேடியடைந்து என் காரியத்தை முடித்தே தீருவேன்" என்று திரிசங்கு அவர்களுக்குக் கோபம் அதிகரிக்கும் முறையில் சொன்னான்.

அவர்கள் அதைப் பொறுக்காமல் அரசனை, "நீ சண்டாளன்" என்று சபித்து விட்டு, அவனை அனுப்பி விட்டார்கள்.

* * *

அன்றிரவு தூங்கினவன் காலையில், தன் அழகிய உருவம் மாறிப் போய், காந்தியும் நிறமும் இழந்து, அவலட்சண வடிவத்தோடு, பீதாம்பரத்துக்குப் பதில் அழுக்குத் துணியோடு எழுந்தான். அவன் அணிந்திருந்த ஆபரணங்கள் எல்லாம் மாறி விட்டன. மந்திரிகளும் பரிவாரமும் நகரத்து ஜனங்களும் அரசனுடைய புது உருவத்தைப் பார்த்துத் தூர விலகி ஓடினார்கள். எல்லாரும் அவனைக் கண்டு வெறுத்தார்கள். வெட்கம் மேலிட்டு அரசன் தன்னந் தனியாக ஊரைவிட்டு விலகி ஊண் உறக்கமின்றி இரவும் பகலும் திரிந்தான்.

சண்டாள வேஷத்தோடு திரிசங்கு ராஜன் தபோதனராகிய விசுவாமித்திரர் ஆசிரமத்துக்குச் சென்றான். அவர் இவனைக் கண்டதும் கருணை மேலிட்டு



"நீ திரிசங்கு ராஜா அல்லவா? ஏன் இந்த வடிவம் அடைந்தாய்? யாருடைய சாபம்?" என்று கேட்டார்.

திரிசங்கு நடந்த விஷயம் எல்லாம் சொல்லி, "நான் என் ராஜ்யத்தைத் தருமம் தவருமல் பரிபாலித்தேன். சத்திய வாழ்க்கை நடத்தினேன். நான் ஒரு பாபமும் செய்ததில்லை. எந்த விதத்திலும் யாருக்கும் தீங்கு செய்தது கிடையாது. என் குருவும் அவருடைய குமாரர்களும் என்னைக் கை விட்டு, என்னை இந்த நிலை அடையச் சாபமிட்டு விட்டார்கள். நீர்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறி அவர் காலில் விழுந்தான்.



சாபத்தின் பயனுகச் சண்டாளனுகி விட்ட அரசனிடம் விசுவாமித்திரருக்கு அனுதாபம் பொங்கி வந்தது. விசுவாமித்திர ருடைய கஷ்டம் இதுவே. அவருடைய கோபம், இரக்கம், அன்பு முதலிய உணர்ச்சி வேகங்கள் அதிக தீவிரம்.

அவனைப் பார்த்து மதுரமான மொழியில் சொன்னுர்: "அப்பனே! இக்ஷ்வாகு குலத் தரசனே! உனக்கு நல்வரவு. உன் தருமவாழ்க்கையைப் பற்றி நான் நன்ருக அறிந்தவன். உனக்கு நான் அபயம் தந்தேன். ரிஷிகள் உள்பட எல்லோரையும் அழைத்து, நீ நடத்த வேண்டும் என்று விரும்பிய வேள்வியை நான் நடத்தித் தருவேன். குருவின் கோபத்தால் நீ அடைந்த இந்தச் சண்டாள வடிவத்தோடேயே நீ சுவர்க்கம் சேருவாய். இது நிச்சயம்" என்று வாக்களித்து விட்டார்.

* * *

யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, "உன் குருவால் உனக்கு நேர்ந்த இந்தச் சண்டாள தேகத்தோடே நீ சுவர்க்கம் அடைவாய். எப்போது நீ கௌசிகனிடம் சரண மடைந்தாயோ அப்போதே நீ கோரிய எண்ணம் நிறைவேறினதாக வைத்துக் கொள்" என்று திரிசங்கு மகாராஜனுக்கு மறுபடியும் தைரியம் சொன்னுர்.

சொல்லிவிட்டுத் தம் சீடர்களுக்கு உத்தரவிட்டார்: "நீங்கள் போய் எல்லா ரிஷிகளையும் சிஷ்யர்களோடு வேள்விக்கு வரும்படி நான் அழைத்ததாகச் சொல்லுங்கள்" என்ருர்.

சீடர்களும் அவ்விதமே எல்லாப் பெரியோர்களிடமும் சென்று விசுவாமித்திரருடைய அழைப்பைத் தெரிவித்தார்கள். அநேகமாக எல்லாரும் வருவதற்குச் சம்மதித்தார்கள். மகா தபஸ்வியான விசுவாமித்திரருடைய அழைப்பை நிராகரிக்க அவர்களுக்குத் தைரியமில்லை.

ஆனுல் வசிஷ்டரின் குமாரர்களை அழைத்தபோது அவர்கள், "நாங்கள் வர மாட்டோம் என்று ரிஷியிடம் சொல்லுங்கள். ரிஷி எவ்வளவு தபஸ்வியாயிருந்தாலும் க்ஷத்திரியரான ஒருவர் எப்படி இவ்விதமான மந்திரச் சடங்குகளை நடத்தக் கூடும்? அதிலும் சண்டாளனுக்காக எப்படி யாகம் நடத்தலாம்?" என்று ஆட்சேபித்து மறுத்து விட்டார்கள்.

இதைக் கேட்டதும் விசுவாமித்திர ரிஷி கடுங்கோபங்கொண்டு, "நான் செய்யும் காரியத்தில் ஒரு தவறுமில்லை. கர்வங் கொண்ட இந்த வசிஷ்ட குமாரர்கள் இறந்து சாம்பலாகக் கடவார்கள். அவர்கள் ஏழு ஜன்மம் வரையில் நாய் தின்னும் ஜாதியாகக் கடவார்கள்" என்று சபித்து விட்டு, நிச்சயித்தபடி யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

கூடியிருந்த பெரியோர்களுக்கெல்லாம் காரியத்தை எடுத்துச் சொன்னுர். "மகா தர்மவான், சத்யவான், இக்ஷ்வாகு குலத்தரசன், இவன் சரீரத்தோடு சுவர்க்கம் செல்ல வேண்டுமென்று இந்த வேள்வியைச் செய்ய நான் நிச்ச

யித்திருக்கிறேன். நீங்கள் அனைவரும் கலந்து கொண்டு காரியத்தை நிறை வேற்றித் தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

'இவர் மகா பலம் பெற்ற தபஸ்வி. இவருடைய கோபத்தை நாம் தாங்க முடியாது' என்று பயந்து எல்லாரும் வேள்வியில் கலந்து கொண்டார்கள். எல்லாச்சடங்குகளையும் கௌசிகருடைய தலைமையில் கிரமப்படி நடத்தினார்கள்.

வேள்வியின் முடிவில் தேவர்களை அழைத்து "அவியைக் கொள்ளுங்கள்" என்று சொல்லவேண்டிய காலம் வந்தது. அப்படியே விசுவாமித்திரர் அழைத்தார். ஆனால் யாரும் வரவில்லை! வேள்வி வீணாயிற்று. அழைப்புக்குப் பயந்து வந்த ரிஷிகள் மனத்துக்குள் விசுவாமித்திரரைப் பரிகசித்தார்கள்.

விசுவாமித்திரருக்குக் கடுங் கோபம் வந்து, தன் கையில் வைத்திருந்த நெய்க் கரண்டியை உயரத் தூக்கித் திரிசங்கு ராஜனை நோக்கி, "என் தவத்தின் வலிமையைப் பார்ப்பாய், திரிசங்குவே! என் முயற்சியும் தவமும் சக்தி அவ்வளவும் உனக்குப் பயன்படுவதாக. என் தவத்துக்குச் சிறிதளவேனும் சக்தி உண்டாயின் நீ உன் சரீரத்துடன் சுவர்க்கம் ஏறுவாய்! தேவர்கள் அவி எடுத்துக் கொள்ளாதது பற்றி எனக்குக் கவலையில்லை. அரசனே, செல் மேலே!" என்றார்.

பாரதி வாக்கு—2

தமிழா! தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வந்து விட்டது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வம் கண்ட கவிகள், அற்புதமான சங்கீதவித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரிக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு, நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

அப்போது அந்த அற்புதம் நடந்தது. அங்கே கூடியிருந்த ரிஷிகள், பிராமணர்கள் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கச் சண்டாளனான ராஜா அப்படியே ஆகாயத்தில் கிளம்பினான். விசுவாமித்திரருடைய தவ வலிமையை அப்போது உலகம் கண்டது.

* *

திரிசங்கு சுவர்க்கத்தை அடைந்தான். உடனே இந்திரன் பார்த்தான்.





பெரம்பூர் சங்கீத சபையின் ஆதரவில் ஸ்ரீ தியாகப் பிரம்ம உத்சவம் மே மீ 14-ல அன்று ஆரம்பித்து அமோகமாக நடை பெற்று வந்து மே மீ 29-ந் தேதியோடு பூர்த்தியாயிற்று. மேற்படி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த பல வித்வான்களை நேயர்கள் சென்ற கல்கி இதழில் பார்த்திருப்பார்கள். இந்த விழாவில் கலந்து கொண்டு மேலும் சிறப்பிக்கச் செய்த மாயவரம் ஸ்ரீ கிருஷ்ணய்யர், ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகர், புல்லாங்குழல் ஸ்ரீ மகாலிங்கம், ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம் ஆகியவர்களையும் (பக்கவாத்திய வித்வான்களுடன்) படத்தில் காணலாம்.

''சண்டாள சரீரத்துடன் எவன் இங்கே வருகிறான்? குருவினிடம் சாபம் பெற்ற மூடனே, போ!'' என்று கீழே தள்ளி விட்டான். சுவர்க்கத்திலிருந்து திரிசங்கு கதறிக் கொண்டு தலைகீழாக விழுந்தான். கீழே விழவிழ ''ஐயோ, என்னைக் காப்பாற்றுவீர்! காப்பாற்றுவீர்!'' என்று திரிசங்கு கதறினான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த விசுவாமித்திரர் தம் தபோ பலத்தை தேவர்கள் இப்படியா இகழ்கிறார்கள் என்று கோபாவேசங் கொண்டு, ''நில்! நில்!'' என்று தைரியமாகச் சொல்லி அத்தனை ரிஷிகளுக்கு மிடையில் ஒரு புது சதுர்முகப் பிரம்மாவைப் போல் ஜொலித்தார். தலைகீழாக விழுந்த திரிசங்கு விசுவாமித்திரர் 'நில்' என்றதும் நடு ஆகாயத்தில் ஒரு நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டு அப்படியே நின்றான். அந்தக் கணமே ஆகாயத்தில் திரிசங்கு நின்ற தென் திசையில் புதிய துருவம், புதிய சப்தரிஷிகள் இன்னும் பல நட்சத்திரங்களையும் சிருஷ்டித்து நிறைத்து விட்டார்.

''புது இந்திரனையும் உண்டாக்கி நிலை பெறச் செய்வேன். புது தேவர்களையும் உண்டாக்குவேன்'' என்று சொல்லி சொன்னபடியே செய்ய ஆயத்தமானார்.

• • •

''இது என்ன! விபரீதமாக முடியும் போலிருக்கிறதே'' என்று எண்ணித் தேவர்களும் ரிஷிகளும், விசுவாமித்திரரிடம் வந்தார்கள்.

விசுவாமித்திரரிடம் நயமாகப் பேசி, ''இந்தக் காரியம் வேண்டாம், திரிசங்கு முதலிய எல்லா நட்சத்திரங்களும் தாங்கள் நிர்ணயித்த படியே சாசுவதமாக இருக்கட்டும். தங்களுடைய புகழுக்குக் குறைவு வேண்டாம். கோபத்தைத் தணித்துக் கொண்டு எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி விசுவாமித்திரரை ஒருவாறு சமாதானப் படுத்தி விட்டுத் திரும்பினார்கள். அதுவரையில் விசுவாமித்திரர் செய்த தவம் இவ்வாறு செலவழிந்து போய் விட்டது.



பாலுவின் அண்ணி

ஜி. கோமளா

"மோதிரம் எங்கே!"

"............"

"என்ன! இதற்குப் பதில் சொல்லப் போகிறாயா, என்ன!" என்று மிரட்டினான்.

"வந்து......ம்......வந்து."

"என்ன வந்து, என்ன போய்! மோதிரத்தை என்ன செய்தாய், சீக்கிரம் சொல்!" என்று கர்ஜித்தான் ராமதாஸ்.

"நான் அப்புறம் சொல்கிறேனே.........இப்பொழுது......விடுங்கள்" என்று கண்களில் நீர் துளிக்க வேண்டினாள் ஜானகி.

"என்ன அப்புறம் மடப்புறம்! எனக்குத் தெரியும். அந்தத் தரித்திரங்களுக்குப் பண்ணிப் போட வழி யில்லாவிட்டாலும், பெண்ணை விட மிருந்து பிடுங்கிச் சாப்பிடத் தெரியும்! நீயும் கொடுத்துவிட்டு வந்து நிற்பாய்! ஹூம்......அப்படித்தானே!" என்று கோபத்துடன் கூறினான்.

அப்பொழுது முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கூட நடுங்கியவளாய், குரல் தடுமாற "என்ன இப்படிப் பேசுகிறீர்கள்! நான் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே பேசினால் என்ன செய்வது! நான் ஆற்றங்கரைக்குப் போயிருந்தேன். அது தவறி ஆற்றில் விழுந்து விட்டது போலிருக்கிறது. எவ்வளவு தேடியும் அகப்படவில்லை. இந்தத் தடவை மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கிறேன்" என்றாள் ஜானகி. துக்கம் தொண்டையை அடைக்க, விம்மல் நெஞ்சைப் பிளக்க அழ ஆரம்பித்து விட்டாள். முன்னும் பின்னும் கோபத்துடன் உலாவிக் கொண்டிருந்த அவன் தலை நிமிர்த்து அவளைப் பார்த்தான். அவன் கோபம் அதிகரித்தது. வேறு யாராவது அந்தச் சமயத்தில் ஜானகியைப் பார்த்திருந்தால் ரொம்ப இரக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் ராமதாஸின் நெஞ்சில் அவளுடைய தோற்றம் ஒருவித மாறுதலையும் உண்டுபண்ணவில்லை!

அவன் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாய், "இதோ பார், ஜானகி! போன வருஷம் நீ பிறந்தகம் போய்த் திரும்பியபோது மூக்குப் பொட்டு கெட்டுப் போக்கி விட்டேன் என்றாய். இந்தத் தடவை மோதிரம் காணாமல் போய் விட்டது என்கிறாய். மோதிரம் என்றால் சாதாரண மோதிரம் அல்ல. 'வைர மோதிரம்'. ஏன், அந்த அல்பங்கள் பிடுங்கிக் கொண்டு விட்டன. அதை மறைக்க இப்படிக் கதை பண்ணுகிறாய். எனக்குத் தெரியாதா, என்ன!" என்று சொல்லி வாய் மூடுமுன், "ஆமாண்டா, அப்பா. நான் கூடப் போன தடவையே கண்டிக்கணும்னு நினைச்சேன். ஆனால் நீ ஒன்றும் சொல்லாமல் இருக்கும்போது நான் சொன்னா மாமியார் பொல்லாதவன்னு சொல்லுவாளேன்னு பேசாமலிருந்தேன். இந்தத் தடவைக்கு வைர மோதிரம் போன தடவை வைர மூக்குப் பொட்டு, அடுத்த தடவைக்கு வைர வளையல் என்று இப்படி ஒவ்வொன்றாகக் "கெட்டு"ப் போய்க் கொண்டே இருக்கும்! என்னடியம்மா ஜானகி! அப்பா, அம்மா எடுத்துக் கொண்டா என்று உண்மையைச் சொல்றதுக்கென்ன!..." என்று இடித்துரைத்தாள் மாமியார்.

"இல்லை அம்மா! நான் சொல்றது உண்மை தான். காணாமல்தான் போய் விட்டது......" என்று விம்மினாள் ஜானகி. மாமியாருக்கு அவளது வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படவில்லை.

"அப்பா! ராமதாஸ்! போயும் போயும் இந்த அல்பத்தினிடம் அகப்பட்டுக் கொண்டாக்கு. அனுபவிக்கத்தானே நீ ஹும்! நாங்கள் சொன்னப்ப கேட்க மாட்டேன்னு ஒரே பிடிவாதமா அவளைத்தான் பண்ணிக்குவேன்னு கூத்தாடினே. அவளும், புருஷன் நம்ம பக்கந்தானே எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணிக்

கொண்டான். நீ இதைப் பிரமாதமாகக் கேட்டா லும் குலுக்கி மினுக்கிச் சரிப்படுத்தி விடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பான்'' என்று தூபம் போட்டாள் மாமியார்க்காரி. இடுப்பில் கொத்துச் சாவி குலுங்க, காதிலும் மூக்கிலும் வைரங்கள் ஒளிவீச, நெற்றியில் பெரியதாக இடப் பட்டிருந்த குங்குமப் பொட்டுத் துலங்க, இடுப்பில் கையை ஊன்றிக் கொண்டு 'பராசக்தி' கோலத் தில் நின்ற மாமியாரின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவும் கூசினாள் ஜானகி!

தாயால் தூண்டப்பட்ட ராமதாஸ், ''ஹூம், குலுக்குவான், மினுக்குவான். மயங்குகிறவன் இனிமேல் இந்த ராமதாஸ் அல்ல. மோதிரத் துடனும், மூக்குத்தியுடனும் வந்தால் வரட்டும். இல்லையென்றால் அங்கேயே இருக்கட்டும். இரவு வண்டிக்கே கிளம்பு. ஹூம்......இன்னும் அரை மணிதான் இருக்கு'' என்று கோபத்துடன் கட்டளை இட்டான்.

அவன் தாயாருக்கு இது உள்ளூறச் சம்மதந் தான்! ஆனால் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், ''ஏண்டாப்பா, போனால் போகிறது. இந்தத் தடவை விட்டு விடேன். இனிமேல் பிறந்தகத் துக்கே அனுப்பாமலிருந்து விட்டால் போகிறது'' என்றாள் பரிவுடன். அந்தப் பரிவுக்கும் சிறிது காரணம் இருக்கத்தான் இருந்தது! ஜானகி மூன்று மாதங்களாக 'ஸ்நானம்' செய்யாமலிருந் தாள். தன் பிள்ளையின் அழகும், மாட்டுப் பெண்ணின் அழகும் ஒருங்கே திரண்டு அழகு வெள்ளமாக ஒரு பேரனோ பேத்தியோ பிறக்கப் போகிறதே, அதைக் கொஞ்ச வேண்டாமா!

அணைய இருந்த நெருப்புக்குத் தூபம் போட்டு விட்டு எரியாதே என்றால் நின்று விடுமா! அது போல் ஜானகி எவ்வளவோ மன்றாடியும் காதில் வாங்காமல் அவளை அன்று ரயிலேற்றி விட்டுத் தான் திரும்பி வந்தான் ராமதாஸ்!

ஆனால் புறப்படும் பொழுது ஜானகி கூறிய வார்த்தைகள் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

''நான் ஊருக்குப் போகிறேன். பணம் படைத்த வர்களுக்குப் பணத்தைத் தவிர உலகில் கட்டிய மனைவிகூட லக்ஷ்யமில்லை என்பதை இன்று தெரிந்து கொண்டேன். ஆனால் என் தாய், தந்தையர் ஏழையாயிருந்தாலும் கௌரவப்பட்ட வர்கள். எப்படியாவது உங்கள் மோதிரமும் மூக்குத்தியும் உங்களிடம் வந்து சேர்ந்து விடும். ஆனால்...நான்...'' என்று விம்மிக் கொண்டே போய் விட்டாள். அவனும் அவள் துக்கத்தைக் கண்டு மனமிளகினான் ஒரு கணம்! ஆனால் தன் தாயார் கூறியது மாதிரி இது 'குலுக்கு மினுக்கு' வகையோ என்னமோ! இளகி வந்த அவன் மனசு இறுகி விட்டது. ரயில் கிளம்பியதும் பின்னேக் கிச் சென்ற எழும்பூர் ஸ்டேஷனையே பார்த்துக் கொண்டிருந்த ஜானகியின் சிந்தனையும் பின்னேக் கிச் சென்றது.

•• •• ••

மூன்று வருடங்களுக்கு முன்புதான் அவளுக்கு விவாகம் நடந்தது. அவள் தகப்பனார் ராம கிருஷ்ணய்யர் மதுரையில் ஒரு வக்கீல் குமாஸ்தா. அவரது ஏக புதல்விதான் ஜானகி. அவர்கள் குடும்பம் 'ஏழைக் குடும்பம்தான் என்றாலும் கிடைப்பதைக் கொண்டு' கௌரவமாக வாழ்ந்து வந்தார் ராமகிருஷ்ணய்யர். தமது பெண்ணை 'ஸ்கூல் பைனல்' வரை படிக்க வைத்து விட்டார்.

இது சமயம் சென்னையிலிருந்து மாணவர்கள் கோஷ்டி ஒன்று மதுரையைச் சுற்றிப் பார்க்க வந்தது. அன்று மீனாக்ஷியம்மன்' கோவிலுக்கு வந்திருந்தனர் மாணவர்கள். அந்த மாணவர் களுடன் ராமதாஸும் வந்திருந்தான். கோவிலில் அம்மனைத் தரிசித்து விட்டுச் சந்நிதியைப் பிர தக்ஷிணம் வந்து கொண்டிருந்தாள் ஒரு பெண். அவளைப் பார்த்த மாணவர்கள் திகைத்துப் போய் விட்டனர்! கலாசாலையில் எவ்வளவோ அழகிய நவநாகரிக யுவதிகளைப் பார்த்துப் பார்த் துச் சலித்துப் போயிருந்த அவர்கள் கண்களுக்கு இந்தப் பெண், அழகுத் தெய்வமே இப்படி நட மாடுகிறதோ என்ற ஐயத்தைக் கிளப்பிவிட்டாள்.

அவள் செய்து கொண்டிருந்த அலங்காரம் மிக வும் எளிமையானதுதான் என்றாலும் கவர்ச்சிகர மாயிருந்தது. கருண்ட கூந்தலை வாரிச் சாட்டை போல் நீளமாகப் பின்னித் தொங்கவிட்டிருந்தாள். தலையில் ஒரு ரோஜா மலரைச் சூடியிருந்தாள். கழுத்தில் மெல்லியதாக ஒரு பவுன் சங்கிலி. கையில் சிவப்பு நிறக் கண்ணாடி வளையல்கள். காதில் ஒரு சிவப்புத்தோடு. இடையில் பச்சைநிற 'வாயில்' புடவையும் அரக்கு சோளியும் அணிந்திருந்தாள்! மாணவர்களில் சற்று முன்னால் நின்று கொண் டிருந்த ராமதாஸின் மேல் ஒரு பார்வையை வீசி விட்டுச் சென்றாள் அவள்! அவ்வளவுதான்! மாண வர்கள் எல்லாரும் தாஸைச் சூழ்ந்து கொண்டு தலைக்குத் தலை பரிகாசம் செய்தனர்!

அவர்களுள் ஒருவன் ''டேய், பழி! தாஸ்! மீனாட்சியம்மன் கடாக்ஷம் உன் மேல் விழுந்து விட்டதடா! உன்பாடு யோகந்தான்'' என்றான். ஒவ்வொரு மாணவனும் அவளைப் பற்றி விதம் விதமாக வர்ணிக்க வர்ணிக்க ராமதாஸுக்கு

அவளை எப்படியாவது மணந்து கொண்டுவிட வேண்டும் என்று அவா எழுந்தது. தன் மதுரையிலிருந்த நண்பன் சோமு மூலம் அவளைப் பற்றிய விவரங்கள் எல்லாம் அறிந்து கொண்டான். அவர்களது ஏழைமைநிலை அவனைச் சிறிது யோசனைக் குள்ளாக்கியது! ஏனெனில் அவன் சென்னையில் பிரபலமான மோகன விலாஸ் மோட்டார் கம்பெனியின் முதலாளியான மோகனசுந்தரத்தின் ஏக புதல்வன். செல்வத்தில் புரளும் அவனது நிலைதான் சற்று யோசிக்கச் செய்தது. இருந்தாலும் 'பித்து''ப் பிடித்த அவனது மனம்தான் முடிவில் வெற்றி யடைந்தது. ராமகிருஷ்ணய்யருக்கோ இந்தச் சம்பந்தத்தில் இஷ்டமே இல்லை! ஆனால் அவர் மனைவி சங்கரியோ பெண்ணுக்கு வலுவிலே வரும் இந்த கைய அதிர்ஷ்டத்தை உதறித் தள்ள இஷ்டப்படவில்லை. தமது செல்வப் புதல்வனின் பிடிவாதத்திற்கிணங்க இந்த விவாகத்துக்குச் சம்மதித்தனர் மோகனசுந்தரமும், அவர் மனைவியும். கலியாணம் அழகர் மலையில் ஆடம்பரமின்றி நடந்தேறியது!

மணமானதும் ஜானகியை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்து வ்ட்டனர் ராமதாஸும் அவன் பெற்றோரும். முதல் தடவையே தங்களை மரியாதைக்குக் கூடச் சென்னைக்குச் சம்பந்திகள் அழைக்காததைப் பற்றி ராமகிருஷ்ணய்யரோ அவர் மனைவியோ வருத்தப்படவே இல்லை. இது அவர்கள் எதிர்பார்த்ததுதானே! பெண் சௌக்யமாக இருந்தால் போதும் என்ற நிலையில் மனத்தைத் திடம் செய்து கொண்டனர்.

சென்னையிலோ மருமகளை ஏழை வீட்டுப் பெண் என்று கட்டிக் காட்ட வேண்டும் என்று லக்ஷ்மியம்மாள் எதுவும் சொல்ல மாட்டாள். ஆனால் அவளையும் மீறி ஜானகி ஏழை வீட்டுப் பெண் என்பது பற்றி ஏதாவது வாயில் வந்து விடும். அது சமயம் ஜானகி மனம் நொந்து போவாள். பிறகு அது அவளுக்குச் சகஜமாகி விட்டது. தன் அடக்கத்தாலும் பணிவிடைகளாலும் தன் மாமியாரைத் திருப்தி செய்ய முயன்றாள். தாஸும் படிப்பை முடித்துக் கொண்டு தன் தகப்பனாருடன் தொழிலில் ஈடுபட்டான். அவன் நண்பர்களில் சிலர் செல்வ நிலையில் அவனுக்குச் சமமானவரும் இருந்தனர். ஏழைகளும் இருந்தனர். அவனது கல்யாண விஷயம் பற்றிக் கேட்ட சில முற்போக்குள்ள நண்பர்கள் அவன் செய்த காரியத்தை மெச்சினர்! சில பிற்போக்கு நண்பர்கள் அவனை ஏளனம் செய்தனர்! 'டேய் ராமதாஸ்! உன் மாமனார் பெண்ணைக் காட்டி ஏமாற்றி உன் தலையில் நன்றாகக் குல்லாப் போட்டு விட்டார். இப்படித் தெரிந்தால் உங்கள் கம்பெனியில் நூறு குமாஸ்தாக்களுக்கு இடையே நூற்றியோராவது குமாஸ்தாவாக இருக்கும் அருணாசலம் அய்யர் பெண் சாந்தா கூடத்தான் நன்றாக இருக்கிறாளே! அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கலாமே! மதுரைக்குப் போய்த்தான் இவளைப் பிடிக்க வேண்டுமா!'' என்று பலவாறு பரிகாசம் செய்தனர்.

முதலில் ராமதாஸ் இதற்கெல்லாம் செவி சாய்க்கவில்லை. வீட்டில் தாயும் இந்த மாதிரியே பேசியதால் அவனது மனம் ஆட்டங் கண்டது! தான் பெரிய தவறான காரியம் செய்து விட்டோமோ என்று குழம்புவான். ஆனால் அவன் ஜானகிமீது எல்லையற்றதொரு அன்பு கொண்டிருந்தான். அந்த அன்புத் தடாகம் இந்த விஷம வார்த்தைகளால் கலக்கப் பட்டு விட்டது என்பது மட்டும் உண்மை! அதற்கு ஏற்றாற்போல் ஜானகி முதல் தடவையாகப் பிறந்தகம் போய் விட்டு வந்தபோது மூக்குத்தியைத் தொலைத்து விட்டாள்! அவனது தாயார் மாத்திரம் சிறிது முணுமுணுத்தாள். அவன் வாயே திறக்கவில்லை. இந்தத் தடவை வைர மோதிரம் காணாமல் போய் விட்டதாகச் சொன்னது அவனது சந்தேகத்தை வலுப்படுத்தியது! ஆம்! அவர்கள் மெள்ளப் பெண்ணிடமிருந்து வாங்கிக் கொண்டிருப்பார்கள்! இவள் தன்னிடமே அதை மறைக்கப் பொய் சொல்லுகிறாள்! அம்மா சொல்வதிலும் உண்மையிருக்கலாம்! இந்தத் தடவை இவளைத் தன் தவறை உணரும்படி செய்ய வேண்டும் என்று நிர்மானித்தான். அவன் ஏற்கெனவே மகா முன் கோபி! ஆகவே ஜானகி எவ்வளவு வேண்டியும் அவளைப் பிடிவாதமாக ரயிலேற்றி விட்டு விட்டான்!

ஜானகி இந்தத் தடவை வரும் பொழுது அவளது தந்தை ஜுரமாகப் படுத்திருந்தார். அப்படி இருந்தும் அவள் தாய், மாப்பிள்ளையும் சம்பந்தி அம்மாளும் மனம் கோணக்கூடாது என்று அவர்கள் குறிப்பிட்டிருந்த தேதியிலேயே ஜானகியைப் புக்ககத்துக்கு அனுப்பி விட்டாள். மோதிரம் போனது ஒன்று, நோயுடன் போராடிக் கொண்டிருந்த தந்தையை விட்டு வந்தது மற்றொன்று என்று இரண்டு நாட்களுக்கு முன்புதான் வேதனைப் பட்டவாறு புக்ககம் வந்த அவளை மோதிரத்துக்காகவும், மூக்குத்திக்காகவும் பிறந்தகத்துக்குத் துரத்தி விட்டனர். அவளது ஆசைக் கணவனும், பணக்கார மாமியாரும்! அவள் பிறந்தகம் திரும்பும்பொழுது தன் தாய் கொடுத்த சொற்ப நகைகளுடனும் உடுத்த ஒரே புடவையுடனும் கிளம்பிவிட்டாள். அதைப் பற்றி அவன்



கணவனும் கேட்கவில்லை; மாமியாரும் வாய் திறக்கவில்லை. பார்த்துக் கொண்டிருந்தனர்.

•• •• ••

டக்கென்று அவளது சிந்தனை கலைந்தது. திருச்சியில் வண்டி மாறினாள்.

"லொக்...... லொக் ...... ஏய் ...... இந்தா ...... குழந்தை......ஜானகி......எங்கே......கூப்பிடு ...... லொக்......ம்......நான்......பார்க்கணும்." — ஈனஸ்வரத்தில் இருமிக் கொண்டே கூறினார் ஜானகியின் ஏழைத் தந்தை!

ஜானகியின் தாய் துக்கம் தொண்டையை அடைக்க, "இது என்ன எண்ணம்! மூந்தாநாள் தான் குழந்தை ஊருக்குப் போயிருக்கா! அலட்டிக்காதீங்கோ. கஞ்சி கொண்டு வரட்டுமா!" என்று கேட்டாள்.

அவர் காதில் அவள் கூறுவதொன்றும் விழவில்லை. வெறிக்க வெறிக்கச் சங்கரியைப் பார்த்து, "லொக்...ம்...... குழந்தைக்கு ...... தந்தி ... கொடு...... அவளை......நான் ...பார்க்கணுமே...," என்று கூற முடியாமல் திணறினார். அவரது நிலையைக் கண்டு நடுங்கியவாறு கொஞ்சம் கஞ்சியாவது கொடுத்துப் பார்ப்போம் என்று சமையலறைக்கு வந்தாள். கஞ்சியை ஆற்றிக் கொண்டிருந்த சங்கரிக்குக் கண்களில் கண்ணீர் "மளமள" வென்று பெருகியது. அந்த ஆபத்துச் சமயத்தில் அவளுக்கு உதவவோ, ஆறுதல் கூறவோ யாரும் இல்லை! ராமகிருஷ்ணய்யருக்கு



ஒரு தங்கை இருந்தாள். அவள் சிறு வயதிலேயே அவருடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு புருஷன் வீட்டுக்குப் போய் விட்டாள். அவள் புருஷன் திடீரென்று பர்மாவுக்கு அவளுடன் பிழைப்புக் காகப் போய் விட்டார் என்று தெரிந்தது. பிறகு அவர்களைப் பற்றி யாதொரு தகவலும் ஜானகியின் பெற்றோருக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது ஜானகியையும் கணவனின் வார்த்தையை மீறிப் பெரிய இடம் என்று ஆசைப்பட்டுக் கொடுத்து விட்டாள். தந்தியடித்தாலும் அனுப்புகிறார்களோ இல்லையோ பணக்காரச் சம்பந்திகள்! போகிறது! பெண்ணாவது சௌக்கியமாக இருக்கிறாளே! அவள் சிந்தனைக் கொடி அறுந்தது......

"ஜானகி! கண்ணே! வந்தாயா......அம்மா ......குழந்தை......," என்ற ராமகிருஷ்ணய்யரின் அலறல் அவளை ஹாலுக்கு இழுத்து வந்தது! அங்கே அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிடவைத்தது. ஏழைமை சொட்டும் கோலத்துடன் ஜானகி அவள் தந்தையின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்!

அந்நிலையிலும் ஜானகியைக் கவனித்த அவள் தந்தை, "ஜானகி...இது என்ன கோலம்......நான் ......லொக்...... லொக் ...... நினைத்தபடி......ஆகி ......விட்டதா......" என்று தடுமாறியவாறு தாகம் என்று சைகை செய்தார். ஒரு வாய் மகள் கையால் தண்ணீர் குடித்ததும் சாய்ந்தார்; தலை தொங்கியது. கடைசியாக இந்த உலகினின்றும் விடை பெற்றுக் கொண்டார்.

•• •• ••

இதுவரையில் தகவலற்று இருந்த ராமகிருஷ்ணய்யரின் சகோதரி அண்ணனின் சாவுச் செய்தி கேட்டு வந்தாள். அவளுக்கும் பிள்ளை குட்டி கிடையாது. கணவர் ஏகப்பட்ட சொத்து சம்பாதித்து வைத்து விட்டு இறந்து போய் விட்டார். அவள் அதுவரை தன் சகோதரனைத் தேடிக் கொண்டிருந்தாள். ஏனெனில் தன் சொத்துக்களுடன் ராமகிருஷ்ணய்யரிடம் நிரந்தரமாகத் தங்கிவிடத் தீர்மானித்திருந்தாள். அவள் ராமகிருஷ்ணய்யரின் ஈமச்சடங்கு முடிந்ததும் அண்ணன் அகமுடையாளுடனும், அண்ணன் பெண்ணுடனும் மதுரையிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டாள். செல்வத்தால் அவர்களுக்குத் தன்னால் என்ன செய்ய முடியுமோ அவ்வளவும் ஜானகிக்கும் அவள் தாய்க்கும் செய்தாள்! சங்கரிக்கு மாத்திரம் தன் கணவர் இருக்கும் மட்டும் கஷ்டப்பட்டுச் செத்தாரே என்றுதான் வருத்தமாக இருந்தது.

சென்னையிலோ ஜானகியை ஊருக்கு அனுப்பிய நான்கு மாதங்களுக்குப் பிறகு தான் அவள் தாய் மூலமாக ஜானகி ஊருக்குப் போகும்போது மூன்று மாதக் கர்ப்பிணி என்று அறிந்தான் ராமதாஸ். இதை அறிந்ததிலிருந்து அவன் மனசு பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல! தான் எவ்வளவு மூர்க்கத்தனமாக அவளிடம் நடந்து கொண்டோம் என்று வருந்தினான். தன் சுயமதிப்பை விட்டு அவளுக்கு இரண்டு கடிதங்கள் போட்டான். அவை இரண்டும் பிரிக்கப்படாமலேயே அவனிடம் திரும்ப வந்து விட்டன. தாயோ மறு மணத்தைப் பற்றி விரக்க

பில்லாமல் அவனிடம் நச்சரித்து வந்தாள். தாய் இந்தப் பேச்சு எடுக்கும் போதெல்லாம் அவன் தாயின் பேரில் சீறி விழுந்தான். ஒரு தடவை ஒருவருக்கும் சொல்லாமல் மதுரையில் ஜானகி இருந்த வீட்டுக்குச் சென்றான். அங்கு வேறு யாரோ குடியிருந்தார்கள். அக்கம் பக்கம் விசாரித்ததில் ராமகிருஷ்ணய்யர் இறந்து விட்டாரென்றும் பிறகு ஜானகியும் அவள் தாயும் எங்கு சென்றனர் என்று தெரியாதென்றும் கூறிவிட்டனர். மன மூடைந்த ராமதாஸ் நடைப் பிணமாகச் சென்னை திரும்பினான்.

அன்று தற்செயலாக ஜானகியின் பீரோவைத் திறந்தான். அவள் அணிந்திருந்த நகைகள், புடவைகள் எல்லாம் ஒன்று விடாமல் அப்படியே இருந்தன. அவையெல்லாம் அவனைப் பார்த்துப் பரிகசிப்பது போல் தோன்றியது. வீடே கலகலப்பற்று நிசப்தமாய் இருந்தது. இந்த அமைதி ராமதாஸின் தாய் லக்ஷ்மி அம்மாளுக்கே சகிக்க முடியாமல் இருந்தது! ஜானகி மாத்திரம் இருந்தால் இப்பொழுது பேரனோ பேத்தியோ பிறந்திருக்கும்! வீடும் எப்படிக் கல கல என்று இருக்கும்! அவள் உள்ளமே கலங்கியது! இப்பொழுது எங்கிருக்கிறாளோ......அல்லது...... அதற்கு மேல் லக்ஷ்மி அம்மாளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை! எந்த வைரங்களுக்காக அவளை வீட்டை விட்டு விரட்டினார்களோ அந்த வைரங்களைக் கண் எடுத்துப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை ராமதாஸுக்கும் அவன் தாய்க்கும்!

ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. ஜானகி ஊருக்குப் போன ஆறே மாதங்களில் ராமதாஸ் பேருக்கு ஒரு வைர மோதிரமும், ஒரு மூக்குப் பொட்டும் பார்ஸலில் வந்து சேர்ந்தன. அதில் ஜானகி கையால் எழுதிய சிறு குறிப்பு ஒன்றும் இருந்தது. "தங்களது அருமை வைர மூக்குப் பொட்டும், அன்பார்ந்த வைர மோதிரமும் அனுப்பி விட்டேன்! அதை வைத்துக் கொண்டு சந்தோஷப்படுங்கள்! ஏழைகளானாலும் நாங்கள் மான முள்ளவர்கள். இப்படிக்கு, அபாக்கியவதி ஏழை ஜானகி" என்று இருந்தது. மோதிரமும் மூக்குத்தியும் அவனைப் பார்த்து ஏளனம் செய்தது போல் தோன்றியது!

•• •• ••

அன்று மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உத்ஸவம். மதுரை அல்லோல கல்லோல மாயிருந்தது. கடைத் தெருவில் நடமாடிக் கொண்டிருந்த ஜனக் கும்பலிடையே ஒரு குழந்தை மாத்திரம் "அம்மா, அம்மா" என்று அழுது கொண்டிருந்தது. ஜானகி கண்ணில் தென்பட மாட்டாளா என்ற நப்பாசையுடன் மதுரைத் திருவிழாவுக்கு வந்திருந்த ராமதாஸின் கண்களில் இந்த அழும் குழந்தை தென்பட்டது. குழந்தையின் அருகில் சென்று அதைத் தூக்கிக் கொண்டான். நான்கு வயதிருக்கும் குழந்தைக்கு. குழந்தை ரொம்ப அழகாய் இருந்தது. அதைச் சமாதானப்படுத்திக் கொண்டே, "பாப்பா! இங்கே பார்! உங்க அம்மா எங்கே! உங்க அப்பா எங்கே! சொல்லம்மா...அம்மா கிட்டே போகலாம்" என்றான்.

குழந்தை திகைப்புடன் விழித்தது. "அம்மா, காணோம்" என்று கூறிவிட்டு மறுபடி அழத் தொடங்கி விட்டது.

பிறகு ஏதோ எண்ணத்துடன் குழந்தையைத் தலைக்கு மேல் தூக்கிக் காட்டி, "குழந்தை யாருடையது!" என்று தன் பலம் கொண்ட மட்டும் கத்தினான். அந்த இரைச்சலில் இவன் கூவியது யார் காதிலும் விழவில்லை. பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்காவது கொண்டு போகலாம் என்று குழந்தையுடன் கிளம்பினான். இதற்குள் குழந்தை சிறிது சமாதானம் அடைந்தது. போகும் போதே குழந்தையிடம், "உங்க அம்மா எங்கே இருக்கா!" என்றான் ராமதாஸ்.

"வீட்டிலே இருக்கிறாள்."

"உங்க அப்பா"

ஒரு கணம் விழித்தது குழந்தை!

பிறகு "படத்திலே" என்றது.

ராமதாஸின் மனம் சங்கடப்பட்டது! 'இவ்வளவு அழகும் சாதுர்யமும் உள்ள குழந்தைக்குத் தகப்பன் இறந்து விட்டார் போலும்! பாவம்! ஆம்! இப்பொழுது ஜானகிக்குக் குழந்தை இருந்தால் தான் அதன் தகப்பன் அல்லவா! ஆம், இதற்குத் தகப்பன் இறந்தே போய் விட்டான்! நான் இருந்தும் என் குழந்தை அநாதை!' இந்த எண்ணம் அவனைத் துக்கத்தி லாழ்த்தியது! தமுக்கின் ஒலியால் அவன் சிந்தனைச் சங்கிலி அறுந்தது. தமுக்கடிப்பவன் கூறியவைகளைக் கூர்ந்து கேட்டான். "ஐயமாரே! தயவு செய்து கேளுங்கள்! இன்று காலை பெரிய பஜாரில் நாலு வயசு ஆண் குழந்தை காணாமல் போய் விட்டது. டும்...டும்...தலையிலே சுருட்டை மயிர்...டும்...... கழுத்திலே ஒரு செயினு...டும்...நல்ல செவந்த நெறம். குழந்தை பேரு பாலு. குழந்தையைக் கண்டவங்க மேலமாசி வீதி, 43-ம் நெம்பர், ஸ்வர்ணாம்பாள் என்ற விலாசத்திலே குழந்தையைக் கொண்டு கொடுக்க வேணும்...டம்...டம்" என்று கொட்டிக் கொண்டு போய்விட்டான்.

ராமதாஸ் பரபரப்புடன், "உம் பெயரென்ன!" என்றான். "எம் பேரா........ பாலுன்னு அம்மா கூப்புடுவா" என்று மழலையை உதிர்த்தது அந்தக் குழந்தை!

ராமதாஸ் குழந்தையைத் தூக்கிக் கொண்டு மேலமாசி வீதிக்குச் சென்றான். 43-ம் நெம்பர் வீடு வந்து விட்டது. ஆயிற்று, பாலுவை அவன் வீட்டாரிடம் சேர்க்க வேண்டும்!

ராமதாஸ் தயக்கத்துடன் அந்தப் பங்களாவின் கேட்டைத் திறந்தான். "யாரது?" என்ற ஒரு வேலையாளின் அதட்டலும், ஒரு நாயின் குரைப்பும் அவனை வரவேற்றன. அதட்டிக் கொண்டே வந்த வேலையாள் ராமதாஸின் கையில் தங்கள் எஜமான் வீட்டுக் குழந்தையைக் கண்டு விட்டு, குழந்தையைக் கூட வாங்காமல் குழந்தை அகப்பட்டுவிட்ட செய்தியைச் சொல்ல உள்ளே ஓடி வந்தான். ராமதாஸ் வாயிற்படியில் கால் வைக்கவும் உள்ளே இருந்தவர்கள் ஆவலுடன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது! தலை நிமிர்ந்து பார்த்த ராமதாஸ் திகைத்துப் போனான்!

"அம்மா! அம்மா! இங்கே பாரு! இந்த மாமா தான் என்னைக் கூட்டிக்கொண்டு வந்தா" என்று தாயின் பக்கம் தாவினான் பாலு. பாலுவின் குரலால் ராமதாஸ் தன்னுயிர் பெற்றான்! என்ன! என்ன! ஜானகியா பாலுவின் தாய்! பாலு அவன் குழந்தையா! நான்கு வருஷங்களாகத் தேடிய ஜானகியைப் பாலுவால் அன்று கண்டு பிடித்து விட்டான் ராமதாஸ்.

செய்வதறியாத நிலையில், "மாமி! மாமி! என்னை மன்னித்து விடுங்கள்! ஜானகியைப் பிரிந்த கொஞ்ச நாளிலேயே நான் அவளுக்கு அணிந்த வைரம் வைரமா! அல்லது ஜானகியே வைரமா! 'எது நிஜ வைரம்' என்று என் தாயும் நானும் உணர்ந்துகொண்டோம்! 'மன்னித்தேன்' என்று சொல்லுங்கள் மாமி!" என்று கதறினான்.

ஜானகியின் தாய், அப்பொழுதும் பொறுமையைக் கைவிடவில்லை. கண்ணீருடன், "என்ன, மாப்பிள்ளை! இது நன்றாயில்லை. மனிதர்கள் தவறு செய்வது சகஜந்தானே! ஜானகிக்கு இப்பொழுதாவது விடிவு ஏற்பட்டதே!" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

** ** **

மாலை நேரம். ராமதாஸும், ஜானகியும் மாடியில் உட்கார்ந்திருந்தனர் பாலுவுடன்.

ஜானகி, "பாலு! அப்பாவோட டூ விடுடா" என்றாள்.

"மாட்டேன் போ."

"ஏண்டா! மாட்டே!"

"நீந்தான் கடையிலே என்னை விட்டுட்டு வந்துட்டியே. அப்பா தானே கூட்டிண்டு வந்தா."

"போடா! போக்கிரி," என்று குழந்தையை அணைத்துக் கொண்டான் ராமதாஸ்!

"ஊருக்குக் கிளம்பு ஜானகி!"

"ஊஹூம்......ஊஹூம்......!"

"ஏன்......"

"ஏனு! இன்னும் ஏதாவது காணாமல் போய் விட்டால் திருப்பி விரட்டவா!"

"சே! சே! நான்தான் எது ஒப்புயர்வற்ற வைரம்னு என்று தெரிந்து கொண்டுட்டேனே! இனிமேல் அந்தப் போலி வைரங்களுக்காக இந்த விலை மதிப்பற்ற வைரத்தை இழப்பேனா!" என்று கூறிப் பாலுவை அணைத்துக் கொண்டான்.

பிறகு "ஜானகி! அம்மா! இங்கு வந்த பிறகு தன் தவறை உணர்ந்து விட்டாள். இந்த இரு வைரங்களையும் பார்க்க ஆவலாக இருக்கிறாள்!" என்றான் ராமதாஸ். ஜானகியின் கண்களில் உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் வழிந்தது. அப்பாவையும் அம்மாவையும் பார்த்துக் கன்னங் குழியச் சிரித்தான் பாலு.


உங்கள் பழைய டயர்களை
புதியவை போல் ஆக்கலாம்
—ஒரே ஒரு தடவையல்ல, இரண்டு மூன்று முறைகள். அளவிற்கு அதிகமாக ஓடி டயர்கள் பழுதடைந்து விடுவதற்கு முன்னதாகவே அவற்றை டயர்ஸோல்ஸுக்கு அனுப்புங்கள். 'டிரட்' பரப்பு தேய்ந்து, இறுதியில் சன்னமாக—மங்கலாக — காட்சியளிக்கும் சமயத்தில் டயர்களை அகற்றி, புது டயர் விலையில் பாதிச் செலவில் புதிய டயர் மைலேஜ் பெற வகை செய்யுங்கள்.
அதிக டயர் மைலேஜ்
அதிக டயர் பாதுகாப்பு
குறைந்த செலவில் பெறுங்கள்
டயர்ஸோல்ஸ்
குறைந்த செலவில் மீண்டும் புது டயர் மைலேஜ் பெற
ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (ஸவுத் இந்தியா) லிமிடெட்,
"டயர்ஸோல்ஸ் டிபார்ட்மெண்ட்"
பாக்டரிகள்:
கோயமுத்தூர், மதராஸ், கோட்டயம், பெங்களூர், கல்கத்தா ஆகிய இடங்களில்.
EP
ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு "டயர்ஸோல்ஸ்" டீலர் உண்டு.

வேணு கானம்

விஜயம்

14. அது என்ன கடிதம் ?

விசாரணை முடிந்து சுமதி விடுதலையானதில் பூபதிக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. தனக்கு எத்தகைய தண்டனை கிடைக்கும் என்பதைப் பற்றி அவன் சிந்தித்துப் பார்க்கவே யில்லை. ஆனந்தக் கடலில் நீந்திக் கொண்டிருந்தான். தான் சிறையில் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றவில்லை.

அன்று மாலை, அவன் தன்னை மறந்து சிறையில் உட்கார்ந்திருந்தபோது, 'கிறீச்' என்ற ஓசையுடன் சிறையின் பின்புறத்துச் சிறு கதவு திறந்து கொண்டது. மறு நிமிஷம் சுமதி உள்ளே நுழைந்தாள்.

பூபதி அவளைப் பார்த்ததும் திடுக்கிட்டு "சுமதி, மீண்டும் நீ இங்கே ஏன் வந்தாய்? என்னால் உனக்கு நேர்ந்த துன்பங்களெல்லாம் போதாதா ?" என்று வருத்தத்துடன் கேட்டான்.

"பூபதி, எனக்கு ஏதாவது மீண்டும் நேர்ந்து விடுமோ என்று கவலைப் படுகிறீர்களா? நான் மகாராஜாவின் உத்தரவு பெற்று உங்களைப் பார்த்துப் போக வந்திருக்கிறேன். இதோ பாருங்கள். அவருடைய முத்திரை மோதிரம்!" என்று கூறி அரசனுடைய முத்திரை மோதிரத்தைக் காண்பித்தாள் சுமதி.

பூபதி ஆச்சரியத்துடன் "சுமதி, இந்தக் குற்றவாளியை, சிறையில் அடைபட்டிருக்கும் கைதியைப் பார்ப்பதற்கு மகாராஜா உனக்கு உத்தரவு கொடுத்தாரா?" என்று கேட்டான்.

"ஆமாம், பூபதி. அது இருக்கட்டும்.

லும் காவியங்களிலும் வருவது போல், இந்த ஏழை அநாதைச் சிறுவனின் வாழ்வில், இணையற்ற அழகு படைத்த நீ குறுக்கிட்டாய்...... இல்லை, சுமதி, இல்லை. நான் தான் உன் வாழ்வில் குறுக்கிட்டேன்.!"

"பூபதி, நீங்கள் சொல்லுவது தவறு. நான்தான் உங்களுடைய வாழ்வில் குறுக்கிட்டேன். கப்பலில் என் முகத்தில் விழித்ததிலிருந்து உங்களுக்கு ஓய்வேது? என்னை அந்தச் சிறையிலிருந்து தப்புவிக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய துணிச்சலான காரியங்களை யெல்லாம் மேற்கொண்டீர்கள்? உயிருக்குத் துணிந்து அலை கடலில் என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்தீர்களே! அதற்கெல்லாம் கடைசியில் இது தான் நான் உங்களுக்குச் செய்யும் பிரதி உபகாரமா? இல்லை, இல்லை! நீங்கள் தண்டனை அடைந்து எவ்விதச் சிரமத்தை அநுபவிக்கிறீர்களோ, அதை நானும் உங்களுடனிருந்து அனுபவிப்பேன். அதுதான் நியாயம்!"

"சுமதி, தாங்க முடியாத துக்கம் வந்த சமயத்தில், நிதானத்தை இழந்து விடக் கூடாது. நீ ராஜகுமாரி. உன் மனம் போனபடி நீ நடக்கக் கூடாது. ராஜ குடும்பத்துக்கு ஏற்ற முறையில் தான் நடக்க வேண்டும். நான் ஏதோ வழிப்போக்கன் மாதிரி உன்னைக் கப்பலில் சந்தித்தேன். அரசிளங் குமரியாகிய உனக்கு உதவி செய்யும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது சாதாரணமாக யாருக்கும் கிட்



படிப் பேச முடியுமா என்பது சந்தேகம் தான்...நிஜமாக நீங்கள் யார்...?''

''சுமதி, நிஜமாக நான் மாடு மேய்ப்பவன் தான். என் தாய் தகப்பனையோ, குலத்தைப் பற்றியோ எதுவும் தெரியாது. என்னை எடுத்து வளர்த்தவர் ஒரு பெரிய பண்ணையாரின் தோட்டக்காரர். அவர் தமிழறிவு பெற்றவர். சிறு வயதிலேயே எனக்கு நிறையக் கதைகளும் அறிவுக்கு வளர்ச்சி தரும் இன்னும் எத்தனையோ விஷயங்களையும் சொல்லி வளர்த்தார். எனக்கு எழுத் தறிவித்தவரும் அவர் தான். நான் சுமார் பதினைந்து வயதை யடைந்த போது, அவர் என்னை அநாதையாக விட்டு விட்டு இறந்து விட்டார். பிறகு பண்ணையாரின் இரக்க உணர்ச்சி காரணமாக மாடு மேய்க்கும் வேலை கிடைத்தது. பொழுது போக்காகக் குழல் ஊதக் கற்றுக் கொண்டேன்...அவ்வளவுதான்.''

''என்னால் நம்ப முடியவில்லை. அரண்மனையில் நாடகங்கள் பார்த்திருக்கிறேன். அதில் வரும் கதா நாயகன் மாதிரியல்லவா நீங்கள் பேசுகிறீர்கள்!''

''சுமதி, நீ சொல்லுவது உண்மை! நீயும் நானும் எதிர்பாராத விதமாகச் சந்தித்த இந்த நம் வாழ்க்கைக் கதையில் நான்தானே கதாநாயகன்!''

பூபதி இப்படிச் சொல்லி நிறுத்தினான். சுமதி சற்று யோசனையில் ஆழ்ந்தாள்.

''சுமதி, என்ன யோசிக்கிறாய்? கற்பனை உலகில் செல்ல ஆரம்பித்து விட்டாயா?''

''பூபதி, கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் சொன்னது ரொம்ப சரி. நீங்கள் கதாநாயகர்தான். நான் கதாநாயகிதான். ஆனால் இணையற்ற நம் சந்திப்பும் நட்பும் கதையாகப் போகாமல் இருக்க வேண்டும். அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்..'' என்று கூறி விட்டுச் சுமதி பூபதியின் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்லிய குரலில் என்னவோ சொன்னாள்.

''...சுமதி, அது சரியல்ல. ராஜகுடும்பத்துக்கு இழுக்கு நேரும் எந்தக் காரியத்தையும் நாம் செய்யக் கூடாது. கைதியுடன் ராஜகுமாரி வெளியேறினாள் என்னும் செய்தி ஊரில் பரவினால் உன் தந்தை, மகாராஜா எவ்வளவு வருந்துவார்! வேண்டாம், சுமதி! வேண்டாம்'' என்றான் பூபதி.

சுமதி கண்களில் நீர் பெருக, ''எனக்கு மட்டும் அந்தக் காரியம் தவறு என்று தெரியவில்லையா? நீங்கள் பாட்டுக்கு ஒரு யோசனையும் சொல்லாமல் இருந்தால் என்ன செய்வது? அதற்காக நான்... ..'' என்று அவள் மேலே சொல்லுவதற்குள் 'டக் டக், டக் டக்' என்று குதிரை ஒன்று வேகமாக வரும் சத்தம் கேட்டது. இருவரும் பேச்சை நிறுத்திக் கவனித்தனர்.

மறு நிமிஷம், குதிரை வீரனொருவன் வேகமாக வந்து சிறை வாசலில் இறங்கினான். சிறைக் காவலனிடம் பூபதிக்கு ஒரு கடிதம் கொடுத்து விட்டு மீண்டும் குதிரையில் ஏறி மறைந்தான்.

கடிதம் பூபதியிடம் கொடுக்கப் பட்டது. ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்த பூபதியின் முகம் சிந்தனையில் ஆழ்ந்தது. சுமதி அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

(தொடரும்)



அன்பின் பார்வையிலே...

பி. எஸ். மணி

மின்சார விசிறி சுழன்று கொண்டிருந்தது. கோடை காலமாதலால் விசிறி உஷ்ணக் காற்றையே அறை முழுவதும் பரப்பியது. மின்சார விசிறியின் அடியில் அமர்ந்திருந்த குமாஸ்தா சங்கரனை வறட்சிக் காற்று தாக்கி காவை வறண்டு போகச் செய்தது. அடிக்கடி சங்கரன் இடத்தை விட்டு எழுந்திருந்து தண்ணீர் அருந்திவிட்டு வந்து தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினான்.

மணி பன்னிரண்டு அடித்தது. உஷ்ணக் காற்று அவன் உடலுக்கு வேதனை யளித்தது. பேனாவைக் கீழே போட்டு விட்டு, 'அப்பா! என்ன வெய்யில்!' என்று அங்கலாய்த்தான்.

அச்சமயம் காரியாலயப் பையன் அவன் முன் வந்து, "ஸார்! உங்களை ஐயா உன்னே கூப்பிடுகிருரு!" என்று அறிவித்தான்.

சங்கரன் சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியை நிறுத்தி விட்டுக் காரியாலய மானேஜரின் அறையை அணுகினான். குளிர்ச்சி இயந்திரம் அமைக்கப்பட்ட இடமாதலால் குளுகுளுவென்று உடலுக்கு இதமாக இருந்தது. நரகத்திலிருந்து சொர்க்கத்துக்கு வந்தது போல் தோன்றியது.

"சங்கர்! உன்னிடம் ஒரு வேலையை ஒப்படைக்கப் போகிறேன். அந்தக் காரியத்தை நீ நிறைவேற்ற வேண்டும். அதன் வெற்றி, தோல்வி உன் எதிர்காலத்தைப் பாதிக்கும்" என்று கூறினார் மானேஜர். அவர் முகத்தில் கடுகடுப்பு நிறைந்து காணப்பட்டது.

சங்கரன் திகிலுடன் திகைப்பு பிடித்தவன் போல் அவர் இடப்போகும் பணியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பதில் பேசாதது கண்டு ஆத்திரமடைந்த மானேஜர், "நீ என் இடித்த புளியாட்டம் இருக்கிறாய்! உன்பேரிலேயே உனக்கு நம்பிக்கை இல்லையா!" என்று வினவினார்.

"தாங்கள் என்ன கட்டளை யிட்டாலும் அதை நிறைவேற்ற வேண்டியது என் கடமை என்பதால்தான்......" என்று பயந்துபோய்ப் பதறிய குரலில் பதிலளித்தான் சங்கரன்.

"சரி! நம் மானேஜிங் டைரக்டரின் பங்களாவுக்குப் பக்கத்தில் ஐந்து ஏக்கர் நிலம் காலியாகக் கிடக்கிறது. அதை அவர் விலைக்கு வாங்கி அதில் கட்டிடம் கட்டப் பிரியப்படுகிறார். அவராகவே அந்த நிலத்தின் சொந்தக்காரரிடம் அணுகி விலை பேசச் சங்கோசப்படுகிறார். நீ போய்......"

"ஸார்! எனக்குக் கொடுத்திருக்கும் பணி முற்றிலும் புதிதாயிற்றே! காரியாலய வேலைக்கும் அதற்கும்......" என்று இழுத்தான்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் இடும் கட்டளையை நீ நிறைவேற்றத்தான் வேண்டும். இல்லாவிட்டால்...!" என்று சிம்மகர்ஜனை புரிந்தார் மானேஜர்.

"ஆகட்டும், ஸார்!" என்று திக்கித் திணறிக் கூறிவிட்டு வெளியே வந்தான். குளிர்ச்சி அறை கூட அவனுக்கு உலைக்களம் போல் தோன்றியது.

மின்சார விசிறியைத் திருகி விட்டு ஆறாகப் பெருகும் வியர்வையைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டான். மானேஜர் அவன் தலை மீது சுமத்திய புதிய பணியை எப்படி நிறைவேற்றுவது என்ற கவலை அவனை ஆட் கொண்டது. வேலையே ஓடவில்லை. பைத்தியம் பிடித்தவன் போல் பேந்தப் பேந்த விழித்தபடி உச்சி மோட்டையே கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தான் சங்கரன்.

"ஸார்! நீங்க அந்த நிலத்தின் சொந்தக்காரருடைய பெயரையும் விலாசத்தையும் வாங்கிக்க மறந்துட்டீங்களாம். இதோ மானேசரு ஐயா எழுதிக் கொடுத்திருக்காரு!" என்று கூறிப் பையன் ஒரு சீட்டைக் கொடுத்தான்.

'அடடா, என்ன மறதி! விலாசத்தை அவரிடம் கேட்க மறந்தல்லவா போய்விட்டேன்! மானேஜர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்!' என்று எண்ணி அவன் அசிரத்தையாகப் பையனிடமிருந்து சீட்டை வாங்கிக் கொண்டான்.

** ** **

பி. ஏ. பரீட்சை தேறியதும் சங்கரன் வேலைக்காகத் திண்டாடி அலைய வேண்டிய அவசியமிருக்கவில்லை. ரமணி சாய வர்ணக் காரியாலயத்தின் மானேஜர் மூர்த்தி அவனை அழைத்துக் குமாஸ்தா உத்தியோகம் கொடுத்தார். அவர் அவனது ஏழைமை நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு அவனுக்கு வேலை கொடுத்து விடவில்லை. ஆனால் பி. ஏ. பட்டதாரியான சங்கரனுக்கு வேலை கொடுத்து, 'நீ என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்' என்று அதிகார தோரணையுடன் கூறினால் அதற்கு அவன் பணிந்து விடுவான்; இருபத்தி நாலு மணி நேரமும் தம் கட்டளைக்கு அடிபணியச் சரியான ஆள் கிடைத்து விடுவான் என்று கருதினார். தம் பெண்ணையும் வீட்டோடு வைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினார். அதிகாரத்தினால் எளிதில் சங்கரனை வசப்படுத்தலாம் என்ற எண்ணத்திலேயே அவனுக்கு வேலை கொடுத்தார் மூர்த்தி. அவருக்குள்ள அதிகார தோரணை யெல்லாம் அவருடைய மகளுக்கும் படிந்திருந்ததில் ஆச்சரியமில்லையல்லவா! இதெல்லாம் சங்கரனுக்குத் தெரிந்துதான் இருந்தது.

** ** **

மாலையானதும் சங்கரன் சோர்ந்த முகத்துடன் தன் இல்லத்துக்குச் சென்றான். வழி நெடுக மானேஜர் இட்ட கட்டளையை எப்படி நிறைவேற்றுவது என்ற வேதனை அவன் முகத்திலுள்ள மலர்ச்சியை யெல்லாம் விழுங்கி விட்டது.



அவன் வேதனையைக் கிளறி விடுவது போல் வீட்டில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

சட்டை யெல்லாம் கழற்றிக் கோட் ஸ்டாண்டில் மாட்டினான். "அண்ணா! அண்ணா!" என்று மகிழ்ச்சியுடன் கூவிக் கொண்டே ஓடி வந்தான் அவன் தம்பி சேகர். சங்கரன் உள்ளத்தில் கப்பியிருந்த கவலை அச் சிறுவனுடைய சந்தோஷத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை என்பது அப் பாலகனுக்கு எப்படித் தெரியும்!

"என்னடா, அண்ணாவுக்கு!" என்று எரிச்சலுடன் கேட்டான் சங்கரன்.

அவன் கடுசொல் சேகரின் மகிழ்ச்சிப் பிரவாகத்துக்கு அணை கோலியது. இருந்தாலும் சேகர் தயங்கிக்கொண்டு, "அண்ணா! மூர்த்தி மாமா வீட்டிலிருந்து சுசீலா காரிலே வந்திருந்தா. எங்களுக்கெல்லாம் நிறையச் சட்டையும் துணிமணியும் கொண்டு வந்து கொடுத்தா..." என்றான்.

"ஏண்டா! அசட்டுப் பயலே, யாரோ வேற்று மனிதர்கள் கொண்டு வந்து கொடுத்தால் அதை உடனே வாங்கிக் கொண்டு விடுவதா! உங்களுக்குப் புத்தி யில்லையா!" என்று எரிந்து விழுந்தான் சங்கரன்.

"ஏன்! அவனைக் கோபித்துக் கொள்கிறாய்! சுசீலா நம் வீட்டுக்கு மாட்டுப் பெண் ஆகப் போகிறவள். அவள் கொடுத்ததை வாங்கிக் கொள்வதில் என்ன தவறு!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் சங்கரனின் தாயார்.

"அம்மா! கூனியூருக்குப் போவதற்கு முன்பு ஒருவன் குனிந்துகொண்டு சென்றானாம். அது போலக் கல்யாணம் நடப்பதற்கு முன்னாலேயே அவர்களோடு உறவு கொண்டாட ஆரம்பித்து விட்டாயே! நம்முடைய கௌரவம், மரியாதை யெல்லாம் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு அவர்கள் கொடுத்த பொருளைப் பிச்சையாகப் பெற்றுக் கொள்வதை நான் சிறிதும் விரும்பவில்லை, அம்மா! நமக்கே அது இழுக்கு தரும் செயல்!"

"அப்படியானால் அவர்களுடைய சம்பந்தம் உனக்கு......!"

"அவர்களோடு சம்பந்தம் செய்து கொள்வதற்காக நம் கௌரவத்தை விட்டுவிட வேண்டுமா!"

"இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறாய்!"

"துணிமணிகளை யெல்லாம் அவர்கள் வீட்டுக்கே திருப்பி அனுப்பி விடுவதுதான் நல்லது!" என்று 'உர்'ரென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கூறினான் சங்கரன்.

"இவைகளைத் திருப்பி யனுப்பினால் அவர்களுடைய உள்ளம் வேதனை யடையும். இனிமேல் எந்தப் பொருளையும் அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளவில்லை......!"

"சரி! எக்கேடு கெட்டாவது போங்கள்! எனக்கொன்றுமே பிடிக்கவில்லை!" என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான். 'காரியாலயத்தில்தான் மானேஜரின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது; வீட்டிலும் அவருடைய குடும்பத்தினரின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுச் சுதந்திரமிழந்து இருக்க வேண்டுமா!' என்று மனத்துள் குமைந்தான் சங்கரன். ஒரு வாரத்துக்குமுன் சுசீலாவினால்

மானேஜரின் கோபத்துக் குள்ளாகி வேதனைக்கு ஆளானது அவன் நினைவுக்கு வந்தது.

அன்று பன்னிரண்டு மணி இருக்கும். மானேஜர் வேலை நிமித்தம் வெளியில் சென்றிருந்தார். சங்கரன் காரியாலயக் கணக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்தான். மானேஜர் அறையில் டெலிபோன் மணி கிணுகிணு வென்று ஒலித்தது. சங்கரன் எழுந்திருந்து போய் டெலிபோன் ரிஸீவரைக் கையிலெடுத்தான். "ஹலோ!" என்றான் பயந்தபடியே.

"நான் சுசீலா பேசுகிறேன். அப்பா இல்லையா!" என்று மறுபக்கத்தில் அதிகாரக் குரல் கேட்டது.

"அப்பா ஆபீஸ் காரியமாக வெளியில் போயிருக்கிறார்கள். வந்தால்......"

"அவர் வந்தால் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் மாகாணக் கல்லூரிக்குப் போய் பி. எஸ். ஸி. வகுப்பில் சேருவதற்கு எனக்கு மனு வாங்கி வர வேண்டும்!"

"தங்கள் அப்பா வந்ததும் சொல்லி விட்டுப் போகலாமா......!" என்று கேட்டான்.



"அப்பா வந்தால் உங்கள் தயவு என்னத்துக்கு! சீக்கிரம் போய் வாங்கி வந்து அப்பாவிடம் கொடுத்து அனுப்புங்கள். இந்தச் சிறிய காரியத்துக்கு நீங்கள் இப்படிப் பயந்து சாகிறீர்களே!" என்று எக்காளமாகக் கூறினாள் சுசீலா.

சங்கரன் இரண்டும் கெட்டான் நிலையில் செய்வதறியாமல் திகைத்தான். பிறகு நடுங்கிய குரலில், "ஆகட்டும்! உடனே மனு வாங்கி வந்து பையனிடம் அனுப்பி வைக்கிறேன்!" என்றான்.

வேகாத வெய்யிலில் மாகாணக் கல்லூரிக்கு நடந்தான். தக தக வென்று பொரிந்து கொட்டும் வெய்யிலில் அவன் உடல் முழுவதும் வியர்வை ஆறாகப் பெருகியது. தன் தலைவிதியை நொந்து கொண்டே கலாசாலைக்குப் போய் மனு வாங்கி வர அவனுக்கு இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகி விட்டது. அதற்குள் மானேஜர் வந்து விட்டார் என்பது அறையில் அடிக்கடி 'காலிங் பெல்' அடிப்பதிலிருந்து தெரிந்தது.

சங்கரன் வந்ததும் தன்னை மானேஜர் வரச் சொன்னார் என்று கேள்விப் பட்டான். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று பயந்து கொண்டே அறையினுள் மெள்ள நுழைந்தான்.

மானேஜர் மூர்த்தி அறையில் ருத்ர மூர்த்தியாக விளங்கினார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோல் இருந்தது. அவன் வந்ததும் வராததுமாக, "என்ன சங்கரா! இந்த ஆபீஸில் இருக்கணும்னு நினைக்கிறாயா! இல்லை, இன்றே மூட்டை கட்டிப்போகணும்னு எண்ணுகிறாயா!" என்று அனல் தெறிக்கக் கேட்டார் மூர்த்தி.

"ஸார்...!" என்று இழுத்தான். அதற்குமேல் அவன் நா எழவில்லை. கால்கள் கிடுகிடுவென்று நாட்டியம் ஆடின.

"என்ன! நீ சொல்லிக் கொள்ளாமல் ராஜா மாதிரி ஆபீஸை விட்டுப் போய்விடறதும், நான் ஐயா வருகைக்காகத் தவம் கிடக்க வேணுமா!"

"ஸார்! சுசீலா மாகாணக் கல்லூரிக்குப் போய் மனு வாங்கி வர வேண்டும் என்று போனில் சொன்னாள். இதோ இருக்கிறது விண்ணப்பத்தாள்" என்று கூறி நடுங்கிக் கொண்டே அதை மேஜையின் மேல் வைத்தான். அடுத்த நிமிஷம் அது காற்றில் பறந்தது.

"ஏன் அப்பா! உனக்குப்புத்தியிருக்கா! இதற்கு ஏன் இவ்வளவு அவசரம்! ஆபீஸ் வேலையை விட்டு விட்டு உன்னை யார் அங்கேபோகச் சொன்னா' என்னைக் கேட்காமல் எதற்காகப் போனாய்! இந்த மாதிரி அதிகப்பிரசங்கித்தனம் இன்னொரு தடவை

செய்தால் உன்மீது நடவடிக்கை எடுக்க நேரிடும். ஜாக்கிரதை! போய் வேலையைக் கவனி!" என்று கட்டளையிட்டுவிட்டு அவனை எரித்து விடுபவர் போல் பார்த்தார் மானேஜர்.

சங்கரன் சப்த நாடியும் ஒடுங்கிப் போய் நின்றான். நிரபராதியான தன்மீது அவர் கோபித்துக் கொண்டது மிகுந்த வருத்தத்தை அவனுக்கு அளித்தது. அதற்கெல்லாம் காரணமான சுசீலா மீது அவனுக்கு அளவற்ற வெறுப்பு உண்டாயிற்று. அகம்பாவமும், அதிகாரமும் படைத்த சுசீலா அவன் வீட்டுக்கு வந்து புதுத் துணிகள் கொடுத்து விட்டுப் போனாள் என்றால் அவனால் எப்படி அதைச் சகித்துக் கொள்ள முடியும்!

** ** **

அடுத்த நாள் சங்கரன் காலையில் மானேஜர் கொடுத்த விலாசத்துக்குப் பஸ்ஸில் போய் இறங்கினான். பெரிய பங்களாவினுள், காரியம் அநுகூலமாய் நடக்குமா என்ற கவலையுடன் தயங்கித் தயங்கி நடந்தான்.

முன் வாசலில் போய் நின்று, "ஸார்!" என்று உரக்கக் கூப்பிட்டான்.

"யார்! உள்ளே வாருங்கள்!" என்று கனிவான குரல் கேட்டது.

சங்கரன் தயக்கத்துடன் படியேறினான்.

"அட, சங்கரனா! என்ன அபூர்வமாயிருக்கு எங்கே வந்தாய்!" என்று கேட்டார் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த பெரியவர்.

"ஸார்! நமஸ்காரம்!" என்று அவருக்கு வணக்கம் செலுத்தினான் சங்கரன். அவன் பி. ஏ. வகுப்பு படிக்கும் பொழுது அவனுக்கு ஆங்கிலப் பேராசிரியராக இருந்த ராகவன் வீடுதான் மானேஜர் கொடுத்த விலாசமாயிருந்தது அவனுக்குத் திகைப்பை யளித்தது.

"என்ன அப்பா! உன்னைப் பார்த்து நாலு வருஷங்களுக்கு மேலாகி விட்டன. அதற்குள் எவ்வளவு மாறிப் போய் விட்டாய்!...... ஆமாம்! இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாய்!"

"ஸார்! நான் ரமணி சாய வர்ணக் காரியாலயத்தில் குமாஸ்தாவாக இருக்கிறேன்!" என்றான்.


"அப்படியா! சரி! அதிகாலையில் எங்கே புறப்பட்டாய்!"

அவனுக்குத் தான் நிலத்தை விலை பேசுவதற்காக வந்திருக்கும் செய்தியைத் திடுதிப்பென்று அவரிடம் சொல்ல வெட்கமாயிருந்தது. அவன், "நான் சும்மா உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன், ஸார்!" என்றான்.

"சரி! நாற்காலியில் உட்காரு!" என்று அவர் கூறி விட்டு, "பத்மா! பத்மா!" என்று தம் அருமை மகளைப் பலத்த குரலில் கூப்பிட்டார்.

இது இலட்சிய சகாப்தம்!


எவர் சரி, அதாவது யார் கூறுவது சரி என்ற கொள்கையே இன்று உலக நாடுகளின் போராட்டத்துக்குக் காரணமாக இருந்து வருகிறது; உலக அமைதிக்குக் குந்தகமாக இருந்து வருகிறது. எவர் சரி என்ற கொள்கை எது சரி என்ற கொள்கையாக மாறி விட்டால் உலக க்ஷேமத்துக்கு வழி பிறந்து விடும். இந்த உண்மையை "இனி நாம் என்ன செய்யப் போகிறோம்" என்ற மகுடமிட்ட எம். ஆர். ஏ. வெளியீடு தகுந்த கார்ட்டூன் படங்களுடன் நிரூபணம் செய்திருக்கிறது. இந்த உலக மக்கள் உய்யும் வழி எது என்பதைக் காட்டுவதே இப் புத்தகத்தின் நோக்கம் என்று அதில் குறிப்பிட்டிருக்கிறது.



என் திட்டம்

ஆயுத பலத்தைக் காட்டிலும், இலட்சிய பலமே அதாவது உயர்ந்த இலட்சியமே மேலானது, அதிக சக்தி வாய்ந்தது என்பது எம். ஆர். ஏ. ஸ்தாபனத்தின் தத்துவமாகும். இந்த ஸ்தாபனத்தின் கிளைகள் உலகில் உள்ள பல நாடுகளிலும் வேலை செய்து வருகின்றன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உலகம் எவ்வாறு இருந்தது என்ற கேள்வியுடன் ஆரம்பிக்கும் இந்தச் சித்திர விளக்க நூல், வருங்கால உலகம் வரையில் சித்திரங்களினாலேயே விளக்கப்பட்டிருக்கிறது. வல்லரசுப் பிரதிநிதிகள், தீராத பிணக்குக்கும் பகைக்கும் காரணமான, போட்டிக்கும் போராட்டத்துக்கும் காரணமான 'என் திட்டம்' என்பதை விட்டுவிட வேண்டும்; சமாதானத்துக்கு வழி கோலும் 'நம் திட்டம்' என்பதைக் கடைப் பிடிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் இப் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள இரண்டு படங்களின் மூலம் விளக்கப்பட்டிருக்கிறது.



நம் திட்டம்

பனிக் கட்டி சகாப்தம், கருங்கல் சகாப்தம், வெண்கல சகாப்தம், எஃகு சகாப்தம், இயந்திர சகாப்தம் இவற்றைக் கடந்து மானிட வர்க்கம் இன்று இலட்சிய சகாப்தத்தை அடைந்திருக்கிறது. கோடிக்கணக்கான மக்களின் மனத்தை எந்த இலட்சியம் கவருகிறதோ, அதுதான் வரப்போகும் உலக சமுதாயத்தின் ஜீவநாடியாக விளங்கப் போகிறது என்பது இந்த நூலின் சித்தாந்தம். "ஒரு இலட்சியத்தை ஜெயிக்க வேண்டுமானால், அதைவிட உயர்ந்த இன்னொரு இலட்சியத்தால்தான் நீங்கள் அதைச் சாதிக்க முடியும்" என்ற வழியை இந்த நூல் வலியுறுத்துகிறது. வாய்மை, தூய்மை, பரோபகாரம், அன்பு இவைதான் வரப் போகும் புதிய சகாப்தத்தின் நான்கு தூண்கள் என்று இந்த நூலில் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. ஹைட்ரஜன் குண்டு பிறக்கிற அந்தகாரம் சூழ்ந்துள்ள இந்த உலகுக்கு இந்த எம். ஆர். ஏ. வெளியீடு மின்னொளி போல் வழி காட்டுவதாக இருக்கிறது எனலாம்.

கிடைக்குமிடம்: M. R. A., Madras—2.

"என்ன அப்பா வேணும்!" என்று தேனினு மினிய குரலில் கேட்டுக் கொண்டே அழகில் ரதியை யொத்த பெண் ஒருத்தி வந்தாள்.

"பத்மா! இவன் என்னிடம் படித்த மாண வன். பி. ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறி யிருக்கிறான்..." என்று கூறிக்கொண்டே போனார் பேராசிரியர் ராகவன்.

"அப்படியா!" என்று வியப்புடன் கேட்டுக் கொண்டே அவள் சங்கரன் பக்கம் திரும்பி, "நமஸ்காரம்!" என்று வணங்கினாள். அவனும் சங்கோசத்துடன் பதில் வணக்கம் செலுத்தினான்.

"பத்மா! சங்கரனுக்குக் காப்பிக் கொண்டு வந்து கொடு, அம்மா!" என்று கூறினார் ராகவன். "ஆகட்டும், அப்பா!" என்று மகிழ்ச்சி யுடன் கூறி மானைப்போல் உள்ளே துள்ளிஓடினாள்.

"சங்கரா! எனக்கு ஒரு ஒத்தாசை செய்ய வேணும். உன்னால் முடியுமா!" என்று வினவினார் பேராசிரியர் ராகவன்.

அவனுக்கு மானேஜர் இட்ட கட்டளை நினை வுக்கு வந்தது. அதைக் கேட்டு விடலாமா என்று அவன் எண்ணினான். ஆனால் 'சடக்' என்று கேட்க நா எழவில்லை.

"என்ன சார் செய்ய வேணும்!" என்று கேட்டான் சங்கரன். இவரும் கஷ்டமான பணியை ஏவி விடுவாரோ என்று பயந்தான்.

"உனக்கு 'டைப்' அடிக்கத் தெரியுமோ!"

"தெரியும், ஸார்!"

"ஒன்றுமில்லையப்பா! நான் பி. ஏ.க்கு ஆங்கில நோட்ஸ் தயாரித்திருக்கிறேன். அதைக் கொஞ் சம் உனக்கு ஓய்வு கிடைத்த வேளையில் டைப் செய்து தர முடியுமோ!"

"இதில் கஷ்டம் என்ன ஸார், இருக்கு! தினம் மாலையில் வந்து டைப் அடித்துத் தருகிறேன்."

பத்மா கையில் காப்பியுடன் வந்து அவன் முன் நீட்டினாள். அவள் கொடுத்த காப்பியைச் சங்கரன் மகிழ்ச்சியுடன் பருகினான்.

"ஸார்! நான் ஆபீஸுக்குப் போய்விட்டு மாலை யில் வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே அவன் எழுந்திருந்தான்.

"அப்பா! அவரைச் சாப்பிட்டு விட்டுப் போக லாம் என்று சொல்லுங்கள்!" என்று நாணத் துடன் கூறினாள் பத்மா.

"ஆமாம், அப்பா! நீ சாப்பிட்டுவிட்டுப் போக லாமே!" என்றார் பேராசிரியர் ராகவன்.

"இல்லை, ஸார்! சாப்பாட்டுக்கு என்ன! இன் னொரு நாள் வந்து சாப்பிடுகிறேன்!" என்று கூறி விட்டுப் புறப்பட்டான் சங்கரன்.

வழி நெடுகப் பத்மாவின் பெருந் தன்மையை நினைத்து வியந்த வண்ணம் சென்றான் சங்கரன். சுசீலாவை விடப் பத்மா பணக்காரிதான். ஆனால் சுசீலாவைப் போல் அவள் கர்வம் பிடித்தவளா யில்லை. அடக்கமும் ஒடுக்கமும், பெருந்தன்மை யும் மிக்க பத்மாவின் உயர்ந்த உள்ளத்துக்குச் சுசீலாவை ஈடு சொல்ல முடியுமா!

சங்கரன் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட் டுச் சரியாகப் பத்து மணிக்குக் காரியாலயத்துக் குப் போய்ச் சேர்ந்தான்.

மானேஜர் ஆபீசுக்குள் நுழையும்போதே சங் கரன் பக்கம் திரும்பி, "என்ன! போன காரியம் என்ன வாயிற்று!" என்று வினவினார்.

"ஸார்! நான் போனபொழுது அவர் வீட்டில் இல்லை. இன்று மாலை அவரைப் பார்க்கலாம் என் றிருக்கிறேன்" என்று மழுப்பி வைத்தான். அவ னுக்கு உண்மையைச் சொல்லப் பயமாயிருந்தது.

"சீக்கிரம் அவரைப் பார்த்துக் காரியத்தை முடிக்க வேணும். தெரிந்ததா!" என்று எச்சரித்து விட்டுப் போனார்.

மாலை வந்ததும் நேராகத் தன் ஆங்கிலப் பேராசிரியரின் இல்லத்துக்குப் போனான் சங்கரன். ராகவன் அழகாக உடையணிந்து கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"சங்கரா! உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் ராகவன்.

"ஆபீஸ் விட்டு வருவதற்கு நாழியாகிவிட்டது. நம் வேலையைத் தொடங்கலாமா!" என்று கேட்டான் சங்கரன்.

"நாளைக்கு 'டைப்' அடித்துக் கொள்ளலாம். இன்று புதிய ஒரு ஆங்கிலப் படம் வந்திருக்கிறது. பத்மா பார்க்க வேண்டும் என்றாள். நாம் மூவரும் போகலாம், வா!" என்றார் ராகவன்.

"நான் என்னத்துக்கு, ஸார்! நான் நாளை மாலை வருகிறேன்" என்றான் சங்கரன்.

"சங்கர்! உனக்கும் சேர்த்து மூன்று டிக்கட்டுகள் வாங்கியாச்சு. நீ அவசியம் வந்தாக வேண்டும்" என்று கூறினார். சங்கரனால் அதற்கு மேல் அவருடைய வார்த்தைக்குத் தடை சொல்ல முடியவில்லை.

பத்மா வந்ததும் மூவரும் சினிமா கொட்டகைக்குக் காரில் போய் இறங்கினர். அவர்கள் வருவதற்கும் சினிமா ஆரம்பிப்பதற்கும் சரியாக இருந்தது. புதிய முறையில் தயாரிக்கப் பட்டிருந்த படமாதலால் நேரம் போனதே தெரியவில்லை.

இடைவேளை வந்ததும் சங்கரன் வெளியில் போய் வருவதற்காக எழுந்தான்.

"சங்கரன்!" என்று அதிகாரத் தொனியில் கூப்பிடும் குரல்கேட்டுத் திரும்பினான். அவன் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பின்னாலிருந்து யாரோ கூப்பிடுவது தெரிந்தது.

"யார்! அந்தப் பெண்! இவ்வளவு பண்பாடற்ற முறையில் நடந்து கொள்கிறாள்!" என்று கேட்டாள் பத்மா.

"அவள் என் ஆபீஸ் மானேஜரின் பெண்!" என்று மெதுவாகப் பதில் சொன்னான் சங்கரன்.

"அவள் பணக்கார வீட்டுப் பெண்ணானால் என்ன! அதற்காகப் பிறரைத் தாழ்வு படுத்திப் பேச வேணுமா! அவர்களும் மனிதர்கள்தான் என்பது அவளுக்குத் தெரியாமல் போய் விட்டதே!" என்று அங்கலாய்த்தாள் பத்மா.

"மேல் அதிகாரியின் பெண்; அதிகாரத்தை விரும்புவது இயல்புதானே!" என்றான் சங்கரன்.

"உங்கள் பெருந்தன்மை எனக்கு வியப்பாயிருக்கிறது; பணமா பெரிசு! குணமல்லவா முக்கியம்! மரியாதை கொடுத்து மரியாதை வாங்கத் தெரியாத இவளும் ஒரு பெண்ணா!" என்றாள் பத்மா.

சுசீலா பிறர் முன் நடந்து கொண்ட மாதிரி அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அதனால் அவள் குரல் காதில் படாததுபோல சுசீலாவின் பக்கம் பாராமலே அவன் வெளியில் போய்த் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டான்.

சினிமா முடிந்ததும் சங்கரன் எழுந்து, "ஸார், உங்களுக்கு ரொம்ப வந்தனம். நான் வீட்டுக்குப் போய்வருகிறேன்!" என்று ராகவனிடம் கூறினான்.

"அப்பா! அவர் ஏன் நடந்து செல்ல வேண்டும்! நம் வண்டியிலேயே அவரை அழைத்துச் சென்று அவர் வீட்டில் இறக்கி விட்டுப் போகலாம்!" என்றாள் பத்மா.

ராகவன் அவனைக் காரில் ஏற்றிச் சென்று அவன் வீட்டில் இறக்கி விட்டுப் போனார். பத்மாவிடம் அவனுக்கு அளவு கடந்த மரியாதை ஏற்பட்டது. சங்கரனுக்கு அவனை யறியாமலே பத்மாவின் மீது ஏதோ ஒரு இனந் தெரியாத அன்பு முகிழ்வது போலத் தெரிந்தது. அதை அவனால் கட்டுப் படுத்தி வைக்க முடியவில்லை.

இரண்டாம் நாள் காலையில் சங்கரன் கிணற்றடியில் குளித்து விட்டுத் திரும்பிய பொழுது சேகர், "அண்ணா! சுசீலா வந்திருந்தா......" என்று பயந்து கொண்டே கூறினான்,

"வந்தால் என்னடா! வந்து விட்டுப் போகிறாள். அவளுக்கு என்ன வேலை!" என்றான்.

அவன் தாயார் அவன் பின்னாடியே வந்து, "சங்கரா! நேற்றிரவு எங்கே போயிருந்தாய்!" என்று கேட்டாள்.

"ஏன், அம்மா! ஆபீஸ் காரியமாக வெளியில் போயிருந்தேன்!"

"சினிமா கொட்டகையிலா ஆபீசு காரியம் இருக்கு! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணும்!"

"என்ன அம்மா! குற்றவாளியை விசாரிப்பதைப் போல் விசாரிக்கிறாயே! அந்தச் சுசீலா ஏதாவது உன்னிடம்சொல்லிவிட்டுப்போனாளோ!"

"ஆமாம்! சினிமாவுக்கு யாரோ ஒரு பெண்ணோடு போயிருந்தாயாம். உங்க மானேஜருடைய பெண் சுசீலா வந்து கண் கலங்கச் சொன்னாள்."

"ஏன், அம்மா! நான் என் ஆங்கிலப் பேராசிரியருடன் சினிமாவுக்குப் போயிருந்தேன். அவரோடு அவர் பெண்ணும் வந்திருந்தாள். இதில் என்ன தவறு! அவள் என்னிடம் என்ன குற்றத்தைக் கண்டு பிடித்து விட்டாள்! அவள் அப்பாதான் ஆபீஸில் மிரட்டுகிறார். இவளும் என்னை மிரட்டப் பார்க்கிறாளா!"

"என்னவோ, அப்பா! அவர்களுடன் வீண் மனஸ்தாபப்பட்டு வேலைக்கு ஏதாவது ஆபத்து வராமலிருக்க வேண்டுமே என்று பயமாயிருக்கிறது!" என்றாள் சங்கரனின் தாயார்.

"எனக்கு நாழிகையாகி விட்டது. நான் வருகிறேன்!" என்று சாப்பிட்டு விட்டு அவசரம் அவசரமாக ஆபீசுக்கு ஓடினான் சங்கரன்.

பதினோரு மணிக்குக் காரியாலயத்தினுள் நுழைந்தான் சங்கரன். அவன் மனம் பட பட வென்று அடித்துக் கொண்டது. அவன் ஆசனத்துக்கு அருகில் செல்லும்போதே ஆபீஸ் பையன் ஓடி வந்து, "ஸார்! உங்களை மானேஜரு ஐயா நாலு தரம் கூப்பிட்டு விட்டாரு. அவர் கோபத்துடனிருக்கிறாரு" என்று கூறினான். சங்கரன் பதட்டமடைந்து ஏதோ தோன்றியவாறு ஒரு காகிதத்தில் நாலு வரி கிறுக்கி வைத்துக் கொண்டான்.

பிறகு நிதானமாக மானேஜரின் அறையில் நுழைந்தான். அவனைக் கண்டதும் மானேஜர், "போன காரியம் என்ன ஆயிற்று! காயா பழமா!" என்று கேட்டார்,

சங்கரன் பதிலே பேசவில்லை.

"உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே, காரியம் தோல்வி என்று! காரியத்தை விட்டு அந்த வீட்டுப் பெண்ணோடு சினிமாவுக்குப் போகவும் சிரித்துப் பேசவுந்தானே உனக்குப் பொழுதிருக்கிறது!" என்று எக்காளமாகக் கூறினார் மானேஜர் மூர்த்தி.

"வேலையைப் பற்றி நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள்: ஆனால் என் சொந்த விஷயத்தில் தலையிட உங்களுக்கு உரிமை இல்லை" என்றான் சங்கரன்.

"அப்படியா! உனக்கு எதனால் வேலை கொடுத்தேன், தெரியுமா! என் பெண்ணை உனக்குக்

கொடுக்கலாம் என்ற நல்ல எண்ணத்தில்தான். ஆனால் நீ உன்மீது நான் வைத்துள்ள நம்பிக்கையை யெல்லாம் தகர்த்தெறிந்து விட்டாய்!''

"எனது படிப்பைக் கண்டுதான் தேர்ந்தெடுத்தீர்கள் என்று நம்பினேன்.''

"இனி, தெரிந்து கொள்வாய்!''

"அவ்வளவு தூரம் உங்களுக்குச் சிரமம் வைக்க நான் ஆசைப்படவில்லை. இந்தாருங்கள்! இந்தக் கடிதத்தைப் படியுங்கள்!'' என்று கூறி ஒரு சிறு கடுதாசியைக் கொடுத்தான் சங்கரன்.

கடிதத்தை மானேஜர் உரக்கப் படித்தார்: "தங்கள் காரியாலயத்தில் இனி வேலை செய்ய நான் பிரியப்படவில்லை. என் வேலையை ராஜினாமா செய்கிறேன். இதுவரை என்மீது தாங்கள் அன்பு செலுத்தி வந்ததற்கு என் நன்றி. சங்கர்.''

"சங்கர்! அவசரப்பட்டு நீ செய்த காரியத்துக்குப் பின்னால் மிகவும் வருந்துவாய். என்னிடமே மறுபடியும் வந்து நிற்பாய்!'' என்று கட கட வென்று சிரித்தார் மூர்த்தி.

"நான் அன்புக்குப் பணிவேன்; அதிகாரத்துக்கு அடிமைப்பட விரும்பவில்லை. இந்த உலகம் விரிந்து பரந்தது. அதில் என்னை ஏற்க எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருப்பார்கள்'' என்று கூறி விட்டு வெளியேறினான்.

சங்கரன் ஏதோ அவசரத்தில் ராஜினாமா செய்து விட்டானே தவிர அவன் மனம் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப் படத்தான் செய்தது. அவன் வேலை ராஜினாமா செய்ததை உடனே தாயாரிடம் சொல்லி அவளை வேதனைப் படுத்த விரும்பவில்லை. மத்தியானம் முழுதும் கடைத்தெருவைச் சுற்றி அலைவதில் கழித்தான்.

மாலையானதும் வழக்கம் போல் சங்கரன் ராகவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்த சமயம் ராகவன் வீட்டில் இல்லை.

"பத்மா! அப்பா இல்லையா!'' என்று சோர்ந்த முகத்தில் புன்னகையை வரவழைத்தபடி கேட்டான் சங்கரன்.

"அப்பா வெளியில் போயிருக்கிறார். இப்பொழுது வந்து விடுவார்! ஆமாம்! உங்கள் முகம் ஏதோ சோகத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தோன்றுகிறதே!'' என்றாள் பத்மா.

"ஒன்றுமில்லை. வெய்யிலில் அலைந்ததினால் ஏற்பட்ட களைப்பில் அலுத்துப் போயிருக்கிறேன். அவ்வளவுதான்!'' என்று உண்மையை மூடி மறைத்தான் சங்கரன்.

"அதெல்லாம் இல்லை. உங்கள் சோகத்தின் காரணம் எனக்குத் தெரியும்; அப்பாவுக்குக் கூடத் தெரியும்!''

"என்ன!'' என்று வியப்புடன் கேட்டான் சங்கரன்.

"நீங்கள் ரமணி சாய வர்ணக் காரியாலயத்தில் வேலையில் இல்லை!'' என்றாள் பத்மா.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது! யார் சொன்னார்கள்!'' என்றான் சங்கரன் பரபரப்புடன்.

"மத்தியானம், 'இன்றுமாலை வீட்டுக்கு வர வேண்டாம்' என்று சொல்வதற்காக உங்கள் ஆபிசுக்கு அப்பா போன் பண்ணினார்கள். நீங்கள் ஆபிஸில் வேலையிலில்லை என்று தெரிந்தது!''

"அப்படியா!'' என்று அயர்ந்து போய் விட்டான் சங்கரன். வேலை போனதால் பேராசிரியர் மதிப்பாரோ, மதிக்க மாட்டாரோ என்ற கவலை வந்து விட்டது அவனுக்கு. இடிந்து போய்ச் செயலிழந்து உட்கார்ந்து விட்டான் சங்கரன்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம். அப்பா, புதிதாகக் கம்பெனி ஒன்று ஆரம்பிக்கப் போகிறார். அதில் உங்களை மானேஜராக ஆக்கப் போகிறேன் என்று அவர் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்!'' என்று புன்னகை தவழக் கூறினாள்.

மாணிக்க முதலியார் மறைந்தார்

● ரங்கூன் மாணிக்கம் என்று நாடகமேடை மூலம் புகழ்பெற்றவரும், வாத்தியார் மாணிக்கம் என்று அச்சுத் தொழிலாளர்களால் அன்புடன் அழைக்கப் படுபவருமான திரு டி. வி. மாணிக்க முதலியார் மேமீ 28உ அன்று இறைவன் திருவடி நிழலை அடைந்தார். எட்டு பெரிய விழுதுகளையும் எண்ணற்ற இளம் விழுதுகளையும் உடைய பெரிய ஆல மரம் போல, மூன்று புதல்வர்கள், ஐந்து புதல்விகள், ஏராளமான பேரப் பிள்ளைகளையும் கொண்ட தமது பெரிய குடும்பத்தினர் சூழ்ந்து நிற்க, நன்கு முற்றிப் பழுத்த இலை மரத்திலிருந்து விழுவது போலத் தமது எண்பதாவது வயதில் கவலையற்ற மரணம் அடைந்தார். கடைசி நேரம் வரை திட சரீரத்துடனும், தெளிந்த அறிவுடனும் இருந்தார்.



கல்லெல்லாம் மாணிக்கக் கல் ஆகுமா! மனிதர் எல்லாரும் மனிதர்கள் ஆவாரா! திரு மாணிக்க முதலியார் மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர். பாடு பட்டு முன்னுக்கு வந்தவர். பதினொரு மக்களைப் பெற்றுப் பொறுப்புள்ள தந்தையாகத் திகழ்ந்தார். ஒரு தந்தைக்கு உரிய வினைகளை யெல்லாம் கடமை உணர்ச்சியுடன் நிகழ்த்தினார். திரு மாணிக்க முதலியாரின் பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கும், அவர் மூத்த புதல்வரும், பொதுநல ஊழியரும், "கல்கி'' அச்சக போர்மேனுமான திரு டி. எம். ராஜகோபாலருக்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ● ● ●

'' அதுமட்டுமல்ல, பத்மா! சங்கரனை என்னுடைய மாப்பிள்ளையாக்கிக் கொள்ளப் போகிறேன். அதற்குச் சங்கரனுடைய தாயாரின் சம்மதமும் பெற்று விட்டேன் '' என்று கூறிக்கொண்டே வந்தார் பேராசிரியர் ராகவன்.

அதைக் கேட்டதும் சங்கரன் தான் காண்பது கனவா நனவா என்று தெரியாமல் திகைத்து நின்றான். கல்லும் முள்ளும் நிறைந்த அதிகாரப் பாதையிலிருந்து விடுபட்ட சங்கரனுக்கு அன்பின் பாதையிலே பத்மா வழிகாட்டியாக அமைந்துவிட்டாள்.

திரு. வி. க. மணிமண்டப நிதி

ராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையை யொட்டிய திறந்தவெளியில் கட்டுவதாகத் தீர்மானித்துக் கால்கோள் விழாவும் நடத்தப்பட்ட திரு. வி. க. மணிமண்டபத் திருப்பணிக்கு முன் அறிவிக்கப்பட்டவை தவிரப் பின் வரும் நன்கொடைகள் கிடைத்திருக்கின்றன :—

திருவாளர்கள்: ஏ. நாகப்பச் செட்டியார், சென்னை, ரூ. 501; எஸ்.எம். முருகப்பச் செட்டியார், சென்னை, ரூ. 250; குப்புசாமி முதலியார் அண்டு கம்பெனி, சென்னை, ரூ. 101; எஸ். பாலசுப்பிர மணிய முதலியார் ரூ. 101; கலைமகள் கல்லூரி மாணுக்கியர், கொப்பனும் பட்டி ரூ. 101; வி. ஆர். மோகனகிருஷ்ணன், சென்னை ரூ. 100; திரு சிவபழமலை, தமிழக ஆட்சி மொழி மகாநாடு வரவேற்புக் கமிட்டித் தலைவர் ரூ. 100; டாக்டர் குன்னப்ப நாயுடு, காரியதரிசி, கோவாபரேடிவ் டவுன் பாங்கு, காவன்பட்டினம், சேலம், ரூ. 100; ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர், ரூ. 100;

ஸ்ரீமான்கள் பலராம முதலியார், வைத்திய நாதன் மூலம் கடற்கரை ஸ்டேஷன் ரயில்வே சிப்பந்திகள் 147 பேர் நன்கொடை ரூ. 91.

திரு எஸ். வெங்கடராம செட்டியார் (ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி, திருப்பதி) மூலம் ரூ. 71-6-0 க்கு விவரம்:—திருவாளர்கள் எஸ். வி. ஓ. கல்லூரித்தமிழ் மாணவர் ரூ. 6-8-0; க. பழனிசாமி, திருவேங்கடவன் கலைக் கல்லூரி ரூ. 5; ஆர். ஆறுமுகம் ரூ. 5; எஸ். வி. ஓ. கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு கே. எஸ். விஸ்வநாத சாஸ்திரி, ரூ. 5; எஸ். வி. ஓ. ஆராய்ச்சிக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், கே. பாலசுந்தர நாயக்கர் ரூ. 5; திருப்பதி நகராண்மைக் கழக உறுப்பினர் வீரப்பன் ரூ. 5; பி. வி. ராமானுஜம் ரூ. 4; எம். ஆட்கொண்டான் ரூ. 3; திருமதி ந. பர்வதவர்த்தினி அம்மை ரூ. 3; எஸ். வி. உயர்நிலைப் பள்ளி தமிழ் ஆசிரியர் பி. வெங்கடாசலம் ரூ. 3; என். முத்துகுமாரசாமி ரூ. 2 0-6. ரூ. 2 கொடுத்தவர்கள் : எம். ஜி. சூரியராமன்; டி. ச. வீரராகவன்; எஸ். ராமசாமி; லட்சுமி நரசிம்மன்; திருமதி ப. பாரதி; எம். ஏழுமலை; திருமதி டி. சாரதா; திருமதி ந. ரங்கநாயகி. ரூ. 1 கொடுத்தவர்கள் : என். என். சதாசிவ ராவ்; வி. சீனிவாசன்; டி. கே. கோபாலசாமி ஐயங்கார்; ஜி. லீலாகிருஷ்ணன்; ஏ. நடராஜன்; கே. அனந்தாச்சாரி; எம். எஸ். நாகராச ராவ்; கே. கே. நாராயண ராவ்; டி. வி. கோபாலாச்சாரி; ஆர். வெங்கடராமன்; (மணியார்டர் கமிஷன் போக வரவு ரூ. 71—6—0.)

திரு ஏ. பி. பழனியப்பச் செட்டியார். சிறம்பான், மலேயா மூலம் ரூ. 50-க்கு விவரம் :—திருவாளர்கள் : பழனியப்பச் செட்டியார் ரூ. 11; ரெத்தினம் ரூ. 6; ராமஸ்வாமி செட்டியார், ரூ. 4-8-0; சிதம்பரஞ் செட்டியார் ரூ. 4-8-0; ரூபாய் 3 கொடுத்தவர்கள்: சிங்காரம் செட்டியார்; முத்தைய செட்டியார்; சாமிநாதன் செட்டியார்; பெரிச்சியப்பச் செட்டியார்; வேதாந்தம்; வள்ளியப்ப செட்டியார்; வேலாயுதம் பிள்ளை; முருகையா செட்டியார்.

திரு ரா. கந்தசாமி மூப்பனர், கும்பகோணம், ரூ. 50—0—0.

சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, க கல்யாணம் மூலம் ரூ. 40—2—9க்கு விவரம் :— கைத்தொழில் வகுப்பு ஆசிரியரும் மாணவரும், ரூ. 11-4-0; மற்ற மாணவரும் ஆசிரியரும் ரூ. 6; டி. பி. சந்தானகிருஷ்ண நாயுடு தலைவர் ரூ. 5: க. கல்யாணம், மாணவர் ரூ. 5; இன்டர் கார்டன் வகுப்பு, ஆசிரியரும் — மாணவரும் ரூ. 3-11-9; லக்ஷ்மி நாராயண ஐயர் ரூ. 2; வேதமணி மானுவேல் ரூ. 2; IV-B வகுப்பு மாணவரும்— ஆசிரியரும் ரூ. 1-11-0; வைத்தியநாதன் ரூ. 1; ராமச்சந்திரன் ரூ. 1; என். ராமா ராவ் ரூ. 1.

திரு கே. நாராயணசாமி, டில்லி தமிழ்ச் சங்கம் மூலம் ரூ. 40க்கு விவரம் : திரு. டி. ஜி. அனந்தஸ்வாமி ரூ. 20; திரு கந்தா ரூ. 10; திருமதி எம். எஸ். கமலா ரூ. 10.

கே. நரசிம்மலு நாயுடு, காட்பாடி ரூ. 40; செங்கை முருகையா, விக்கிரமசிங்கபுரம் ரூ. 31: சிவசேனபதி பி. டி. குமாரசாமி செட்டியார், கும்பகோணம், ரூ 30; எம். கங்காதர முதலியார், தலைவர், வேதாந்த சங்கம், குடியாத்தம், ரூ. 25; இரத்தினசாமி, சிதம்பரம், ரூ. 25; டாக்டர் ஏ. எஸ். பாண்டியன், தஞ்சை, ரூ. 25; பழ. கிருஷ்ணச் செட்டியார், தஞ்சை, ரூ. 25; ஆர். கண்ணப்ப முதலியார், செங்கற்பட்டு, ரூ. 20.

திரு த. கு. ஐயாசாமி, தக்ஷிண ரயில்வே, மைசூர் மூலம் ரூ. 16-க்கு விவரம் :

திருவாளர்கள்: ஆ. கனகசபாபதி ரூ. 2; ரூ. 1 கொடுத்தவர்கள் : ச. நடராசன்: விஜயராகவலு; சீனிவாசன்; கோபால கிருஷ்ணன்; வடிவேல்; பழனிச்சாமி; சுப்பிரமணியம்; சுப்பிரமணியம்; அய்யாச்சாமி; சண்முகம்; பெரியசாமி; லக்ஷ்மணன்; ஒரு ரூபாய்க்குக் குறைந்த வசூல் ரூ. 2.

ரு. வெ. க. சுந்தரம். சூலூர் ஜில்லா போர்டு ஹைஸ்கூல் ரூ 15; வித்வான் கொன்றையாண்டி, புனல்வேலி உயர்நிலைப் பள்ளி, சேலம் ரூ. 15; ம. பத்மா, ம. ஜெயலக்ஷ்மி, அலசூர் பெங்களூர் ரூ. 10; டி. எஸ். ஆறுமுகம், ஹிந்துஸ்தான் விமானக் கூடம், பெங்களூர் ரூ. 10; கே விசுவநாதம் பிள்ளை, செயலாளர், சென்டிரல் பாங்கு, தஞ்சை ரூ. 10; பாஸ்கரத் தொண்டைமான், தஞ்சை ரூ. 10; ஆர். கிருஷ்ணமூர்த்தி, பார்ஸல் ஆபீஸ், நைரோபி, கென்யா (7 ஷில்லிங்) ரூ 5; உ. மு. பாலுசாமி, திரு. வி. க. நூல் நிலையம், ஈரோடு ரூ. 5; ஆக்கூர் அனந்தாச்சாரி மூலம் ஓர் அன்பர் ரூ. 2.

குறிப்பு :— திரு வி க. மணி மண்டப நிதிக்கு நன்கொடைகள் அனுப்ப விரும்புவோர் ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., காரியதரிசி, திரு. வி. க. மண்டப அமைப்புக் குழு, 175/A லாயிட்ஸ் ரோட், சென்னை, 14. என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்.











மலர்ந்த மனம்

ஆர். எஸ். ஞானம்பாள்

சகல வாத்தியங்களும் முழங்க, மாங்கல்ய தாரணம் ஆயிற்று. ராமநாதன் நிம்மதியாக நெடிய பெரு மூச்சு விட்டார். அவருடைய ஒரே அருமைப் பெண்ணான கமலாவுக்குக் கல்யாணமாகி விட்டது. அவருக்கு மாப்பிள்ளை வந்து விட்டான். அவர் மாமனாராகி விட்டார். அவர் சம்பந்தி எடுத்து விட்டார். மூன்றும் வயதில் தகப்பனையும், நாலாம் வயதில் தாயையும் இழந்து விட்டு, ஒரு வாய்ச் சோற்றுக்கு ஊர் ஊராக அலைந்து திரிந்து இடி சோறு தின்று, அடி நாளில் ஆயிரம் கஷ்டப்பட்ட அவரும் உலகில் ஒரு மனிதராகி விட்டார். ராமநாதனுக்குப் பழைய காட்சிகளெல்லாம் கண்ணெதிரே ஓடி மறைந்தன. பழைய நினைவுகள் என்றும் அவர் மனத்தைவிட்டு அகன்றதே இல்லை.

'மாப்பிள்ளை வந்தானா? பெண்ணுக்குக் கல்யாணம் ஆச்சா!' என்று சந்தோஷம் விசாரிப்பவர்களும், தாம்பூலம் எடுத்துக் கொள்கிறவர்களும், ஹோமப் புகையுமாக அமளிப்படும் கல்யாணக் கூடத்தை விட்டு, வாசலுக்கு வந்து சிறிது சிரம பரிகாரம் செய்துகொள்ளத் திண்ணையில் உட்கார்ந்தார். வாசலில் கட்டியிருந்த வாழைக் கம்பத்திலிருந்து பட்டையை உரித்துக் கொண்டு படார், படார் என்று மேழ அடித்துக்கொண்டும், ஊதல் ஊதிக் கொண்டும் குதித்துக் கொம்மாளம் அடித்துக் கொண்டும் இருந்தனர் ஐம்பது அறுபது குழந்தைகள். அதில் கல்யாண வீட்டுக்கு வந்த குழந்தைகளுடன் உள்ளூர்க் குழந்தைகளும் கலந்திருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் மணியும் ஒருவன். ராமநாதனைக் கண்டதும் 'மாமா!' என்று அருகில் வந்து சுவாதீனமாக உட்கார்ந்து கொண்டான். மணியிடம் அவருக்குத் தனி வாஞ்சை. மணியைப் பார்க்கும்பொழுது, அவர் மணியைக் காணவில்லை; தம்மையே கண்டார். தாம் சிறுவனாக இருந்த காலத்தை நினைத்துக் கொண்டார்.

"என்னடா மணி! அக்காவுக்குக் கல்யாணமாச்சே! நீ பார்த்தாயோ!" என்று அன்புடன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

"ஓ, பார்த்தேனே! அக்கா உன் மடியிலே உட்கார்ந்து கொண்டாளே! ஏன் மாமா! நானும் உன் மடியிலே உட்காரட்டுமா!" என்று கேட்ட அவன் அனுமதி கிடைக்கு முன்பே அவர் மடியில் உட்கார்ந்து விட்டான். ராமநாதனின் நெஞ்சு உருகி விட்டது. "நீ இட்டிலி சாப்பிட்டாயோ!" என்று அன்புடன் விசாரித்தார்.

"சாப்பிட்டேன், மாமா! அந்த ராஜாமணி தான் என்னை விரட்டுகிறான். போடா, எங்கள் அத்தங்காள் கல்யாணத்துக்கு நீ ஏன்டா வருகிறாய் என்று கேட்கிறான். நான் உங்களுக்குச் சொந்தமில்லையா, மாமா!" என்றான் மணி. அந்தப் பாலகன் முகத்தில் இழைந்து கிடந்த பரிதாபம் அவரை என்னவோ செய்தது.

'யாருடா கண்ணா சொன்னது, நீ எனக்குச் சொந்தமில்லேன்னு! நீ என் தங்கமாச்சே! உன்னை விட யாருமே எனக்கு உயர்த்தி இல்லையடா" என்று கூறி அவன் கன்னத்தில் அன்புடன் முத்தமிட்டார் ராமநாதன்.

"இல்லே, மாமா! எனக்கு 'வீடே' இல்லையாம். கூப்பிடாத வீட்டுப் பசங்களுக்கெல்லாம் லட்டுப் போட மாட்டார்களாம். ராஜாமணி சொன்னான். குழந்தைகளுக்கே பூந்திதான் போடுவார்களாம். எனக்கு அதுகூடப் போட மாட்டார்களாம்" என்று சொல்லும்பொழுதே அந்தப் பாலகனின் கண்கள் நீரால் நிறைந்தன.

"அவன் கிடக்கிறான், அசட்டுப் பயல்! அவன் தான் கண்டானா!" என்றார் ராமநாதன். அதற்குள், "அத்திம்பேர்! அத்திம்பேர்! என்ன இங்கே வந்து உட்கார்ந்துவிட்டீர்களே! மணையை விட்டுத் தம்பதிகள் எழுந்தாச்சு! சம்பந்திப் பேர்கள் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று அவசரப்படுத்தினான், அங்கே

வந்த அவர் மைத்துனன் மாலி. கல்யாணத்தை முன்னின்று நடத்தும் பொறுப்புடன் பணத்தையும் அவனிடமே ஒப்படைத்து விட்டுக் கவலையற்றிருந்தார் ராமநாதன்.

"யார் இந்த வாண்டு! சமய சந்தர்ப்ப மில்லாமல் மடியில் வந்து உட்கார்ந்து கொஞ்சிக்கொண்டிருக்கிறது!" என்றான் மாலி.

"மணி! இறங்கப்பா! உன்னை வேலை யிருக்கிறது!" என்று அவனை இறக்கி விட்டு எழுந்தார் ராமநாதன். மணிக்கு மாலி மாமாவைப் பிடிக்கவே இல்லை. ராஜாமணியின் அப்பா தானே! ராஜாமணி மாதிரிதானே பொல்லாதவராக இருப்பார்! மணி குதித்துக்கொண்டே தோழர்களிடம் ஓடி, "டேய்! எனக்கு முழு லட்டுப் போடுவார்களடா. ராமநாத மாமாவே சொன்னார்டா! உங்களுக்கெல்லாம்தான் பூந்தி" என்று பெருமையடித்துக் கொண்டான்.

"ஏண்டா, நிஜமாகவா! டேய் மணி! எனக்கும் முழு லட்டுப் போடச் சொல்ல மாட்டியாடா? நான் உன் கூடப் பழம்: இனிமேல் காயே விட மாட்டேன்!" என்று நாலைந்து சிறுவர்கள் மணியுடன் ஒட்டிக் கொண்டனர்.

மணியும் கம்பீரமாக, "ராமநாத மாமா நல்லவர். எல்லோருக்குமே முழு லட்டுப் போடச் சொன்னால் கூடப் போடுவார்!" என்றான்.

ராஜாமணிக்குப் பொறுக்க வில்லை. அவன் மணியைவிட இரண்டு வயசு பெரியவன். தடலடிப் பேர்வழி. மணியின் கட்சி ஓங்குவது அவனுக்குச் சகிக்கவில்லை. அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே, "இந்த மகாராஜாதான் கண்டு விட்டார்! மகாராஜாவே! உங்களுக்கும் உங்கள் பரிவாரங்களுக்கும் நிச்சயம் முழு லட்டுக் கிடையாது; லட்டுப் பொடிதான். பிடித்ததே ஆயிரம் உருண்டைதான். சம்பந்திகளுக்கு ஊருக்கு வேறு கட்டித்தர வேணும். பெரியவர்கள் இலைக்குப் போட வேண்டும். நாளைக்குத் தேநீர் விருந்துக்கு வேறு வேணும். இந்தப் பெரிய மனுஷர்களுக்கு லட்டுப் போட மாட்டார்களோ லட்டு! அதுவும் முழு லட்டு! போடா போ!" என்று சொன்னான்.

"டேய், இலை போட்டாச்சு! ஓடி வாங்கடா, இடம் பிடிக்க!" என்று ஒருவன் கத்தவே 'ஹோ' என்ற இரைச்சலுடன் கூட்டம் கிளம்பியது. ராஜாமணியின் பேச்சால் ஏற்பட்ட துக்கம் நொடியில் மறைய மணியும் குதூகலத்துடன் அவர்களைத் தொடர்ந்து ஓடினான்.

"டேய், நீ என் பக்கத்தில் உட்காருடா!"

"மாமா! இந்த இலை கிழிசல். வேறு இலை தாருங்கள்!"

"போடா, தடியா! ஏண்டா, என் இடத்திலே தண்ணீரைக் கொட்டினாய், கழுதை!"

அடி, தடி, உதை, குத்து. சுந்துவுக்கும் பாலுவுக்கும் ரோஷமான குத்துச் சண்டை ஆரம்பமாகி விட்டது. ஒருவரை ஒருவர் கட்டிப் புரளத் தொடங்கினர்.

"ஏய், சுந்து! பாலு! மாலி மாமா கோபமாக வருகிறார்! சண்டை போடாதீர்கள்! அப்புறம் லட்டு கிடைக்காமல் போய் விடும்!" என்று மணி எச்சரிக்கை செய்தான். பையன்கள் கப்புச் சிப்பென்று அடங்கி விட்டனர்.



ஆனால் புலியையும், சிங்கத்தையும் அருகருகே வைத்தாற்போல் உறுமிக் கொண்டிருந்தனர். மறுபடி சண்டை மூண்டு விடும்போல் தோன்றியது. வரிசையின் நடுவில் உட்கார்ந்திருந்த மணி எழுந்து, "சுந்து! இங்கே என் இடத்தில் உட்கார்ந்து கொள்ளுடா! நான் பாலு பக்கத்தில் உட்கார்ந்துகொள்கிறேன். சும்மா சண்டைபோட வேண்டாம்" என்றான். சுந்துவுக்கு வெகு மகிழ்ச்சி. பெரிய இலையை மணி கொடுத்து விட்டுப் போய் விட்டான். மணி பாலுவுக்கருகில் சுந்துவின் இடத்தில் போய் அமர்ந்தான். அது தாழ்வாரத்தின் கோடி. அவன் இலைதான் கடைசி இலை. மணிக்குப் பக்கென்றது. பரிமாறுபவர் கவனிக்காமல் போய்விட்டால் என்று அவன் மனத்தில் அச்சம் மூண்டது 'சேச்சே! அப்படிச் செய்வார்களா! இந்தப் பக்கமிருந்துதான் பரிமாறவே ஆரம்பிப்பார்கள். முதல் இலை என்னுடையது தான்" என்று மணி தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

"டேய், கிட்டு! நீ லட்டு தின்றிருக்கிறாயோ!"

"ஓ! எங்கள் வீட்டில் தீபாவளிக்கு நிறையச் செய்வார்களே!"

"ஆமாம், முந்திரிப் பருப்பு, திராட்சைப் பழம், கல்கண்டு எல்லாம் போட்டிருப்பார்கள். ரொம்ப நன்றாயிருக்குமடா!" என்று சப்புக் கொட்டினான் ஒருவன்.

"எங்கள் அண்ணாவின் பூணூலுக்கு நிறையப் பண்ணினார்களடா. ஆனால் எங்கள் அம்மா கடலை மா உடம்புக்காகாது என்று கொஞ்சம் தான் கொடுத்தாள்" என்று அங்கலாய்த்துக் கொண்டான் வேறு ஒரு சிறுவன்.



"போடா! உங்கள் வீட்டு லட்டு நன்றாகவே இல்லை. சிக்கு வாசனை அடித்தது. கடலை எண்ணெயில் செய்தது என்று எங்கள் அம்மா சொன்னாள். என் பிறந்த நாளைக்கு, நெய்யிலேயே பூந்தி தேய்த்து, லவங்கம் எல்லாம் போட்டு லட்டுப் பிடித்தார்களே! எத்தனை நன்றாயிருந்தது, தெரியுமா!" என்றான் ஒரு செல்வச் சிறுவன்.

"ஏன்டா மணி! நீ லட்டுத் தின்றிருக்கிறாயா!"


மணி திரு திருவென்று விழித்தான். பிறந்த பத்தாம் நாள் தாயையும், இரண்டாம் வயதில் தந்தையையும் இழந்து விட்ட அவன் ஊரார் கருணையில்தான் உயிர் வாழ்ந்து வந்தான். பழைய சோற்றுக்கும், ஊசிப்போன குழம்புக்கும் ஏங்கி நின்ற அச் சிறுவன் லட்டுவின் வாசனையை எப்படி அறிவான்!

"ஏன்டா, நீ லட்டுத் தின்னதில்லை!" ஆச்சரியக் குரல்கள் பல ஒலித்தன.

"பார்த்திருக்கிறாயோ! பந்து மாதிரி உருண்டையாக மஞ்சளாக இருக்கும்" என்று விவரித்தான் ஒரு சிறுவன்.

"சொல்லக் கூடாதோ! எங்கள் வீட்டிலே செய்தார்களே! கேட்டால் நான் உனக்குக் கொடுத்திருப்பேனே!" என்றான் இன்னொரு பையன்.

மணி பொங்கி வரும் கண்ணீரை எப்படியோ அடக்கிக் கொண்டு "சரிதான், போடா! இன்று தான் லட்டு தின்னப் போகிறேனே!" என்றான் சிறிதும் தன் பிகுவை விடாமல்.



"பசங்களா! சற்றுப் பேசாமல்தான் இருங்களேன். சந்தைக் கடை மாதிரி என்ன இரைச்சல்!" என்று அதட்டினார் பரிமாறுபவர்.

"கப்சிப் கடலுப்" என்று கத்தினான் ராஜாமணி.

பையன்கள் இலையைப் பார்த்தனர். பேச்சு சுவாரஸ்யத்தில் கவனிக்காமல் இருக்கும்பொழுதே பாயசம், கறி, கூட்டு, கோசும்பரி, பருப்பு எல்லாம் பரிமாறி விட்டதை அப்போதுதான் கண்டனர். சாதம் வருவதற்கு முன் எல்லா இலைகளும் வழித்துத் துடைத்து வைக்கப் பட்டிருந்தன. மணி பயந்தபடி பரிமாறுகிறவர்கள் அவன் இலையைக் கவனிக்காமல் போய் விடவில்லை. அவன் இலையிலிருந்துதான் மோர்க் குழம்பு ஊற்றத் தொடங்கினர். சாம்பார் எதிர்ப்புறமிருந்து வந்தது. ரஸம் இந்த ஓரத்திலிருந்து போயிற்று. அப்பளம் மணிக்குத்தான் முதலில் கிடைத்தது. போடுகிறவர் கை தவறி அவன் இலையில் இரண்டு அப்பளத்தைப் போட்டு விட்டார். மணிக்கு ஒரே ஆனந்தம்!

லட்டு வந்து விட்டது. நல்ல வேளை. ராஜாமணியின் அப்பா சிடுமூஞ்சி மாலி மாமா எடுத்து வரவில்லை. வேறு ஒருவர் எடுத்து வந்தார்.

"மாமா, லட்டு!"

"லட்டு எனக்கு, மாமா!"

"மாமா, இலையில் போடாதேங்கோ. கையில் கொடுத்திடுங்கோ!"

"எனக்கும் கையிலே!"

"எனக்கும்!"

"எனக்கும்" என்றும் ஏக காலத்தில் நூறு குரல்கள் கூவின. அவ்வளவு இடது கைகளும் முன்னால் நீண்டன.

"சட், கழுதைகளா! கூச்சல் போட்டால் ஒருவருக்கும் ஒன்றும் கிடையாது" என்று கத்தி விட்டுப் பாத்திரத்தில் கையை விட்டுக் கொண்டே குனிந்தார். துரதிர்ஷ்டம்! எதிர்ப்புறமிருந்து தான் போட ஆரம்பிப்பார் போலிருந்தது. மணியின் இலைதான் கடைசி இலை!

இத்தனை பேரையும் தாண்டி நம் இலைக்கு வரவேண்டுமே! கடைசியில் தான் நமக்கு. அதற்குள் எல்லோரும் லட்டுவை ருசி பார்த்து விடுவார்கள்.

மணியின் இருதயம் வேகமாக அடித்துக் கொண்டது. துக்கம் நெஞ்சை முட்டியது.

அவன் கண்கள் கோடி இலையில் விழப் போகும் லட்டுவைக் காண அலைந்தன. நன்றாகக் குனிந்து கூர்ந்து நோக்கினான். ஒரு விநாடியில் அந்தப் பந்தி முழுவதையும் ஏமாற்றம் சூழ்ந்து கொண்டது. பூ! தூள் தான்! வெறும் சர்க்கரைப் பூந்தி! பரிமாறுபவர் சரசர என்று இலைகளில் போட்டுக் கொண்டு போனார். அவர் கை விட்டு அள்ளும் பொழுது கை நிறைய வருவது போலிருந்தது, தூரத்திலிருந்த மணியின் கண்களுக்கு. ஆனால் பையன்களின் இலையில் பத்துப் பதினைந்து பூந்திகள் தான்

விழுந்தன! மணி துடிக்கும் இதயத்துடன் காத்துக் கொண்டிருந்தான்.

ஐயையோ! இதென்ன பாலுவின் இலைக்குப் பூந்தியைப் போட்டு விட்டு அவர் பாத்திரத்தைச் சாய்த்துக் கொண்டு போகிறாரே! பூந்திப் பாத்திரம் காலி!

"மாமா! மாமா!! எனக்குப் பூந்தி போடவில்லையே, மாமா!" மணியின் கூப்பாட்டையும் அழுகையையும் பையன்களின் சிரிப்பும் ஏகத்தாளமும் அமுக்கி விட்டன.

ராஜாமணி பரிகாசம் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்ட பின் சும்மா இருப்பானா! "என்ன, மணி! என்னவோ பெருமை அடித்துக் கொண்டாயே! முழு லட்டு எங்கே கிடைத்தது! உங்கள் ராமநாத மாமா இந்தப் பக்கம் எட்டிப் பார்த்தாரா, பார்த்தாயா! இந்தக் கல்யாணத்திலே அவருக்கு ஏது முழு அதிகாரம்! எங்கள் அப்பா நினைத்திருந்தால் முழு லட்டுப் போட்டிருக்கலாம். முழுசென்ன! மூன்று லட்டுக் கூடப் போட்டிருக்கலாம். எனக்குத்தான் முன்னாடியே தெரியுமே! அதனால் தானே அப்பொழுதே சொன்னேன்!" என்றான்.

மனம் உடைந்துவிட்ட மணிக்கு அவன் சொன்னதெல்லாம் எங்கே காதில் விழுந்தது! அவன் கவனம் தான் இலையில்கூட இல்லையே!

இலையில் பாயசம் ஊற்றப்பட்டிருப்பதையோ, மோருக்குச் சாதம் கேட்கப்படுவதையோ தனக்குப் பிடித்த மாங்காய் ஊறுகாய் பரிமாறப்படுவதையோ கூடத்தான் அவன் கவனிக்கவில்லையே! நெஞ்சு உடைந்து விடும்போல் அவன் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். கண்ணீரை ஆறாகப் பெருக்கிக் கொண்டிருந்தான். கல்யாண வீட்டில் அவரவர் அவசரம் அவரவர்களுக்கு. மணி ஏன் அழுகிறான் என்று கேட்பாரைக் காணோம்!

"உடம்பே சரியில்லை! ஒரு டம்ளர் காப்பி போதும்!" என்று காப்பியைக் குடித்து விட்டுத் திருப்தியாக ஏப்பம் விட்டுக் கொண்டே கூடத்துக்கு வந்த ராமநாதனின் கண்களில் தாழ்வாரத்தில் மணி இடது கையால் கண்களைத் தேய்த்துக் கொண்டு கேவிக் கேவி அழும் காட்சி தென்பட்டது. ராமநாதன் பதறிப் போனார். 'அடாடா! அந்தக் குழந்தை அப்பொழுதே சொல்லிற்றே! குழந்தைகளுக்கு எல்லாப் பதார்த்தங்களும் சரியாகப் போட்டார்களோ, என்னமோ! நினைவே இல்லாமல், கவனிக்காமல் இருந்து விட்டேனே! மணி ஏன் அழுகிறான்!' என்று தம்மையே நொந்தபடி விரைந்தார்.

"ஏன் மணி, அழுகிறாய்! நீ சாப்பிட்டாச்சோ! உனக்கு என்ன வேணும்! யாராவது உன்னைத் திட்டினார்களா!"

அவருடைய பரிவான குரல் காதில் விழுந்ததுமே, எச்சில் கை என்பதையும் மறந்து மணி அவரை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு 'மாமா! மாமா!' என்று கேவினான். அதற்கு மேல் அவன் வாயிலிருந்து வார்த்தை எழும்பவில்லை. ராமநாதனுக்கும் அழுகை வந்து விட்டது. "அழாதேடா கண்ணு! அழாதேயப்பா!" என்று அவனைத் தூக்கித் தோள்மீது சாத்திக் கொண்டு முதுகைத் தடவிக் கொடுத்தார். அதற்குள் 'என்ன அங்கே!' என்று ஓரிருவர் வந்தனர்.

"ஏதாவது சம்பந்திச் சண்டையோ!" என்று விசாரிக்கும் ஆவலுடன் பெரிய கூட்டமே கூடி விட்டது. ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை.

"என்னடா நடந்தது!" என்று கேட்டார் ராமநாதன். அவர் கோபத்தைக் கண்டு உள்ளூற நடுங்கினாலும், ராஜாமணி தைரியமாகவே "ஒன்றுமில்லை, அத்திம்பேரே! இவன் முதலிலிருந்தே 'முழு லட்டுப் போடப் போகிறார்களே, லட்டுத் தின்னப் போகிறோமே!' என்று பெருமையடித்துக் கொண்டிருந்தான். ஆனால் குழந்தைகளுக்கு லட்டுப்பொடிதான் போட்டார்கள். இவன் இலைக்கு வரும்போது லட்டுப் பொடி தீர்ந்து போய் விட்டது. தனக்கு அதுவும் கிடைக்கவில்லை என்று பலமாக அழ ஆரம்பித்து விட்டான்!" என்று விவரத்தைக் கூறினான்.

அதைக் கேட்ட ராமநாதன் ரௌத்திராகாரம் பூண்டார். "எங்கே அவன், மாலி!" என்று உரக்கக் கேட்டார். மைத்துனன் மாலி மௌனமாக எதிரே வந்து நின்றான்.

"ஏண்டா! நான் உன்னிடம் என்ன சொல்லியிருந்தேன்! 'வேறு எந்தச் செலவிலாவது கொஞ்சம் குறைந்தாலும் பாதகமில்லை. குழந்தைகளுக்குப் பரிமாறும்போது 'கஷ்கம்' பிடிக்காதே! லட்டுப் போட்டால் குழந்தைகளுக்கு முழுசாக, உடைக்காமல் போடு' என்று படித்துப் படித்துச் சொல்லியிருந்தேனா, இல்லையா! லட்டுவை உடைத்து உதிர்த்துப் போடுவதால் எத்தனை இளம் மனசு உடைந்து தூளாகப் போகிறது என்று உங்களுக்குத் தெரியுமா!" என்றார். ராமநாதனுக்கு மூச்சு மண்டியது. வியர்வை பெருகி வழிந்தது.

"இந்த மணி மாதிரிதான் நானும் ஒரு அநாதைச் சிறுவனாக இருந்தேன். இதே லட்டு கிடைக்காமல், பொடி கிடைத்து அவமானப்பட்டுக் காவேரியில் இறங்கி உயிரைவிட இருந்தேன். தெய்வம் மனித ரூபத்தில் வந்தது. பெரியவர் புத்தி சொன்னார். அன்புடன் கூட்டிப் போய்க் காப்பாற்றினார். வேலை செய்தேன். அதிர்ஷ்டமிருந்தது. முன்னுக்கு வந்தேன். அனாதைச் சிறுவனாக இருந்தபொழுது அவமானப்பட்ட எனக்கு மரியாதையும் மதிப்பும் கிடைக்கிறது. ஆனால் எனக்கு மட்டும் இந்த லட்டு விஷயம் மறக்கவே இல்லை. அந்த அறியாத வயதில் கல்யாண வீட்டுச் சாப்பாட்டில் முழு லட்டுக் கிடைக்காமல் ஏமாந்து துக்கப்பட்டதற்குப் பின் இதுவரை குழந்தைகள் மனசை முறித்துவிட்டு, பெரியவர்களுக்குப் போட்டுப் பெருமை கொள்ளும் எந்தக் கல்யாண வீட்டிலும் நான் சாப்பிடப் போகவே இல்லை. இருந்திருந்து எனக்கு ஒரு குழந்தை. அவள் கல்யாணத்தில் இத்தனை குழந்தைகளையும் ஏமாற்றி விட்டு, பெரியவர்களுக்கு மட்டும் போட்டு எனக்குப் பெருமை சம்பாதிக்க வேண்டியதில்லை, போடா! கொண்டு வா உள்ளே இருக்கும் லட்டுகளை!" என்று கத்தினார் ராமநாதன். அவர் உடல் கிடு கிடு என்று நடுங்கியது.

"அதைச் செலவழித்து விட்டால் நாளைக்குச் சம்பந்திகளுக்கு ஊருக்கு எதைக் கொடுத்தனுப்புகிறதாம்!" என்று மெல்லிய ஆட்சேபக் குரல் பெண்கள் பக்கத்திலிருந்து எழுந்தது.

"எனக்கு அக்கறையில்லை, தேவையானால் வேறு செய்து கொள்ளுங்கள். போடா கொண்டு வாடா!" என்று கர்ஜித்தார் ராமநாதன்.

அடுத்த நிமிஷம் ஒவ்வொரு சின்னஞ் சிறு கைக்கும் ஒவ்வொரு லட்டு கிடைத்தது. உடனே அச் சிறுவர்கள் முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது. மணியின் மலர் முகத்தில் படர்ந்த புன்னகையால் அவன் முகம் மட்டும் மலரவில்லை; ராமநாதனின் உள்ளமும் மலர்ந்தது.



கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு: ரா. வீ

4. லட்சிய மனைவி

நெருப்பில் எரிந்து கொண்டிருக்கும் விளக்கொளியில் ஒருவருடைய முக பாவத்தைப் படித்துப் புரிந்து கொள்ள முடியுமானால், ஜகதீஷுக்குத் தன் வீட்டைக் கண்டதும் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டது என்பதைக் கண்டு கூற முடியும். மிகப் பெரிய பங்களா ஒன்றுக்குப் பக்கத்திலே அவனுடைய சின்னஞ் சிறிய வீடு இருந்தது. அதுவும் இரண்டு அடுக்கு மாடி வீடுதான். கீழ் ஒன்றும் மேல் ஒன்றுமாக அதில் இரு தளங்கள் இருந்தன. பக்கத்துப் பெரிய பங்களாவின் சொந்தக்காரருடைய குதிரை வண்டி வைப்பதற்கான இடமாகத் தோற்றமளித்தது அந்தச் சிறிய கட்டிடம். மேல் மாடியில் கூரை வேயப்பட்ட பால்கனி ஒன்று வாசற்புறமாகக் காணப்பட்டது.

அந்த வெளிப்புற வராந்தாவில் வெகு நேரமாக இளம் பெண் ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அவள் வழிமேல் விழி வைத்திருந்தாள் என்பதை அவள் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த முறையே நன்றாக எடுத்துக் காட்டியது. தூரத்தில் ஜகதீஷ் வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவள் சட்டென்று எழுந்து நின்றாள்.

அன்று என்னவோ ஜகதீஷுக்கு வீட்டுக்கு வர வெகு நேரம் பிடித்து விட்டது. ஜகதீஷ் வரும் நேரமாகி விட்டால், அவன் மனைவி கோகிலா வெளி வராந்தாவில் உட்கார்ந்து கொண்டு அவன் வரவை எதிர்பார்ப்பது தினசரி வழக்கம். ஜகதீஷ் வருவதைக் கண்டு விட்டால் அவள் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி தாண்டவமாடத் தொடங்கி விடும். ஜகதீஷுக்கு மட்டுமென்ன? அவனும்தான் அவளைக் கண்டதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கி விடுவான்!

ஜகதீஷுடன் தன் வயது ஒத்த ஒரு பெண்ணும் இளம் பாலகன் ஒருவனும் வருவதைக் கண்டபொழுது கோகிலாவுக்கு வியப்பு ஏற்படவில்லை. டெபுடி கலெக்டர் போன்ற பெரும் பதவியை விட்டு விட்டு நிலையற்ற வருங்காலத்தை நம்பி நிற்கும் கணவனின் விசித்திர சுபாவத்தை அவனுடைய மனைவியே அறியாமல் இருப்பது என்பது எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா?

ஜகதீஷின் வீடு நண்பர்களும் நெருங்கிய பழக்க முள்ளவர்களும், சிற்சில சமயம் பழக்கமே இல்லாதவர்களும் கூட உட்கார்ந்து உரையாடும் இடமாகி விட்டது. அதன் காரணமாகப் பலவிதமான மனிதர்கள் அவன் வீட்டைத் தேடி வருவார்கள். ஒரு பத்திரிகாசிரியன் என்ற ஹோதாவில், நல்லவர்கள்-கெட்டவர்கள் எத்தகைய மனிதர்களாயிருந்தாலும் சரி, அவன் வீட்டுக்குத் தாராளமாக வரலாம், போகலாம்; பேசலாம். யாருக்கும் வந்து போக அநுமதி உண்டு என்று ஏற்பட்ட பின் யார் வேண்டுமானாலும் வரலாம் அல்லவா?


கோகிலா சிரித்த முகத்துடன் கணவனை எதிர் கொண்டழைக்க வாசற்படியருகில் வந்து நின்றாள். அவள் கண்களில் அன்பு பனிச்சிட்டுக் கொண்டிருந்தது. தன் துயரத்தைத் துடைத்தெறிந்து மறந்துவிட ஜகதீஷுக்குச் சரியான இடம் அவனுடைய வீடுதான். கோகிலாவின் முகத்தைப் பார்த்ததும், உலகத்துக்கும் தன் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை ஜகதீஷ் அறவே மறந்துவிடுவான். தானும் கோகிலாவுமே தனி உலகம் என்று எண்ணத் தொடங்கி விடுவான். அன்பில் மெய்ம் மறந்து விட்டபின் அவனுக்கு இந்த உலகத்தைப் பற்றிய சிந்தனை எழ இடம் ஏது? நியாயம்தான் ஏது?

ஜகதீஷ் வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகக் கோகிலாவைப் பார்த்து, "நான் என்னுடன் இரண்டு விருந்தாளிகளை அழைத்து வந்திருக்கிறேன்!" என்றான்.

முகத்தில் ஆதரவும் மரியாதையும் கோலமிட, "வா, அம்மா! வா! இவன் உன்

குழந்தையா?'' என்று அன்பு தோய்ந்த சொற்களில் வரவேற்றாள் கோகிலா.

உலகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பது ராதாவுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. ராதாவின் ஆடைகள் அழுக்கேறித் தாறுமாறாகக் கிழிந்து கிடந்தன. அவள் குளித்து இரண்டு நாளாகி விட்டன. அவளுடைய தலை மயிர் சிக்கடைந்து பரட்டையாகப் பரந்து கிடந்தது. ஜனங்கள் அவளைப் பிச்சைக்காரி என்றெண்ணி அவளை வெகு அலட்சியப் படுத்தி வந்தனர்; 'நாயே பேயே!' என்றழைத்து அவமானப் படுத்தி வந்தனர். கோகிலாவைப் போல் யாருமே, 'வா, அம்மா!' என்று அன்பு கனிய அவளை அழைத்ததில்லை. கோகிலாவின் அந்தக் கனிவும் பரிவும் அவளை ஒரேயடியாக வியப்பில் ஆழ்த்திவிட்டன. சிறிது நேரம் என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குப் புரியவில்லை. பிறகு தயங்கித் தட்டுத்தடுமாறிய வாறு, "ஆம், அம்மா! இவன் என் பிள்ளை



மே மாதம் 17ந்தேதி ரங்கூனில் நடந்த ஆறாவது பௌத்த சாஸன மகாநாடு படத்தில் காணும் பௌத்த குகைக் கோயில் மண்டபத்தில்தான் நடந்தது. குகைக் கோயிலுக்கு மேலே காணும் ஸ்தூபி பர்மா பிரதமர் ஸ்ரீ ஊநூ அவர்களின் பெரு முயற்சியால் நிறுவப்பெற்ற "உலக அமைதி" என்னும் பெயரால் விளங்கும் புத்த கோபுரம்.

தான்! எங்கள் கெட்டகாலம், இப்படிப் பிச்சை யெடுத்து வாழும்படி ஆகிவிட்டது. என்ன செய்வது?'' என்றாள்.

"கடவுள் கொடுப்பதை அநுபவித்துத் தானே ஆக வேண்டும்? அதை விட்டால் மனிதர்களாகிய நமக்கு வேறு வழி ஏது?'' என்று அவளுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் பேசினாள் கோகிலா.

அதைக் கேட்ட ஜகதீஷுக்குச் சிரிப்பு வந்தது. அந்தப் பேச்சை வைத்துக்கொண்டு கோகிலாவைப் பரிகாசம் பண்ண வேண்டும் என்று எண்ணினான். ஆனால் அதற்குள் ராதா வெறும் தரையில் போய் உட்கார்ந்து கொண்டாள். அதைக் கண்ட கோகிலா, "ஏன் அம்மா தரையில் போய் உட்காருகிறாய்? இங்கே வந்து இந்த விரிப்பில் உட்காரு!'' என்றாள்.

தன்னிடம் இத்தனை மரியாதையும் மதிப்பும் அன்பும் ஆதரவும் அவள் காட்டுவதைக் காண ராதாவுக்கே பொறுக்கவில்லை. நாக்கில் நரம்பில்லாத, வெட்கம் மானம் சூடு சொரணை சிறிதும் இல்லாத கீழ்த்தரமான பரிகாசப் பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு அவளுடைய பொறுமையே பூஷணமான உள்ளங் கூடக் கலங்கிப் போயிருந்தது. எனவே, அவள் ஒரு கையால் தன் பிள்ளையை அணைத்துக் கொண்டு, இன்னொரு கையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு கேவிக் கேவி அழத் தொடங்கி விட்டாள். அவள் பிள்ளை அழும் தாயாரின் முகத்தை ஆதரவற்ற அநாதையாகப் பார்த்துப் பெருமூச்செறியலானான். அவன் உதடுகள் கோணிய கோணலைப் பார்த்தால் அவனும் அழுது விடுவானோ என்றே தோன்றியது. தாயாரின் துன்பம் தாங்காத தனயன் அழாமல் வேறு என்ன தான் செய்வான்?

இரக்க உணர்ச்சியினால் உருகிப் போன கணவனும் மனைவியும் பற்பல விதமான ஆறுதல் வார்த்தைகள் சொல்லி மெதுவாக அவள் அழுகையை ஓய்த்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சமையல் வேலையைக் கவனிப்பதற்காகக் கோகிலா எழுந்து உள்ளே சென்று விட்டாள். ஜகதீஷும் அவளுடன் கூடவே உள்ளே சென்றான். "இவர்கள் யார்?'' என்று ஜகதீஷைக் கேட்டாள் கோகிலா.

"இவர்கள் யார் என்று உனக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான் எனக்கும் தெரியும்!'' என்றான் ஜகதீஷ்.

"அப்படி இவர்கள் உங்களுக்குத் தெரியாதவர்களா யிருக்கும் பொழுது எதற்காக அழைத்து வந்தீர்களாம்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் கோகிலா.

"வரும்பொழுது வழியில் ஜனங்கள் இவளை ரொம்பத் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அதனால்தான் இவர்களை என்னுடன் அழைத்து வந்தேன். இவர்கள் மீது உனக்கு இரக்கம் உண்டாகவில்லையா?'' என்றான் ஜகதீஷ்.

இரக்கம் உண்டாகாமல் இருக்குமா?'' என்று சொன்ன கோகிலா சிரித்துக் கொண்டே, ''என்னைத் தவிர வேறு எவர்மீது தங்கள் கவனம் சென்றாலும் எனக்கு அவர்கள் மீது இரக்கம்தான் ஏற்படும். வேறு எந்தவிதமான எண்ணமும் ஏற்படாது'' என்று அடித்துச் சொன்னாள்.

''ஆமாம், ஆமாம்! உன் தங்கமான குணம் எனக்குத் தெரிந்ததுதானே? நீ என்னை எப்பொழுது எழுதப் படிக்க விட்டிருக்கிறாய்? சொல், பார்ப்போம்!'' என்றான் ஜகதீஷ்.

''அதற்கும் இரக்கத்துக்கும் என்ன சம்பந்தம்?'' என்றாள் கோகிலா.

இரவில் வெகு நேரம் வரை கண் விழித்துப் படிக்கும் ஜகதீஷின் கையிலிருந்து எத்தனையோ புஸ்தகங்களையும் காகிதங்களையும் கோகிலா பிடுங்கி வைத்திருக்கிறாள். ஜகதீஷ் அதைச் சுட்டிக் காட்டி, ''கடந்த நான்கு நாட்களாக நீ என்னை ஒரு புஸ்தகத்தை கையில் எடுக்க விட்டிருக்கிறாயா? விரலை மடக்கு! புஸ்தகத்தின் மீதுள்ள இரக்கம் காரணமாகத் தானே நீ அப்படிச் செய்தாய்?'' என்று கேட்டான்.

அதைக் கேட்ட கோகிலா ஜகதீஷை நிமிர்ந்து பார்த்து மெதுவான குரலில், ''இல்லை, இல்லை! நான் இருக்கும் பொழுது இன்னொரு பெண்ணை உங்களை உங்கள் கையாலே தொட விடுவேனா?'' என்றாள்.

ஜகதீஷ் துணுக்குற்று, ''என்ன, கோகிலா! என் மேலேயே இப்படிச் சந்தேகப் படுகிறாயே! நான் எப்பொழுதாவது அப்படிச் செய்திருக்கிறேனா?'' என்று கேட்டான்.



வெள்ளைக் கலை யுடுத்தி வீணையும் கையுமாக அமர்ந்திருக்கும் இந்தக் கலை மடந்தை தஞ்சை அரண்மனையில் உள்ள சங்கீத மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். இந்த எழில் மிகு திரு உருவம் வெறும் காகிதத்தைக் கொண்டு செய்யப்பட்டது. இவ்வளவு திறமையாகத் தயாரித்த திருமாளம் கலைஞர் திரு வி. டி. ராஜன் அவர்களுக்குத் தஞ்சைக் கவின் கலைப் பொருட் காட்சியார் பரிசு வழங்கிப் பாராட்டினர். ★ ★ ★

''அப்பொழுது புஸ்தகம் என்னவாம் என்று கேட்கிறேன்!''

''புஸ்தகம் என்ன? புஸ்தகம்தான்!''

''புஸ்தகம் பெண் இல்லாமல் என்னவாம்?''

''புஸ்தகம் பெண்ணா? நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே!''

''என்ன வேடிக்கையாக இருக்கிறது? புஸ்தகம் என்றால் சரஸ்வதி தேவி இல்லையோ? நான் அருகில் இருக்கும் பொழுது நீங்கள் சரஸ்வதியைத் தொடலாமா? தொட்டால்தான் நான் பேசாமல் இருப்பேனா?'' என்றாள் கோகிலா.

அதற்கு ஜகதீஷ் என்ன பதில் சொல்வான்? பதில் பேச முடியவில்லை என்பதற்கு அடையாளமாக உதடுகளைப் பிதுக்கினான். இருந்தாலும் ஆண் பிள்ளை இலேசில் விட்டுக் கொடுத்து விடுவானா?

''பேஷ்! நன்றாகச் சுற்றி வளைத்துப் பேசக் கற்றுக் கொண்டு விட்டாயே! 'நாக்கை நீட்டு. கப்பல் மிதக்கிறதா என்று பார்க்கிறேன்!' என்றானாம் ஒருவன். 'என்னடா! உனக்குப் பித்தம் தலைக்கேறி விட்டதா, என்ன? நாக்கை நீட்டு. கப்பல் மிதக்கிறதா என்று பார்க்கிறேன் என்கிறாயே!' என்று கேட்டானாம் நண்பன். அதற்கு அவன் 'இல்லையடா! நாக்கிலே ஜலம் ஊறுகிறது என்று சொன்னாயே! ஊறுகிற ஜலம் அப்படி ஏராளமாக ஊறிக் கடலாகப் பொங்கி அந்தக் கடலில் கப்பலும் மிதந்து வருகிறதோ என்று பார்க்கலாம் என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்!' என்றானாம் அவன். அது போல் அல்லவா இருக்கிறது நீ பேசுவது!'' என்றான் ஜகதீஷ்.

அதைக் கேட்ட கோகிலாவுக்குச் சிரிப்பு வந்தது. இருவரும் சேர்ந்து 'கட கட' வென்று கை தட்டிச் சிரித்தார்கள்.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே சமையல் வேலை முடிந்து விட்டது. உணவைப் பரிமாறக் கோகிலா தட்டுகளை எடுத்து வைத்தாள். சமைத்து வைத்திருந்த

பொருள்களைப் பார்த்த ஜகதீஷுக்கு உணவு இரண்டு பேருக்கே போதுமோ, போதாதோ என்று பட்டது. "ஆமாம், இவ்வளவு தானே சமைத்திருக்கிறாய்? எல்லோருக்கும் போதுமா?" என்று கேட்டான்.

"ஏன் போதாது? நான் சாப்பிடப் போகிறதில்லையே!" என்றாள் கோகிலா.

"ஏன் நீ சாப்பிடப் போகிறதில்லை? முன்னாலேயே சாப்பிட்டு விட்டாயா, என்ன?" என்று கணவன் காரணம் கேட்டான்.

கோகிலா ஒரு கணம் என்ன பதில் சொல்வது என்று யோசனை செய்தாள். பிறகு, "ஆமாம். நான் பீயூஷுடன் சாப்பிட்டு விட்டேன்!" என்றாள்.

பீயூஷ் வேறு யாரும் இல்லை. அவர்களுடைய மூன்று வயதுப் பையன் தான்.

"பொய்! எதற்காக முழுப் பூசினிக் காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாய்?" என்றான் ஜகதீஷ். அவன் சாப்பிடுவதற்கு முன்னால் கோகிலா ஒரு பொழுதும் சாப்பிடுவதில்லை என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். தன்னுடைய பொய்கையும் மெய்யுமாகப் பிடிபட்டு விட்டதை எண்ணிப் பார்க்கக் கோகிலாவுக்கு வெட்கமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு முகத்தில் சிரிப்பை வரவழைத்தவாறு "இல்லை, இல்லை! நான் இன்னும் சாப்பிட வில்லை. ஆமாம், இன்றைக்கு என்ன கிழமை, சொல்லுங்கள்!" என்று கேட்டாள்.



"சொல்லு, சொல்லு! இன்று திங்கட் கிழமையா, சனிக் கிழமையா?" என்று சீண்டிக் கேட்டான் ஜகதீஷ்.

கோகிலா அந்த இரண்டு நாட்களும் ஒரு வேளைதான் சாப்பிடுவது வழக்கம். ஆனால் அன்று அந்த இரண்டு கிழமைகளிலும் ஒரு கிழமையும் இல்லை.

"...அதனால் இன்று நீ என்னுடன் சேர்ந்து சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். நீ சாப்பிடா விட்டால் நானும் சாப்பிட மாட்டேன், சொல்லி விட்டேன்!" என்றான் ஜகதீஷ்.

"இது என்ன ஒரு சட்டமா? இந்த அசட்டுத்தனமெல்லாம் நாளுக்கு நாள் குறைய வேண்டாமா? இப்படி அதிகரித்துக் கொண்டே போகலாமா? வரவர மாமியார் என்கிற கதையாக இருக்கிறதே, உங்கள் காரியம்!" என்று கோகிலா கணவனை அன்புடன் கடிந்து கொண்டாள்.

மனைவி யென்றால் அவளுக்குத் தன் கணவனை அப்படி இனிமையாகக் கடிந்து கொள்ள உரிமை கிடையாதா? கிடையாது என்று யாரும் மறுக்கவில்லையே! ஆனால் ஜகதீஷின் அந்த வற்புறுத்தலும் பிடிவாதமும் ஒரு காதலனின் ஆரம்ப காலச் சேஷ்டைகளாகக் கருதப்படக்கூடியவை அல்ல.

தன்னைப் பற்றி யோசித்துப் பார்த்த போது ஜகதீஷுக்குத் தன்னிடமுள்ள இன்னொரு குற்றம் தெளிவாகத் தெரிய வந்தது.

வீட்டுச் செலவு எப்படி நடந்து வருகிறது என்பதை அவன் எப்பொழுதாவது யோசித்துப் பார்த்திருக்கிறானா? குடும்பம் என்றால் அதைப் பற்றியெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டிய பங்கு அவனுக்கும் உண்டு அல்லவா? இரண்டு மாத காலமாக அவனுக்குச் சம்பளம் கிடைக்க வில்லை. கோகிலா எவ்விதக் குறையும் தோன்றாமல் குடித்தனம் நடத்தி வந்திருக்கிறாள். அவள் செலவுக்கு என்ன செய்கிறாள் என்பதைப் பற்றி அவன் தெரிந்து கொள்ளவே முயற்சிக்க வில்லை.

'இன்று வரை கோகிலா உணவு அருந்தும் விஷயத்தில் எந்த விதமான சாக்குப் போக்கும் சொன்னதில்லை. அப்படியிருக்கும் பொழுது இன்று மட்டும் சொல்கிறாளே. அது ஏன்?' என்பதையாவது அவன் யோசித்துப் பார்த்திருக்க வேண்டாமா?

அவன் யோசனையில் ஆழ்ந்தான். அதற்குள்ளாகக் கோகிலா ராதாவுக்கும் அவள் பிள்ளைக்கும் உணவு அளித்து வெளியறை யொன்றில் அவர்களுக்குத் தூங்க வசதியும் செய்து கொடுத்து விட்டு வந்து சேர்ந்தாள்.

ஜகதீஷ் அவளைத் தன்னுடன் சாப்பிட உட்கார்ந்துதான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினான். எனவே, அவள் அவனுடன் சாப்பிட உட்கார்ந்தாள். ஆனால் சாப்பிட உட்கார்ந்தாளே யொழியச் சரியாகச் சாப்பிட வில்லை. என்னென்னவோ பேச்சுக்

கொடுத்தாள். சிரிக்கச் சிரிக்கப் பேசிப் பற்பல பழைய நிகழ்ச்சிகளை நினைவூட்டினாள். ஜகதீஷ் மட்டும் அன்று கம்பீரமே உருவாக இராமல் அவள் பேச்சில் தன் மனத்தைப் பறிகொடுத்திருப்பானேயாகில், அவள் எதற்காக அப்படிப் பேசுகிறாள் என்னும் ரகசியத்தைப் புரிந்து கொண்டிருக்க மாட்டான். சாப்பிடுகிறோம் என்று பெயர் பண்ணிக் கொண்டு சாப்பிடாமல் எழுந்திருப்பதற்காகவும், அவன் அப்படிச் செய்வது தனக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவுமே கோகிலா சிரிக்கச் சிரிக்கப்பேசித் தன்னை மயக்குகிறாள் என்பதை ஜகதீஷ் நன்கு புரிந்து கொண்டு விட்டான். ஆனால் அந்தச் சமயம் தெரிந்தும் தெரியாதவன் போலவே காட்டிக் கொண்டான்.

உணவு அருந்தி முடிந்ததும் கோகிலா படுக்கையைத் தட்டிப் போட்டாள். தேசத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் வெறியில் உத்தியோகத்தையும் உயர் பதவியையும் அது தாக்கியது! ஜகதீஷுக்கும் கோகிலாவுக்கும் கல்யாணம் ஆவதற்கு முன்னால், அவர்களிருவரையும் கணவன் - மனைவியாக்கத் திட்ட மிட்டதும் விரும்பியதும் அவர்கள் அல்ல; அவர்களுடைய பெற்றோர்களே. திருமணத்தின் மூலம் ஏற்படும் அந்தச் சேர்க்கை அசைக்க முடியாதது, தவிர்க்க முடியாதது என்பது தெரிந்திருந்தும், கணவன் மனைவிக் இடையேயுள்ள பொறுப்பு எத்தகையது என்பதை அறிந்திருந்தும் அவர்களிருவரும் தங்கள் தங்கள் பெற்றோர்களின் விருப்பப்படி ஒருவரை யொருவர் கரம் பற்றிக் கணவன் மனைவியாயினர். அதனால் அவர்களிருவருக்கும் நடந்த திருமணத்தைப் பால்ய விவாகம் என்று சொல்ல முடியாது. இருவருக்கும் அறிவு வந்த பின்னரேதான் திருமணம் நடந்தது. ஆனால் அவர்கள் இருவரும் இந்தக் காலத்துப் பையன்களும் பெண்களும் பெரிதாக மதித்து ஈடுபடும் காதல் நோயில் சிக்கிப் பெருமூச்சு, குறு



உதறி யெறிந்து விட்டு ஏழைமையைத் தனது உடமையாக்கிக் கொண்டு வந்த ஜகதீஷுக்குத் தன்னுடைய அந்தப் பழைய நாட்கள் நினைவு வந்தன. வேலைக்காரர்களிடம் வேலை வாங்கிக்கொண்டிருந்த கோகிலா, தானே வேலைக்காரியாக ஆகி அன்று வேலை செய்து கொண்டிருந்தாள். சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் ஆதரிச சமூகத்தில் எசமானன் - வேலையாள், முதலாளி-தொழிலாளி என்ற பாகுபாடு இருக்கக் கூடாது என்ற கொள்கையை முழுமனத்துடன் ஒப்புக்கொண்டிருந்த பொழுதிலும், ஜகதீஷுக்கு அன்று அது வீண் கொள்கை யென்றே பட்டது. காரணம் என்ன? யோசித்துப் பார்த்தால் தெரிய வரும்.

ஏழைமை முதலில் யாரைத் தாக்கியது? அவனையா? அவனை அல்லவே! சிறிதும் முன்பின் யோசனை செய்யாமல் தன்னையும் தன் பாக்கியத்தையும் அவன் கையில் ஒப்படைத்தாளே, அந்த மனைவியை அல்லவா மூச்சு விட்டு அப்புறம் காதல் கடிமணம் புரிந்து கொள்ள வில்லை.

'பூர்ணப் பொறுப்பையும் உணர்ந்தோ உணராமலோ ஒருத்தி தன்னைச் சரண் அடைந்து தன் மனைவியாகி விட்டாள். தன்னால் இயன்ற அளவு அவளுக்கு அதிக இன்பம் தரவேண்டியதும் சுகமாக வைத்துக்கொள்ள வேண்டியதும் தன் கடமை' என்று எண்ணி ஜகதீஷ் வாழ்க்கை நடத்தலானான். ஆரம்பத்தில் இருவருக்கும் இடையே கடமை உணர்ச்சிதான் மேலோங்கி நின்றது. அந்தக் கடமை உணர்ச்சிக் குள்ளிருந்து அபாரமான அன்பு உணர்ச்சி எப்படி வெடித்துப் பிரவாகமாகப் பொங்கி வந்தது என்பது அவர்களிருவருக்குமே சரியாக விளங்க வில்லை.

அறியாப் பருவத்திலே கரம் பிடித்தாலும் கடமையும் அன்பும் கலந்து கண்யமான வாழ்க்கை நடத்தும்படியான கட்டத்தைத் தாமாகவே சிருஷ்டித்து விடும்போலும்!

"கோகிலா! என் படுக்கையை நானே போட்டுக் கொள்ள விடமாட்டாயா?"

"நான் இல்லாமற் போய் விட்டால், அப்பொழுது உங்கள் கையால் போட்டுக் கொள்ளுங்கள்! அப்பொழுது யாரும் தடுக்க வர மாட்டார்கள்!"

"கோகிலாவின் வாயிலிருந்து வெளிவந்த கற்பனைக்கும் அப்பாற்பட்ட அந்த வார்த்தையைக் கேட்டதும் ஜகதீஷ் துணுக்குற்றான். ஒரு முறை அவனுக்கு உடல் நடுங்கித் தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "ஆமாம், கோகிலா! நீ என்ன, எனக்கு வேலைக்காரியா?" என்று கேட்டான்.

"இல்லை யென்றால் இன்றிலிருந்து அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்!' என்று சொன்ன கோகிலா அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. ஊழியத்தின் பெருமையை எடுத்துக் கூறும் மீராபாயின் பக்தி நிறைந்த அழகிய பாடல் ஒன்றைத் தனது தேனினும் இனிய குரலில் பாடவும் தொடங்கிவிட்டாள். உணர்ச்சி நிறைந்த அந்தப் பாடல் கேட்போரின் நெஞ்சத்தை நெக்குருகச் செய்து பரவசப்படுத்துவதாக அமைந்தது.

'ஊழியம் செய்வேன், ஊழியம் செய்வேன்
ஊழியம் செய்தே உன் அருள் பெறுவேன்
உன் அருள் பெற்றே உன் தரிசனம் காண்பேன்
உன் தரிசனம் கண்டே உன் நினைவில் ஆழ்வேன்
உன் நினைவில் ஆழ்ந்தே உன் அன்பு பெறுவேன்
உன் அன்பைப் பெற்றே உன் பக்தி கொள்வேன்
உன் பக்திகொண்டே உன்னில் ஒன்றுவேன்
ஊழியம் செய்வேன், ஊழியம் செய்வேன்!"

கோகிலா தன் பெயருக்கேற்றபடி மிக இனிமையாகப் பாடுவாள். பெண்களிடம் அத்தகைய குரலினிமையைப் பகவான் ஏன் தான் அமைத்தானோ? ஒரு வேளை உலகத்திலே நாட்டியத்தையும் சங்கீதத்தையும் பரப்பத் தகுந்த சாதனமாக எண்ணித்தான் அப்படிச் சிருஷ்டித்திருப்பானோ? என்னவாயிருந்தால் என்ன? பெண்ணின் குரலினிமைக்கு ஈடு பெண்ணின் குரலினிமை தான்!

ஜகதீஷ் அந்தப் பாட்டை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆயினும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. தூக்கம் எப்படி வரும்? உள்ளத்தில் உணர்ச்சிப் புயல் பொங்கிக் கொண்டிருக்கும் பொழுது தூக்கம் வந்திருக்கிறது என்ற அதிசயத்தை யாராவது கேள்விப் பட்டது உண்டா? அவன் மனம் மறுபடியும் பழைய சிந்தனையைப் பற்றிக் கொண்டது, காந்த சக்தி போல.

* * *

தேசத்தின் சுதந்திர வேள்வியில், கிடைத்தற்கரிய கலெக்டர் பதவியை உதறி யெறிந்து விட்ட ஜகதீஷின் தன்னலத் தியாகம் மகத்தானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அப்புறம்?—இந்தக் கேள்வி மகா பயங்கரமானதுதான்.

இருந்த பொழுதிலும் அவன் செய்த அந்தத் தியாகத்தின் காரணமாகத் தேசத் தொண்டர்களிடையே அவனுக்கு முதல் இடம் கிடைத்தது. உத்தியோக வாழ்வில் உள்ள எந்தக் குற்றங் குறைகளின் காரணமாக அவன் உத்தியோகத்தை உதறி யெறிந்தானோ, அதே போன்ற குற்றங் குறைகள் வேறு உருவத்தில் தேசத் தொண்டர்களின் வாழ்விலும் காணப்பட்டன. தேசத் தொண்டர்கள் வாழ்விலுங்கூடப் பொறுமையும் ஆற்றாமையும், கோபமும் தாபமும், விரோதமும் வைஷம்யமும், தன்னலமும் தான் என்னும் அகந்தையும் தாண்டவ மாடுவதை அவன் கண்டான். ஆத்திரமும் கோபமும் கொண்டு நான் முந்தி யென்று முன்னேறுபவர்களின் ஆவேச உணர்ச்சியிலே சிறிதும் வீறு கிடையாது என்பதைப் புரிந்து கொள்ளவும் அவனுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. அவர்கள் பிறரை நிந்தித்துப் பேசுவதைக் கண்டால் அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வரும். பிறருக்கு உபாத்தியாயர்களே தவிர தனக்கு என்று வந்துவிட்டால் இவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் அவனுக்கு வேடிக்கையாக இருக்கும். தனக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயம் என்று எண்ணும் அவர்களுடைய பலவீனம் அவன் மனத்தை வாட்டும். உத்தியோகத்தில் உள்ளவர்கள்தான் அப்படியென்றால் தேசத் தொண்டர்களிடையேயும் அதே நெறி தவறி நடக்கும் தன்மைதானா தாண்டவமாடவேண்டும்? மனிதனின் மன்னிப்புக்கு உகந்த மனோ பலவீனம் அவன் மனக் கண்முன்னே தோன்றி மட்டற்ற மன வேதனையை அளித்தது. தேசத் தொண்டர்கள் வாழும் எளிய வாழ்க்கைகூட அவனுக்குச் செயற்கை நிறைந்ததாகவும் ஆடம்பரம் கொண்டதாகவும் தான் காட்சி அளித்தது. அவர்களுடைய உள்ளொன்று, புறமொன்று என்ற வெளி வேஷம் அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

தேசவெறியில் மக்கள் உற்சாகம் காட்டினார்கள். ஆனால் அவர்களுடைய அந்த உற்சாகம் நீடித்து நிற்கவில்லை. மக்களிடையே சண்டப் பிரசண்டமான ஆவேச உணர்ச்சியைக் கிளப்பிவிடும் மகாத்மாவின் ஆயுதம் திவ்ய சக்தி வாய்ந்தது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால் திவ்ய சக்தி நிறைந்த ஆயுதங்களைச் சர்வ ஜாக்கிரதையாக அல்லவா உபயோகிக்க வேண்டும்? திவ்யாஸ்திரங்களை உபயோகிக்கும் பொழுது பரிசுத்தம் அல்லவா தேவை? வெறி மூளவே அந்தப் பரிசுத்தம் சிற்சில இடங்களில் காணக் கிடைக்கவில்லை. பரிசுத்தம் காணாத இடங்களில் அவை வெற்றி அளிக்கத் தவறி விட்டன. சிற்சில இடங்களில் புல்லுருவிகளும் காளான்களும் தலையெடுத்துப் பரிசுத்

தத்தின் மகிமையைக் குலைத்து வந்தன. அதைக் கண்ட மகாத்மா காந்தி தமது ஆயுதத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து விட்டார். மக்கள் அதன் பெருமையைப் பரிபூர்ணமாக உணர்ந்து தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சந்தர்ப்பமும் சமயமும் அளித்தார்.

மகாத்மாவின் அமோகமான அந்த அஸ்திரத்தினால் கதிகலங்கி நின்ற அரசாங்கம் அந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. தருணம் பார்த்து மகாத்மாவைச் சிறையிலும் இட்டு விட்டது.

தலைவரைச் சிறையில் இட்டதும் பாரதத்தின் உற்சாகம் குன்றியது. தேசத் தொண்டர்கள் வாழ்க்கைப் போரில், தங்களுக்கான இடம் எது என்னும் தகராறைத் தங்களுக்குள் தீர்த்துக் கொள்வதில் ஈடுபட்டனர். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்னும் நிலைமையாகி விட்டது. பல சங்கங்களில் பூட்டுத் தொங்கத் தொடங்கி விட்டன. வறுமையை வலிய ஏற்றுக்கொண்டு வாழ்வில் இறங்கியவர்களுக்கு வறுமையில் வாழ்வது மிகவும் சிரம சாத்தியமான காரியமாகப் போய் விட்டது.

ஜகதிஷ் ஒரு சங்கத்தை விட்டு இன்னொரு சங்கத்தைப் பிடித்துக் கொண்டான். இடம் விட்டு இடம் பெயர்ந்ததுதான் மிச்சமாயிற்றே ஒழிய ஏதும் பலன் கிட்டவில்லை. எவ்விதமான பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் தொண்டு செய்ய வருவதாயிருந்தால் வா என்ற ஆலோசனைதான் பல சங்கங்களி லிருந்தும் அவனுக்குக் கிடைத்தது. ஏனெனில் உண்மைத் தேசத் தொண்டு செய்ய முன் வருபவனுக்கு வாய் என்றும் வயிறு என்றும் ஒன்றும் இருக்கக் கூடாதே! இருக்கக்கூடாது என்பது கொள்கையளவுக்குப் பொருந்துமே யொழிய காரியம் என்று வந்து விட்டால்...?



''ஏண்டா, ராஜா! உனக்கு வெய்யிலிலேயே அறுபது நாழிகையும் சுற்றுகிற வேலையாமே!...... அப்போ எனக்கு ஒரு ஒத்தாசை செய்யேன். இந்தக் கறிவடாத்தைக் கையிலேயே எடுத்துக் கொண்டு போய் விட்டுவா! வீட்டில் உலர்த்த இடமில்லை.''

அவனுக்கும் குடும்பம் என்று ஒன்று இருந்தது. மனைவியையும் மகனையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அவன் தலையிலும் சுமந்திருந்தது. அவன் தனக்கென்றோ தன் குடும்பத்துக்கென்றோ எதுவும் பணம் காசு சேர்த்து வைத்துக் கொள்ளவில்லை. கொஞ்ச நஞ்சம் சேர்த்து வைத்திருந்ததையும் உற்சாகமேலீட்டில் கண்களை மூடிக்கொண்டு செலவழித்து விட்டான். எனவே, குடும்பத்தை நடத்துவதற்கு ஏதாவது வழிவகை செய்துகொள்ளுமளவுக்கு அவன் நிலைமை வந்து விட்டது.

கடைசியில் முழு மூச்சுடன் முயற்சித்ததின் பேரில், 'கர்ஜனை' பத்திரிகையில் உதவி ஆசிரியர் உத்தியோகம் பெற்றான். பத்திரிகையின் பிரதம ஆசிரியனான சாந்திப் பிரியனை அவன் கல்லூரி நாட்களிலிருந்தே நன்றாக அறிந்திருந்தான். சாந்திப் பிரியன் கல்லூரியின் பழைய மாணவன் என்ற ஹோதாவிலும் அவனுக்கு அறிமுகமாகி யிருந்தான். கல்லூரிப் படிப்பு நான்கு வருஷங்கள் தானே? ஆனால் சாந்திப் பிரியனுக்கோ அது எட்டு ஒன்பது வருஷமாக இருந்தது. ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் இருந்து அவன் அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டிருந்தான். அவன் நாட்களை வீணில் செலவிட்டுவிட்டான் என்று சிலர் குறை கூறினர். அதற்காக அவனைக் குறை கூறுவது எந்த நியாயம்? அவனுடைய மூளையை அல்லவா குறை கூற வேண்டும்?

அவன் கடைசி வருஷம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, புதிதாகக் கல்லூரியில் சேர்ந்தான் ஜகதிஷ். அவனை அப்பொழுது நடந்த ஒரு மறியலில் உபயோகித்துக் கொண்டான் சாந்திப் பிரியன். இந்த அறிமுகத்தை ஆதாரமாகக் கொண்டுதான் ஜகதிஷ் 'கர்ஜனை' பத்திரிகையின் உதவி ஆசிரியர் குழுவில் சேர முடிந்தது.

கர்ஜனை பத்திரிகை நாட்டின் நலனை உத்தேசித்து வெளியாகிக் கொண்டிருந்தது. தேசத் துரோகிகளின் போக்கைக் கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக் கொண்டு கண ஜாக்கிரதையாக அது கவனித்து வந்தது; காவல் காத்து வந்தது. தேசத் துரோகிகள் என்றால் வேறு யாரும் இல்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், வெளிப்படையாகத் தேசத் தொண்டில் இறங்கி உழைப்பவர்களும்தான். இந்த வியாக்கியானத்தை ஆதாரமாகக் கொண்டுதான் கர்ஜனை பத்திரிகையின் கொள்கைகள் அமைந்திருந்தன.

விறுவிறுப்பான செய்திகள் வருகின்றன வென்றால் மக்களிடையே படிக்க வேண்டும்

என்ற ஆவல் எழுவதற்குக் கேட்கவா வேண்டும்? அந்தப் பத்திரிகையில் வெளியாகும் காரசாரமான கட்டுரைகளும், குத்தலான சொற்களும் தேசத் துரோகிகளின் இருதயத்திலே ஈட்டியைப் பாய்ச்சி வந்தன. 'தென்னை மரத்துக்குத் தேள் கொட்டிற்றாம். பனை மரத்துக்கு நெறி கட்டிற்றாம்!' என்னும் கதையாக அந்தப் பத்திரிகையில் 'ரத்தினபுரி ரகசியம்' என்ற கட்டுரை வெளியானால் பம்பாயில் உள்ள பஞ்சாங்கக்காரரின் வயிற்றிலே புளியைக் கரைக்கும். 'ஜஷன் பூரில் ஜஹாங்கீர்!' என்னும் கட்டுரை கடல் தாண்டிச் சென்று தாய்லாந்தில் வசிக்கும் போரா மக்களிடையே பெரிய குழப்பத்தை விளைவிக்கும்! இவ்வளவு சொல்வதற்கும் காரணம் என்னவென்றால் கர்ஜனையின் குரல் கடலையும் கடலைத் தாண்டியும் செல்லக் கூடியது என்பதற்காகத்தான். கர்ஜனையின் கட்டுரைகளுக்கெதிரே மற்ற மஞ்சள் பத்திரிகைகளின் கட்டுரைகள் எல்லாம் 'சப்'பென்றுதான் இருக்கும்.



கலப்பு மணத்தின் விளைவாகப் பிறந்து விட்ட ஒரு பெண் கணவனை அடைவதற்கு எவ்வளவு அயரப்பட வேண்டியிருக்கிறது என்பதைச் சித்திரிக்கும் சமூகச் சித்திரம்தான் ஏவி. எம். கலைக்கூடத்தார் புதிதாகத் தயாரித்திருக்கும் "பெண்." இந்தத் திரைப் படத்தில் வரும் ஒரு இனிய காட்சியை மேலே காணலாம். ★ ★ ★

போர்பந்தரில் உள்ள போலீஸ்காரர் வீட்டுக்கு ஒரு பட்டிக்காட்டான் ஒரு சட்டி நெய் கொண்டு போனான். அவன் எதற்காகக் கொண்டு போனான் என்பது சிதம்பர ரகசியமாகவே இருந்து வருகிறது. அந்த நெய் முழுக் கிரயமும் கொடுத்து வாங்கப்பட்டதா? அல்லது உபகாரத்துக்குப் பிரதியாகப் பெற்றுக் கொள்ளப் பட்டதா? பட்டிக்காட்டானோ போலீஸ்காரரோ இதற்குச் சரியான சமாதானம் சொல்லி அந்தச் சிதம்பர ரகசியத்தைத் தில்லை வெளியாக்குவார்களா?

பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயினி மிகவும் சூடிகையாகவும் சாமர்த்தியசாலியாகவும் சஞ்சலமே உருவானவளாகவும் இருக்கிறாள். பள்ளியின் போதனா முறை திருப்திகரமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது பள்ளிப் பரிசோதனா அதிகாரி ஒரு தடவைக்கு அதிகமாக அந்தப் பாடசாலையைப் பார்வையிடவும் பரிசோதிக்கவும் ஏன் போக வேண்டும்? நட்பின் காரணமாக இந்தச் சந்திப்புக்கள் அதிகரித்திருக்கின்றன என்று சமாதானம் சொல்லப்படுமேயானால், பள்ளிப் பரிசோதகரின் படிச் செலவும் பிரயாணச் செலவும் சர்க்கார் கஜானாவிலிருந்து செலவாகக் கூடாது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஏதாவது வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா? மேலதிகாரிகள் மக்களின் சந்தேகத்தைப் போக்க முன் வருவார்களா?


இம்மாதிரி ருசிகரமான தகவல்களைச் சேகரித்து வெளியிடும் பத்திரிகை மக்களின் மனத்தைக் கவருவது இயல்புதானே?

ஆனால் ஜகதீஷுக்கு இதுபோன்ற தகவல்களையும் செய்திகளையும் கண்டாலே பிடிப்பதில்லை. பத்திரிகை அவனுடையதல்லவே! உதவி ஆசிரியனான அவன் அவற்றைப் பிரசுரிக்காமல் எப்படி நிறுத்த முடியும்?

சிற்சில சமயம் ஜகதீஷுக்குத் தன் கட்சியைச் சேர்ந்த வீரத் தொண்டர்களின் விஷயத்தைச் சோதனையிட வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது உண்டு. அவனுக்கே அதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம். சாந்திப் பிரியனே உத்தரவு கொடுத்து விட்டால் அப்புறம் கேட்கவா வேண்டும்? தன் கடமையை நிறைவேற்றப் போனவன் ஒரு முறை தகவல் சேகரித்துக் கேட்டுக் கண்ட விதமாக எழுதியிருந்தான்.

'கள்ளுக்கடை மறியலில் காவலுக்காக நின்ற தொண்டர்கள் வெற்றிகரமாக வாடிக்கைக்காரர்களை வெளியேற்றிய பின், கடைக்குள்ளிருந்து தடுமாறும் நிலைமையில் வெளியே வந்தார்கள். அவர்கள் அப்படித் தடுமாறும் நிலைக்கு வந்ததற்குக் காரணம், அவர்களுடைய ஓயாத ஒழியாத சலியாத உழைப்பாயிருக்குமா? அல்லது வேறு ஏதாவது ரகசியமான காரணமாயிருக்குமா?

அதைப் படித்த சாந்திப் பிரியன் அவன் மீது அளவற்ற கோபம் அடைந்தான். இனிமேல் இந்த மாதிரியெல்லாம் எழுதக் கூடாது என்று எச்சரித்து ஜகதீஷைக் கடிந்து கொண்டான். கடிந்து கொண்ட



கண்டமங்கலம் ஸ்ரீ கே. ஆர். சுவாமிநாதய்யரின் குமாரரும் பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியைச் சேர்ந்தவருமான ஸ்ரீ கே. எஸ். விசுவநாதனுக்கும் ஸ்ரீ ஜி. வி. ராமய்யர் பி. ஏ. எல். டி., அவர்களின் குமாரத்தி செல்வி சரஸ்வதிக்கும் மே மாதம் ஒன்பதாம் தேதி கும்பகோணத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

தோடு மட்டும் நிறுத்தி யிருந்தால்தான் தேவலையே! அடுத்த மாதம் சம்பள தினத்தன்று ஜகதீஷுக்குக் கொடுத்த சம்பளத்தில் கொஞ்சம் பிடிப்பு காணப்பட்டது. அந்தப் பிடிப்பு மாதா மாதம் அதிகரிக்கவேறு தொடங்கியது. அது மட்டுமா? ஒருதடவை இரண்டொரு மாதம் சம்பளம் வாங்காமலே கூட அவன் வேலை பார்க்க நேர்ந்தது.

இந்தக் காரணத்தை ஒரு வியாஜமாக வைத்துக் கொண்டு அவன் அந்தப் பத்திரிகையை விட்டு விட்டால் என்ன என்றுகூட எண்ணினான். ஆனால் அவன் நண்பர்கள் அவனைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். ஒவ்வொரு இடத்திலிருந்தும் அவன் விலக நேர்வதற்கு அவனேதான் காரணம் என்று குற்றம் வேறு சாட்ட ஆரம்பித்து விட்டார்கள். அந்தக் குற்றச்சாட்டைப் பொறுக்காத அவன் இன்னும் அதிக நேரத்தைப் பத்திரிகைக்காகச் செலவிடத் தொடங்கினான். அவன் அதிக நேரத்தைப் பத்திரிகையின் நலனுக்காகச் செலவிடுகிறான் என்பதற்காக அவன் மேலதிகாரிகள் வாய் வார்த்தையாகவாவது நாலு நல்ல வார்த்தைகள் சொல்ல வேண்டுமே! அதுதான் கிடையாது.

அந்த வேலையில் பேரும் புகழும் அடைவதற்கும் முன்னுக்கு வருவதற்கும் வேண்டிய சந்தர்ப்பங்கள் சீக்கிரமே வரக்கூடும் என்று தோன்றினாலும் அதற்காகச் செய்ய வேண்டியிருக்கும் தியாகம் அவனுக்கு மிகப் பெரிதாகவே தோன்றியது. சர்க்கார் உத்தியோகத்தைப் போலவே, அதிலும் தன் உள்ளத்தை ஒருபுறம் மூட்டை கட்டி வைத்து விட்டு உள்ளமற்றவனாகவே நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்தான்.

உத்தியோகம் பார்க்கும் பொழுது தன் பதவியைத் தீய வழியில் உபயோகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமான கட்டம் அடிக்கொரு தடவை வந்து விடுகிறது என்ற பயம் அவன் உள்ளத்தைச் சதா வறுத்துக் கொண்டேயிருந்தது. அந்தப் பயம் இங்கு வந்த பின்னரும் போகவில்லை. அதிகமாகவே தான் ஆகியது. உத்தியோகத்தைக் காட்டிலும் இந்தத் தொழிலில்தான் பயம் அதிகம் என்பதை அவன் உணர்ந்தான்.

அதிகாரம் அதிகரிக்க அதிகரிக்க அதைத் தீயவழியில் உபயோகிக்கும் சந்தர்ப்பங்களும் அதிகமாகின்றன. இதற்குப் பத்திரிகைத் தொழில் விதி விலக்கல்லவே!

ஒருவனை ஆதரிப்பது என்று ஆரம்பித்து விட்டால் வானளாவப் புகழ்ந்து உச்சாணிக் கொம்பில் ஏற்றி விடுவது, ஒருவனைத் தாழ்த்துவது என்றால், வரிந்து கட்டி கட்டிக் கொண்டு கீழ் இறங்கிக் குழி தோண்டிப் புதைத்து விட்டு மறு காரியம் பார்ப்பது, குற்றங் குறைகளைக் கூறி எதிரிகளைப் பயமுறுத்துவது போன்ற பல தாழ்ந்த இழிகுணங்கள் பெரும்பான்மையான பத்திரிகைக்காரர்களிடத்தில் இருப்பதைக் கண்டான்.

இதனால் எல்லாம் அவனுக்குப் பத்திரிகைத் தொழில் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ரமேஷைக் கெட்ட உருவத்தில் படம் பிடித்துக் காட்டிச் சாந்திப் பிரியன் எழுதிய கட்டுரையைச் சாக்காக வைத்துக் கொண்டு அவன் அந்தப் பத்திரிகைத் தொழிலுக்கே ஒரு முழுக்குப் போட்டு விட்டான். அந்தத் தொழிலில் அவன் உள்ளம் பட்ட பாடு அவனுக்கல்லவா தெரியும்? அப்படியிருக்கும் பொழுது அவன் அதற்கு முழுக்குப் போட்டு வராமல் என்ன செய்வான்?

* * *

நான் செய்த அந்த மகத்தான தியாகத்தினால் யாருக்கு எத்தகைய பலன் கிட்டியது என்பதைப் பற்றி அவன் யோசிக்கலானான். அதனால் நாட்டுக்குத்தான் என்ன நலன் ஏற்பட்டது? தனக்கோ தன் உற்றார் உறவினர்களுக்கோ தான் என்ன பலன் கிட்டியது? யோசிக்க யோசிக்க மூளைதான் வறண்டதே யொழியச் சரியான பதில் கிடைக்கவில்லை.

"ஆமாம், இன்றைக்கு இன்னும் நீங்கள் எதற்காக விழித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் கோகிலா.

"என்னைக் காவல் காக்கிறது என்று ஏதாவது குத்தகை எடுத்துக் கொண்டிருக்கிறாயா? நீ ஏன் இன்னும் தூங்கவில்லை?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"நீங்கள் தூங்காமல் இருக்கும்பொழுது எனக்கு மட்டும் எப்படித் தூக்கம் வரும்?"

கணவனுக்குத் தூக்கம் வரவில்லையென்றால் மனைவிக்கும் தூக்கம் வராமல் இருப்பானேன்? இந்தக் காரணத்தைப் பற்றி விஞ்ஞானம் என்ன விளக்கம் கூறியிருக்கிறது என்பது இதுவரை யாருக்குமே தெரியாத

சூடான அல்லது குளிர்ந்த 'ஓவல்டின்' எல்லா காலங்களுக்கும் உகந்த பானம்!



ஒரு டின் 'ஓவல்டின்' வீட்டில் எப்பொழுதுமே தயாராக வைத்திருந்தால் வருஷத்தில் எந்த சமயத்திலும் உங்களுக்கு புஷ்டி தரும் பானத்தைப்பற்றிய கவலையே யிருக்காது. குளிர் காலத்தில் சுடச் சுட ஒரு கப் ஓவல்டின் பருகினால் குளிர் மறைந்து போகும்; கடும் வெயில் காலத்தில் குளிர்ந்த ஓவல்டின் பருகினால் சோர்வு நீங்கி புத்துணர்வு ஏற்படும். கவனியுங்கள்—ஆரோக்கியம் ததும்பும் ஓவல்டினில் ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், பழுத்த பார்லி மால்ட், சிறந்த கொக்கோ, பி & டி விடமின்கள் இருக்கின்றன. ஆகவே ஓவல்டின் உங்களுக்கு இன்றியமையாதது.



இந்த ருசி மிகுந்த உணவு பானம் வருஷம் முழுவதற்கும் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து சக்தியை அளிக்கும். உங்கள் கடையில் 'ஓவல்டின்' கேளுங்கள்.

விநியோகஸ்தர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

ஓவல்டின்

சூடாகவோ, குளிர்ந்த பானமாகவோ பருகலாம்


OV.395


ப்ளிட்டில் ஆறு கீடநாசினிகளைக் கலப்பதால் அது அதிகப் பூச்சிகளை கொல்லுவதேன்

தற்காலத்தில் விஞ்ஞானிகளுக்கு அநேக உபயோகமுள்ள கீடநாசினிகளைப் பற்றித் தெரியும்—ஆனால் ஒவ்வொன்றிலும் ஒரு குறையிருப்பதையும் அவர்கள் அறிவார்கள். எந்த ஒரு தனி கீடநாசினியும் எல்லாவகைப் பூச்சிகளையும் சேர்த்துக் கொல்லும் சக்தியுடையதல்ல.

உதாரணமாக
'A' என்ற கீடநாசினி
அதை ஸ்பர்சிக்கும் எல்லா ஈக்களையும் கொல்லக்கூடும் . . .
பாதியளவு கொசுக்களையும் கொல்லலாம் . . .
ஆனால் மிகச்சொற்ப அளவு கரப்புகளையே கொல்லுகின்றது.








'B' என்ற கீடநாசினியோ
எல்லா கரப்புகளையும் கொல்லக்கூடும்...
ஆனால் ஒரு சில ஈக்களைத்தான் கொல்லுகிறது . . .
கொசுக்களை பாதிப்பதேயில்லை.



உண்மையைக் கூறுமிடத்தில், நீங்கள் எல்லாவகை வீட்டுப் பூச்சிகளையும் கொல்ல விரும்பினால், அதற்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது, நீங்கள் விதவிதமான கீடநாசினிகளைக் கலந்து உபயோகிக்க வேண்டும். அப்பொழுது ஈக்கள் ஒரு கீடநாசினியாலும், கரப்புகள் மற்றொன்றாலும், இம்மாதிரி எல்லாப் பூச்சிகளும் கொல்லப்படும். ப்ளிட்டின் ரகஸியம் இதுவே. அதில் ஆறு கீடநாசினிகள் அடங்கியுள்ளன. ஒவ்வொன்றும் ஒன்றல்லது பல இனப் பூச்சிகளை கொல்லக்கூடியது. இவ்வெல்லா கீடநாசினிகளும் இப்படி ஒன்று சேர்ந்திருப்பதால்தான் ப்ளிட் மிகச்சக்தி வாய்ந்த கீடநாசினியாக விளங்குவதுடன், நோய்க்கிருமிகளைக் கொண்டு சேர்க்கும் பூச்சிகளினின்று உங்கள் ஆரோக்கியத்திற்கு சிறந்த பாதுகாப்பு அளிக்கிறது.



நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணாவிற்கும் **ப்ளிட்** அதிகமான பூச்சிகளைக் கொல்லுகிறது

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி (கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V. 9302

விஷயமா யிருக்கிறது. ஆனால் கோகிலா தன் படுக்கையிலிருந்து எழுந்து ஜகதீஷின் அருகே சென்றாள். அவன் தலையை மெதுவாகத் தன் கையால் தடவிக் கொடுத்தவாறு, "உங்களுக்கு உடம்பு சரியா யிருக்கிறதல்லவா?" என்று கேட்டாள்.

"உடம்புக்கு ஒன்றும் இல்லை. ஆனால் உன்னிடம் ஒரு விஷயம் கேட்கணும்!"

"கேட்கிறதுதானே? என்னிடம் கேட்கப் பயமா யிருக்கிறதா?" என்றாள் கோகிலா.

"எனக்கு யாரிடமாவது பயம் இருக்கிறது என்றால், அது உன்னிடம் தானே?"

"என்னிடமா? அப்படியானால் விபூதி போடச் சொல்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அவன் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டாள் கோகிலா. "இப்பொழுதும் உங்களுக்குப் பயமாயிருக்கிறதா? இல்லை, தெளிந்து விட்டதா? சொல்லுங்கள்! என்னிடம் என்ன கேட்க வேணும் என்றிருந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"கோகிலா! இப்பொழுது வீட்டில் எத்தனை ரூபாய் இருக்கிறது?"

"லட்ச ரூபாய் இருக்கிறது! எத்தனை ரூபாய் இருந்தால் உங்களுக்கு என்ன? பெரிய மனுஷ்யர்களைப் போல் பேசாமல் இருப்பீர்களா? என்னவோ......"

"இல்லை. அதற்காகச் சொல்லவில்லை. இரண்டு மாதமாக எனக்குச் சம்பளமே வரவில்லையே! வீட்டுச் செலவை எப்படிப் பார்த்துக் கொள்கிறாய் என்று......"

"நான் எப்படிப் பார்த்துக் கொண்டால் உங்களுக்கு என்ன? நீங்கள் சர்க்கார் உத்தியோகத்தை விட்டு விட்டீர்களே! அப்பொழுது நான் என்ன சொன்னேன், நினைவிருக்கிறதா? 'வீட்டுச் செலவைப் பற்றி நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்களுக்கு உயர்ந்த பதவியும் அந்தஸ்தும் வேண்டாம் என்று தோன்றினால் தாராளமாகச் சர்க்கார் வேலையை விட்டு விடுங்கள்' என்றுதானே சொன்னேன்? நீங்களும் சரியென்று சொல்லிச் சம்மதித்துத்தானே வேலையை விட்டீர்கள்? அப்புறம் இப்பொழுது எதற்காக மாறிப் பேசுகிறீர்கள்?" என்றாள் கோகிலா.

"இன்று என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. நீ இப்பொழுது ஒன்றுமே சாப்பிடாமல் பட்டினியாகக் கிடக்கிறாய். சிரிக்கச் சிரிக்கப் பேசி என்னை மயக்கி விடலாம் என்றுதான் பார்த்தாய். இருந்தாலும் நீ செய்ததை நான் கவனிக்காமல் இல்லை. தெரிகிறதா?" என்றான் ஜகதீஷ்.

"நீங்களும் ஒரு மனுஷ்யர் மாதிரி! என்ன கவலை! என்ன கவலை! ஒரு வேளை பட்டினி கிடந்து விட்டதனால் உங்கள் கோகிலா ஒன்றும் செத்துப் போய்விட மாட்டாள்! இதற்காகவா இத்தனை நேரம் உங்களுக்குத் தூக்கம் வரவில்லை? நான் ஒருநாள் பட்டினி கிடந்தால் என்ன வந்து விட்டது?" என்றாள்.

"என்ன வந்து விட்டதா?" என்று கேட்ட ஜகதீஷின் குரல் ஆவேசத்தில் உச்சஸ்தாயியை அடைந்தது. "இதிலிருந்து நம் வீட்டில் அரிசி இல்லை என்றாகிறது. வேறு என்ன?" என்றான்.

கோகிலா கலகல வென்று நகைத்தாள். அவளுடைய அந்தச் சிரிப்பு ஜகதீஷுக்குச் செயற்கைச் சிரிப்பாகப் பட்டது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பேச்சாக—இல்லை, இல்லை—சிரிக்கும் சிரிப்பாகப் பட்டது.

ஜகதீஷின் தலையை வருடிக் கொண்டிருந்த கையை நகர்த்திக் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள் கோகிலா. பிறகு சிரித்துக் கொண்டே, "இதற்காகத்தானே உங்களுக்குத் தூக்கம் வரவில்லை? நல்லது, வாருங்கள். அரிசி இருக்கிறதா, இல்லையா என்பதைக் காட்டி விடுகிறேன். அப்புறமாவது நிம்மதியாகத் தூங்குவீர்கள் அல்லவா?" என்றாள்.

சொல்வதற்கு அப்படிச் சொல்லி விட்டாளே யொழியக் கோகிலா அரிசியைக் காண்பிப்பதற்காக எழுந்திருக்கவில்லை. எழுந்திருப்பதற்கான ஆவலையும் காட்டவில்லை. அப்படி அவள் அதற்குத் தயாரானால் அதன் பலன் என்ன ஆகும் என்பதை ஜகதீஷ் முன்னதாகவே ஊகித்துப் புரிந்து கொண்டு விட்டான். அதனால் அவனும் அவ்வளவாக அவ் விஷயத்தில் பிடிவாதம் பிடிக்கவில்லை. "கோகிலா! இன்னொரு சமாசாரம்! சொல்லட்டுமா, வேண்டாமா?" என்றான்.

"என்னிடம் சொல்லக்கூடியதா யிருந்தால் சொல்லுங்கள். நான் கேட்கத் தயார்!"

"நான் இப்பொழுது பார்த்து வந்த வேலையையும் விட்டு விட்டேன்!"

"விட்டு விட்டீர்களோ, இல்லையோ! ரொம்ப நல்ல காரியம் செய்தீர்கள்!" கணவனுக்கு அருகிலேயே தன் படுக்கையை இழுத்துப் போட்டுக் கொண்டு படுத்த கோகிலா அவன் உடம்பை மெதுவாகப் பிடித்து விட்டாள். பிறகு, "இனிமேல் பேசாதீர்கள்! எனக்குத் தூக்கம் வருகிறது!" என்றாள்.

வியப்புத் தாளாத ஜகதீஷ் சட்டென்று எழுந்து படுக்கையில் உட்கார நினைத்தான். 'கணவனுக்கு ஏற்ற மனைவி கோகிலா!' என்ற எண்ணம் அவனை அப்படி எழுந்திருக்குமாறு உந்தித் தள்ளியது. ஆனால் அவள் கையை நகர்த்தி விட்டு எழுந்திருக்க வேண்டுமே என்ற எண்ணம் குறுக்கிட்டு அவனை எழுந்திருக்க விடவில்லை. அவன் மெல்லிய குரலில், "கோகிலா! கோகிலா!" என்றான்.

அதற்குப் பின் அவள் ஜகதீஷின்மீது என்ன மோகினியை ஏவி விட்டாளோ, அல்லது எந்த மந்திரத்தைத்தான் படித்தாளோ, தெரியாது. ஜகதீஷ் அப்புறம் பேசவில்லை.

"இனிமேல் பேசக் கூடாது. தூங்கிவிட வேண்டும். தெரிந்ததா?" என்று இனிமையாகக் கடிந்து கொண்ட கோகிலாவிடம் அவன் என்ன பேசுவது?

அதற்குப் பின் அன்றைய இரவு முழுவதும் பேசாமலே கழிந்தது. (தொடரும்)

யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரஸ்வாமி

23. மற்ற கனியங்கள்

சென்ற சில அத்தியாயங்களில் கால்ஷியம், பாஸ்பரஸ், இரும்பு முதலியவைகளைப் பற்றி ஒருவாறாக அறிந்தோம். மற்றக் கனியங்களைப் பற்றி அவ்வளவு விரிவாக அறியாவிட்டாலும் ஒருவாறு அறிந்து கொள்வது நல்லது. மேற்படி முக்கியமான மூன்று கனியங்களுக்காக நாம் சாப்பிடும் உணவிலேயே போதுமான மற்ற கனியங்களும் கிடைத்து விடுகின்றன. அதன் அவசியங்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டால் போதும்.

அயோடின் :—இந்தச் சத்து மிக மிக முக்கியமானது. இது உடலிலுள்ள மிக முக்கிய உறுப்பாகிய தைராய்ட் கோளத்துக்குப் போஷணை அளிக்கக் கூடியது. இந்தக் கோளம்தான் உடலில் எல்லா வேலைகளையும் சரியாய் நடக்கக் காரணமாய் இருக்கிறது. இதன் ஆரோக்கியத்தைப் பொருத்துத்தான் உடலின் ஆரோக்கியமும் அமையும். இது கெட்டால் மற்ற எல்லா வேலைகளும் கெடும். அவ்வளவு முக்கியமான தைராய்ட் கோளத்துக்கு வேண்டியதெல்லாம் அயோடின் எனும் சத்துதான். அதுவும் மிக மிக இலேசான குறைந்த அளவிலே வேண்டியதாய் இருக்கிறது. நமது உடலுக்கு வேண்டிய அயோடின் அளவு 25 மில்லி கிராம்தான். அதாவது ஒரு கிராமில் நாற்பதில் ஒரு பாகம்தான். ஆனால் தினசரி நாம் உட்கொள்ள வேண்டியது மிகமிகச் சிறிய அளவு. ஒரு சொட்டு என்றாலும் அதிகமாகும். அவ்வளவு குறைந்த அளவில்தான் தேவையாக இருக்கிறது.

இதை முழுத் தானியம், ரொட்டி, கொட்டை பருப்புகள், அவல், மீன், முட்டை இவைகளிலிருந்தும் பெறலாம். இவைகளை அளவிட்டுச் சாப்பிட முடியாது. தானியங்களின் மேல் தவிட்டை நீக்காமலும் கொட்டைப் பருப்புகளையும் அவலையும் சேர்க்கலாம். மீன், முட்டை சாப்பிடுகிறவர்கள் அதைச் சாப்பிடலாம். வல்லாரைக் கீரையில் இந்தச் சத்து இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. வல்லாரை நமது ஔஷதத்தில் மிகவும் பெருமை வாய்ந்ததாக இருக்கிறது. இதைப் பல விதத்தில் உபயோகிக்கலாம். துவையல் அரைக்கலாம். கூட்டு, சாம்பார், மசியல் முதலியன செய்யலாம். மற்றும் காளான்களில் இந்த அயோடின் சத்து இருக்கிறது. இதை மேல் நாட்டவர்கள் உபயோகிக்கின்றார்கள். நமது நாட்டில் இது உபயோகிப்பது கிடையாது. மற்றும் இந்தச் சத்தை ஊட்டப்பட்ட உப்பை உபயோகித்தால் அயோடின் குறைவை நீக்கலாம். காளான்களை எருவாகப் போட்டு, பயிர்களை விளையச் செய்தால், விளையும் பண்டங்கள் அயோடின் சத்து உடையதாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. இம்மாதிரியெல்லாம் மற்ற நாடுகளில் நடக்கின்றன. நமது நாடு இன்னும் அவ்வளவு தூரம் முன்னேற்றம் அடையவில்லை. இந்தச் சத்து உணவில் குறைந்தால் அல்லது நாம் சாப்பிடும் பொருள் விளையும் பூமியின் சாரம் போதுமான அளவு இந்த அயோடின் சத்தை உடையதாக இல்லாமலிருந்தால் கண்டமாலை எனும் தைராய்ட் கட்டிகள், உடல் சக்தி குறைதல், மனச் சோர்வு, உடல் பருத்தல் முதலியனவெல்லாம் ஏற்படும். ஆகையால் இதில், போதுமான கவனம் செலுத்த வேண்டுவது அவசியம்.

சோடியம் குளோரைட் :— இச் சத்து பொதுவாக உடலில் உள்ள எல்லாக் கோளங்களையும் தன் இரசங்களைச் சுரப்பிக்க உதவுகிறது. இது அயோடின் சத்தோடு சேர்ந்து வேலை செய்யக் கூடியது. இதைச் சாதாரணமாக நாம் தினசரி வழக்கமாய் உபயோகிக்கும் உப்பு, மரக்கறிகள், பழங்கள், தானியங்கள் இவைகளிலேயே இருக்கிறது. ஆனால் இவைகளை மிக ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும். அதிகமாகக் கழுவுவதாலும் நறுக்கியபின் கழுவுவதாலும் அதிக நேரம் வேக வைப்பதாலும், மேல் மூடி திறந்து வேக வைப்பதாலும் பெரிய தீ போட்டு எரிய விடுவதாலும், அழிந்துவிடும். சில காய்கறிகளைப் பச்சையாகச் சாப்பிடும் வழக்கமும் வேண்டும். காரட், தக்காளி, பீட்ரூட், முள்ளங்கி, வெண்டை, வெள்ளரிக்காய், காலி ப்ளவர், முட்டை கோஸ், லெட்யூஸ் கீரை போன்றவைகளைப் பச்சையாகச் சிறிதளவு சாப்பிடுவது நல்லது. அல்லது தயிரில் பச்சையாக நறுக்கிப் போட்டு உப்புப் போட்டு வேக வைக்காமல் பச்சடியாகச் செய்து சாப்பிடலாம். பழங்களில் மேல் தோலை எவ்வளவு தூரம் எடுக்காமல் சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கும் நல்லது. நமக்கு வேண்டியது தினசரி 5 கிராம் உப்புத்தான். ஆனால் நாம் 20-30 கிராம் வரையில் சேர்க்கிறோம்.



கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் மே 21-ம் அன்று திருவள்ளுவர் திருநாளைக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திரு எஸ். டி. சீனிவாசன் அவர்கள் திறந்து வைத்து அருமையான சொற்பொழிவாற்றினார்.

தானியங்களையும் அதன் தோலுடன் உபயோகிப்பது நல்லது. உப்பைத்தான் எல்லாவற்றிலும் சேர்க்கிறோம். ஆனால் அதையே அளவுக்கு மீறிச் சாப்பிட்டால் விஷமாகவும் மாறிப் பல கெடுதல்கள் செய்யும்.

செம்பு :—இந்தச் சத்து இரும்புடன் சேர்ந்து இரத்த அணுக்களின் சிவப்பு நிறத்தை உண்டாக்கவும் இரத்த உயிரணுக்களை உண்டாக்கவும் உதவுகிறது. இது அநேகமாக கொட்டை தானியங்கள், ஓட்ஸ் முதலியவைகளில் இருக்கும். ஓட்ஸ் மீல் என்பது நமது நாட்டு அவல்தான். அவலில் அதன் சத்தாகிய மேல் தவிடு பிரியாமல் இருக்கிறது. எனவே, தவிட்டுடன் சாப்பிடும் அரிசி உணவிலும் இந்தச் சத்து இருக்கும்.

நாகம் :—இது ஒரு விஷ வஸ்து. ஆனாலும் நமது உடலில் இது இருக்கிறது. இருப்பது மல்லாமல் அன்றாட உணவில் நாம் சாப்பிட்டுக் கொண்டுமிருக்கிறோம். இதுவும் உடலில் உள்ள சுரப்பிகளைச் சரிவரத் தன் காரியங்களாகிய ரசம் சுரப்பித்தலைச் செய்வதற்கு உபயோகமாகிறது. மற்றும் உடலில் ஏற்படும் கரியமிலவாயுவை வெளியேற்றுவதற்கும் உபயோகமாயிருக்கிறது. இதுவும் தனித்து உண்ண முடியாது. வேண்டியது மிகச் சிறிய அளவே. பழ வகைகள், மரக் கறிகள், பால் இவைகளின் மூலமாக இது நமக்குக் கிடைக்கும்.


மாக்னிசியம் :—இந்தச் சத்து கால்சியத்தோடு சேர்ந்து வேலை செய்கிறது. முக்கியமாய் இருதயத்தைப் பாதுகாக்க இது உதவுகிறது. மற்றும் இரத்தத்தில் உள்ள சர்க்கரையை எரிக்கவும் இது உதவுகிறது. இந்தச் சத்து பாலிலும் கீரை வகைகளிலும் இருக்கிறது.

மங்கனீஸ் :—இந்தச் சத்து கால்சியத்தோடும், பாஸ்பரஸோடும் கலந்து எலும்பு, பல் முதலியவைகளைப் பலப்படுத்த உதவுகிறது. தானியங்கள், முழுக் கோதுமை மாவில் செய்த ரொட்டி, அவல், தவிடு இவைகளை உண்டால் நமக்கு வேண்டிய மங்கனீஸ் சத்து கிடைத்துவிடும்.

பொட்டாசியம் :—இந்தச் சத்து உயிர் அணுக்களுக்கு மிக்க உபயோகமானது. இது பிராண வாயுவை எடுத்துக் கொள்ளவும், கரியமில வாயுவை வெளியில் தள்ளவும் தூண்டுகிறது. தவிர, நரம்புகளையும் பலமாக இருக்க உதவுகிறது. இந்தச் சத்து பொதுவாய் எல்லாவித மரக்கறிப் பொருள்களிலும் இருக்கிறது. எனவே காய்கறி, பழங்கள், கீரை முதலியவைகளை உண்ணும்போது இந்த முக்கியமான சத்தைப் போதுமான அளவு அடைந்து விடுகிறோம்.

கந்தகம் :—இது நம் இரத்தத்தைச் சுத்தம் செய்ய உதவுகிறது. முடி வளர்ச்சிக்கும் முக்கியமாய் இந்தச் சத்து வேண்டியதாயிருக்கிறது. நீரழிவு—ஏற்படாமல் சர்க்கரையை இரத்தத்தில் சரியாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுகிறது. இந்தப் பொருள் காளான் சாப்பிடுகிறவர்களுக்குக் கலபமாய்க் கிடைத்து விடுகிறது. காளான்களை நாம் அவ்வளவாக விசேஷமாய்க் கொண்டாடுவதில்லை. உதக மண்டலம், கோடைக்கானல் போன்ற இடங்களில் மற்ற நாட்டவர்கள் சிலர் இருப்பதால் அங்கு இவை விற்கப்படுகிறது. அவர்கள் மேற்படி காளான்களை மிக அருமையாய் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அதைப் பக்குவம் செய்யும் முறையும் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. காளான்களைக் கொண்டு வந்து அதில் கெட்டவைகளை நீக்கிச் சாப்பிடுவார்கள்.

நல்ல சேவகன்!



தவிர நாம் காய்கறிகளை வற்றல் போட்டு வைத்துக் கொள்ளுவதைப் போல இந்தக் காளான்களையும் அவர்கள் உலர்த்திக் காளான்கள் கிடைக்காத காலங்களில் உபயோகப் படுத்துவதற்காகப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுகிறார்கள். நாமும் அவைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மற்றும் கொட்டைப் பருப்புகள், தானியங்கள், மரக்கறிகள் முதலியவைகளிலும் நம் உடலுக்கு வேண்டிய கந்தகம் கிடைக்கின்றன.

இவைகள் தவிர, புளோரைன், ஸிலிகன்—பிராமிடி போன்ற கனியங்களும் மற்றும் பலவும் இருக்கின்றன. இவைகள் எல்லாமுமே மரக்கறிகள், பழங்கள், கொட்டைப் பருப்புகள், தானியங்கள், அவல், பால், இவைகளைச் சாப்பிட்டால் கிடைத்து விடும். இவைகள் முறையே நரம்புகளையும், மூடியையும், மண்டை ஓட்டையும், தைரியத்தையும் உண்டாக்க வல்லன.

இந்தக் கனியங்கள் எல்லாமுமே உடலில் அததற்குத் தகுந்த வேலைகள் செய்வதோடு மட்டும் நிற்கவில்லை. குணத்தையும் மனத்தையும் சரி செய்கின்றன. இதில் ஏதாவது ஒன்று குறைவாய் இருந்தால் அந்தக் கனியங்களின் குணங்களுக்கு ஏற்ப கோபம், சிடுசிடுப்பு, குறைவு மனப்பான்மை, சந்தேகம், பொய் சொல்லல், ஆத்திரம், பயம், பிறரைக் குறை கூறல் முதலிய பல குணங்களும் உண்டாகும். இவைகளை விவரித்துச் சொல்ல இங்கு விரியும். பொதுவாக ஆசனங்களைச் செய்து கொண்டு மேற் சொன்னபடி காய்கறி, கீரை வகைகள், தானியங்கள், பால் பழங்கள் நிறைய சேர்த்து வந்தால் வேண்டாத எல்லா குணங்களும் அகன்று நற்குணங்கள் உண்டாகும். ஆகவே பொதுவாகக் காய்கறி, கீரை, பால், கொட்டைப் பருப்புகள், தானியங்கள், தவிடு நீங்காத அரிசி, அவல் இவைகளை உட்கொண்டு வந்தால் எல்லாக் கனியங்களுமே கிடைத்து விடும். மாமிசம் சாப்பிடுகிறவர்கள் அவர்கள் அதன் மூலமும் அடையலாம். ஆனால் மாமிசத்தின் மூலம்தான் கிடைக்கு மென்பதில்லை. அநேகமாய்ப் பெரும் அளவு கனியங்கள் மற்றவைகளில்தான் கிடைப்பதாகத் தெரிகிறது. மாமிசத்தின் மூலம் பிரோடீன், கொழுப்பு முதலியவை கிடைக்கலாம். அவை மற்றவைகளின் மூலமாயும் கிடைக்கும். எனவே குறையில்லாமல் பார்த்துக் கொள்ள முடியும். ஆனால் கனியங்கள் முக்கியமாய் மரக்கறி உணவில்தான் சத்திழக்காமல் சமைப்பதில் கிடைக்கு மென்பதில் ஐயமில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. இந்த உடல் பஞ்ச பூதங்களினால் ஆனாலும் பெரும் பகுதி மண்ணைக்கொண்டே உடல் உருவாகிறது. அதனை இயக்க மண்ணிலிருந்து கிடைக்கக் கூடிய அநேக கனியங்கள் தேவைப்படுகின்றன. அவைகளை இட்டு நிரப்ப மறுபடியும் மண்ணிலிருந்து வளர்ந்த அநேக கனியங்களை தன்னுள் அடக்கிய தானியங்களென்ன, கொட்டை போன்ற வகைகளென்ன மற்றும் எண்ணற்ற இனுசுகளில் நமக்கு வேண்டிய அளவு கிடைக்கின்றன.

என்னே! இயற்கையின் கருணை! இயற்கை நமக்கு வேண்டிய கனியங்களை வாரி வாரி வழங்குகின்றது. அதனைச் சரிவர உபயோகித்து ஆனந்தம், ஆரோக்கியம், இன்பம் அடையும் பொறுப்பு நம்மிடம் இருக்கிறது. (தொடரும்.)

வட்ட மேஜை

வீட்டுச் சமூகம் என்று சீரடையும்?

சமூக சீர்திருத்தமென்று கூறிப் பல சட்டங்களைப் போட்டுப் பெண்களை, வெளி உலகங்களில் ஈடுபடச் செய்து ஓரளவு எல்லாவற்றிலும் சீர்திருத்தி வரும் தற்கால உலகிலே, இளம் விதவைகளை "வீட்டுச் சமூகம்" இன்றுவரை ஏற்கவில்லை. "தாயினும் சாலப் பரிந்து நீ" என்று எந்தப் புலவரோ பாடிவிட்டார். அப்படிப்பட்ட உயர்ந்த அன்பு பீடத்திலே அமர்த்தப்பட்ட தாய்கூடத் தன் மகளை ஏற்பதில்லையே! இறைவன் செய்த சதிக்கு இளம் பெண்கள் என்ன செய்ய முடியும்?

சமூக வேலைகளிலும், கலைகளிலும், கல்வியிலும் உத்தியோகத்திலும் அனுமதி பெற்று நிலவி வரும் இளம் கைம்பெண்களைத் தன் வீட்டிலேயே நடக்கும் சுப காரியங்களைக் கூடப் பார்க்க அனுமதி அளிப்பதில்லையே! இது தர்மமா!

என் உயிர்த் தோழிகளான பல இளம் பெண்களின் தாயும், சகோதரிகளும் அவர்களுடைய உழைப்பு, பணம், பரிசுப் பொருள்கள் இவற்றினை ஏற்கின்றனர், ஆனால் கல்யாண வைபவங்களில் கலந்து கொள்ளவும், பார்க்கவும் அனுமதிக்காது கண்ணீருடன் கலங்க வைக்கின்றனர். தன் சொந்தச் சகோதரன், சகோதரி இவர்களின் மணக் கோலத்தைக்கூடப் பார்க்க அனுமதிக்காத தாயின் உள்ளத்தையும், உடன்பிறந்த இரத்த பாசம் என்றுகூறும் சகோதரியின் உள்ளத்தையும் திருத்தி இளம்பெண்களின் கண்ணீர்கோபத்தைப் போக்கும் வீட்டுச் சமூக சீர்திருத்த சட்டம் என்று வரும்! என்று இவர்களுடைய மனப்புண் ஆறும்! இவர்களுடைய உழைப்புக்கும், ஆசிப் பொருள்களுக்கும் ஒருவித குற்றமும் இல்லையே! ஆனால் கண்களுக்கும், மனத்துக்கும் கூடத்தானே தோஷமில்லை என்று பொருள்படுகிறது! தாயின் உள்ளத்தைக் கூட இப் பெண்களின் விஷயத்தில் வேறுபடுத்தி விட்டதே! பாரதத் தாயே, நீதான் எங்கள் தாய்மார்களின் மனத்தை மாற்ற வேண்டும்.

கோயமுத்தூர்
16—5—54

வி. சீநாதேவி

●

சர்க்கார் ஆஸ்பத்திரிகள்

மே மாதம் 23ந் தேதி கல்கி இதழில் வெளியான 'ஏழை நோயாளிகளுக்கு இடமில்லை' என்ற விஷயத்தைப் படித்தேன். க்ஷயரோக வியாதி கிருமிகளால் உண்டாக்கப்பட்டு உடம்பையே அரித்து விடும். அந்த வியாதிக்கு இன்றைய முறைப்படி தினசரி ஒரு இஞ்செக்ஷன் வீதம் முப்பது நாட்கள் 'ஸ்ட்ரெப்டோ மைஸின்' கொடுக்கப்படுகிறது. முற்றிலும் பலஹீனமான உடம்பிலிருந்து கிருமிகள் நீக்கப்பட்டு விட்டாலும் நோயாளி சுகத்துக்கு வர உடம்பு போஷணைக்கு வேண்டிய சிகிச்சையும் தேவை. இது சுமார் இரண்டு மாதமாவது பிடிக்கும். ஆகவே ஒவ்வொரு நோயாளியும் சராசரி மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க வேண்டியிருக்கும். ஆகவே க்ஷயரோக ஆஸ்பத்திரி நிரம்பியிருக்கும் நிலைமையில் வேறு நோயாளிகள் வந்தால் ரிஜிஸ்டர் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இதற்காக க்ஷயரோக ஆஸ்பத்திரியையே மூடி விட வேண்டும் என்பது தவறான கருத்தாகும். மருத்துவக் கல்லூரியிலும், மற்றும் பல கல்லூரிகளிலும், பெருவாரியான மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதனால் அந்தக் கல்லூரிகளையே மூடிவிடு என்று சொல்லலாமா ! ஆகவே சர்க்கார் அதிகமான க்ஷயரோக ஆஸ்பத்திரிகளைத் திறக்க முன் வரவேண்டும். க்ஷயரோக ஆஸ்பத்திரியில் இன்னும் இடங்களை அதிகமாக்க வேண்டும்.

கோவில்பட்டி
24—5—54

ஸி. முத்துசாமி

['ரிஜிஸ்டர்' செய்து வைத்தால், அதிக எண்ணிக்கை காட்ட வேண்டியிருக்கிறது என்பதற்காக, இப்போதெல்லாம் சர்க்கார் க்ஷயரோக ஆஸ்பத்திரிகளில் ரிஜிஸ்டர் செய்யவே மறுத்து விடுவதைப் பற்றியே குறிப்பிட்டிருந்தோம். ஆஸ்பத்திரிகளிலாவது ஏழை—பணக்காரர் வித்தியாசமின்றி முற்றிய நோயாளிகளுக்கு முதல் இடம் இருக்க வேண்டாமா ? —ஆசிரியர்.]

●

ரயில்வேயில் வைத்திய வசதி

நான் மானாமதுரையில் வேலை பார்க்கும் ஒரு ரயில்வே தொழிலாளி. இங்கே எல்லா வகைத் தொழிலாளருமாகச் சுமார் இருநூற்று ஐம்பது பேர் இருக்கிறோம். எங்களில் யாருக்காவது உடல் நலம் குன்றினால் நாங்கள் சிகிச்சைக்காக இங்கிருந்து அறுபது மைல் தூரத்திலுள்ள மண்டபம் போக வேண்டும். இந்நெடுந்தூரப் பிரயாணத்தினால் எங்கள் உடல் நலம் மேலும் கெடுவதற்கு ஏதுவாகின்றது. போய் வரவேண்டிய வசதியும் சீராக இல்லை. உடல் நலத்துக்குகந்த உணவும் அங்கு கிடைப்பதரிது.

தற்சமயம் நான் ரணத்தினால் ஏற்பட்ட கால் வீக்கத்தால் நடமாட முடியாது கஷ்டப்படுகின்றேன். மண்டபத்திலுள்ள ரயில்வே வைத்திய அதிகாரிக்குத் தந்தி கொடுத்து நான்கு தினங்களாகியும் அவர் என்னை வந்து பார்க்க இயலவில்லை. இந் நிலையில் ஒரு பிரத்தியேக வைத்திய அதிகாரியிடம் சிகிச்சை பெற்று வருகின்றேன். இதற்குரிய செலவை நானே கொடுக்க வேண்டியதாகிறது. எங்களை இங்கிருந்து 39 மைல் தூரத்தில் உள்ள காரைக்குடி ரயில்வே வைத்தியசாலையிலாவது அல்லது 30 மைல் தூரத்திலுள்ள மதுரை ரயில்வே வைத்தியசாலையிலாவது சிகிச்சை பெற அனுமதி யளித்தால் மிக்க நலமாயிருக்கும். போக்கு வரத்து வசதியும் சீராக இருக்கின்றது.

இதைப் பற்றி நாங்கள் கையொப்பமிட்ட ஓர் விண்ணப்பத்தை ஜில்லா வைத்திய அதிகாரி மூலம் நிர்வாகத்தினருக்கு 27-3-53-ல் அனுப்பி வைத்தோம். வருஷம் ஒன்றுக்கு மேலாகியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மானாமதுரை
26—5—54

ஒரு ரயில்வே தொழிலாளி

●

எங்கே தருமம் ?

உள்ளத் துடிப்பினால் இந்தக் கடிதம் எழுதுகிறேன். எவர் மனத்தையும் புண்படுத்த வேண்டுமென்றோ, குறைகூற வேண்டுமென்றோ நான் இதை எழுதத் தொடங்கவில்லை. என் கண்களைப் போல் என் அறிவும் உணர்ச்சிகளும் குருட்டுத் தன்மையை ஓரளவு பெற்றிருந்தால் ஒருவேளை நான் இதை எழுதாம லிருந்திருக்கலாம்.

'கிட்டப் பார்வை' என்று சொல்வார்களே மாணவர்களின் இனம் வியாதி. அந்த நோய்க்கு அடிமையானவன் நான். எனக்குக் கண்களிருக்கின்றன. ஆனால், புண்களாய்ப் பனிப் படலத்தைப் பார்ப்பதுபோல் என் பெற்றோர்களைப் பார்க்கிறேன். விழியிலே வெள்ளத்தோடு விதியை எண்ணி உருகும் அந்தத் தன்னலமற்ற தெய்வங்களுக்குக் கைநிறைய காணிக்கை சம்பாதித்துக் கொடுக்க ராணுவ உபகாரச் சம்பளத்திலே படிக்கிறேன், பாரத்தை நீக்கி விடலாமென்று.

எனக்குச் சரியான பார்வையில்லை. நான் ஏழை. அன்றாட உணவுக்கு ஊசலாடுகிறவன் நான். ஆகவே வாழ்க்கையின் வழி தெரியத் தர்ம ஆஸ்பத்திரி தன் கரத்தை நீட்டும் என நம்பினேன். கண் பரிசோதகர் பார்த்தார். தான் சொந்த முறையில் நடத்தும் ஆஸ்பத்திரிக்கு மறு நாள் வரும்படி கூறினார். மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தேன், மாதாபிதாவின் துன்பம் தீருமென்று. அந்தோ ! கண்களைப் பரிசோதிக்கப் பணம் கேட்டார் தரும ஆஸ்பத்திரியிலே வேலை செய்யும் அந்த கண் பரிசோதகர். ஐந்து ரூபாய் கேட்டார். இருந்திருந்தால் தர்ம ஆஸ்பத்திரியைத் தஞ்சம் அடையப் புறப்பட்டிருப்பேனா !


அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் ஏற்படுத்தப் பட்ட ஆஸ்பத்திரியிலிருக்கும் டாக்டர்கள் பணம் கேட்டால் கர்ணனின் பரம்பரைகளா மக்கள் ! அதற்கு ஏன் தர்ம ஆஸ்பத்திரி என்று பெயர் !

என்னைப் போன்ற எவ்வளவு பேர்களின் இதயம் இந்தக் கொடுமையைக் கண்டு குமுறுகிறதோ!

திருநெல்வேலி
26—5—54

வி. ஆர். வெங்கடேசன்







கனவு காட்டிய வழி

கு. ப. சேது அம்மாள்

கையெழுத்து மறையும் வேளை. வீட்டுக்குள் நுழைய வேண்டுமே என்ற வேதனையுடன் பூட்டைத் திறந்து தாழ்ப்பாளை விலக்கும்போது, "சீனிவாஸன் யார் ஸார்?...தந்தி!" என்ற குரல் கேட்டுத் திரும்பினான் சீனு.

கையிலிருந்த பூட்டைத் திண்ணையில் எறிந்து விட்டு, கையெழுத்தைப் போட்டுத் தந்தியை வாங்கினான். பிரித்துப் பார்த்தான். 'இதே மாதிரி செய்தி ஒரு நாள் வந்து விடுமோ!' என்று திகில் பட்டுக் கொண்டிருந்தது பலித்தே விட்டது!

அவன் மனைவிக்கு நோய் அதிகம். உடனே புறப்பட வேண்டும்.

இதுதான் தந்தி சொல்லிய சேதி. தந்திச் சேவகன் சென்று, சற்று நேரம் வரை அங்கேயே ஸ்தம்பித்து நின்று விட்டுச் சீனு உள்ளே போகிற போது நன்றாக இருட்டி விட்டது.

அப்பொழுதே புறப்பட வண்டியில்லை. இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் வண்டி. அந்த ஞாபகம் வந்த பிறகுதான் உள்ளே வந்தான் சீனு.

ஆடைகளைக் களைந்து விட்டு, நெருப்புப் பெட்டியை ஒவ்வொரு இடமாகத் தடவித் தடவித் தேடினான். அகப்படவில்லை.

'அட, விளக்குத்தான் எதற்கு? வெளிச்சத்தை விட இந்த அந்தகாரமே மேல்' என்று தோன்றியது அவனுக்கு. அங்கிருந்த பலகை மீது உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டான்.

நினைவுகள் பைசாசங்களாக அவன் முன் நின்று பயமுறுத்தின. அன்று — நாலு மாதங்களுக்கு முன்பு — தன் தாயாரின் யோசனைப்படி அவளைப் பிறந்தகத்துக்கு அனுப்ப இசைந்து, அவள் புறப்படும் சமயத்தில் தன் முகத்தைப் பார்த்த ஏக்கம் நிறைந்த பார்வையும் துயரம் தேங்கிய முகமும் அப்படியே கண்டான்!

அந்தப் பார்வையிலிருந்த சோகம் தன் மனத்தை இளக்கியதையும், உடனே அவளருகில் சென்று கைகளைப் பிடித்துக் கொண்டு, 'தைரியமாக இரு, சாரதா! உன்னை ஒரே மாதத்தில் அழைத்து வந்து விடுகிறேன்" என்றதும் அவள் திடீரென்று அழுதுகொண்டே, "அழைத்து வரு வீர்களா, அதற்கு நான் கொடுத்து வைத்திருப்பேனா!" என்று அவள் தேம்பியதும் அவன் இதயத்தைச் சுட்டுப் பொசுக்கியது!

அந்தத் தாபம் பொறுக்க முடியாமல் 'ஐயோ' என்று அலறிக் கொண்டு இடத்தை விட்டு எழுந்தான். மள மளவென்று கண்கள் நீரைச் சொரிந்தன. அழுததால் மனத்தில் பாரம் சற்று குறைந்து விட்டது போல உணர்ந்தான் சீனு. அங்கு மிங்குமாக அறைக்குள்ளேயே உலாவினான்.

சிந்தனைச் சுருள் மறுபடி விரிந்தது.

ஒரு நோயும் இல்லாமல் இருந்த சாரதாவுக்கு ரத்த சோகை எப்படி வந்தது! 'இறந்த பிறகு உடலை எரிப்பது சிதை. உயிருடன் இருக்கும் போதே உடலையும், உள்ளத்தையும் கூட எரிப்பது சிந்தை' என்று யாரோ, எப்பொழுதோ சொன்னது இப்பொழுது அவன் மனத்தில் பளிச்சிட்டது. 'ஐயோ. சாரதா, வேதனைத் தீ உன் ரத்தத்தைக் குடித்து விட்டதா!'—அவன் இருதயம் துடித்தது. அந்தத் துடிப்பினூடே எண்ணங்களும் சுழன்றன.

சாரதா ஒரு படித்த பெண். தனக்குச் சமமான கல்வியறிவுள்ள ஒருவனை மணந்து இல்லற தர்மத்துடன், கல்வி ஞானமும் கை கோத்துக் கொண்டால்தான் வாழ்க்கையில் சம்பூர்ண சுகம் பெற்று ஆனந்தம் அடையப் போகிறோம் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டு வந்தவள் சாரதா. அதைக் கணவனிடம் சொல்லவும் சொன்னாள். தாம்பத்திய ஒற்றுமைக்கு ஜீவநாடியாக இருப்பது விவேகம். அதன் வலுவால் நன்மை, தீமைகளைக் கவனித்துப் பார்த்து, அப்படிப்பட்ட இன்னல்களையும் சுலபமாகத் தகர்த்து விடலாம் என்பதை விளக்கிச் சொன்னாள்.

இந்தச் சம்பாஷணை, சாரதா தனிக் குடித்தனம் வந்த அன்று இரவு ரம்யமாகச் சொன்ன இந்தச் சேதி, சாவகாசமாக—இரண்டு வருஷங்களைத் தாண்டி—இன்று இந்தத் தத்தளிப்பில் அவன் நினைவுக்கு வந்தது! அவள் சொன்ன வார்த்தைகளின் பொருள் அர்த்தமாயிற்று. அடுத்த கணம் திடுக்கிட்டான்; பயந்தான்; பச்சாத்தாபமும் துக்கமும் அவனைக் கொத்தி எடுத்தன.



வாலிபத்தின் செருக்கும், செல்வப் பெருக்கும் சேர்ந்து தனது அறிவை அகங்காரமாக்கி விட்டதை அறிந்தான். இந்த நிமிஷத்தில் சாரதா உயிருடன் இருப்பாளா!

அடடா, என்ன துர்ப்பாக்கியம்!...அட பாவி! இப்போதும் என்னுடைய பாக்கிய, துர்ப்பாக்கியங்களைப் பற்றித்தான் சிந்திக்கிறேன்.

ஆமாம், கொடிய நெஞ்சம் படைத்தவன் நான் என்பதை உணர்ந்து கொண்டேன். உன் கணவன் என்ற அகங்காரத்தில்—அதில் பிறந்த ஒரு மூர்க்கத்தில்—மூர்க்கம் முற்றிய வெறுப்பில் உன் எதார்த்தமான ஒவ்வொரு சொல்லும், செயலும், பாவனையும், கொடுமையும், வர்மமும், வினையும் உள்ளதாகத் தென்பட்டது!

நியாயமாகவும் நேர்மையோடும் நீ கூறிய ஒவ்வொரு பதிலும் என்னை அவமதிப்பது போல எனக்குத் தோன்றியது! உன்னைத் துன்புறுத்துவதே நோக்கமாகக் கொண்டிருந்த எனக்கு வேறென்ன தோன்றும்!

தோன்றுவதை யெல்லாம் செய்தேன். அதன் விளைவை......விளைவு என்ன!

வெளியில் சென்ற நான் வீடுதேடி வரும்போது பசியோடு வருவேனே என்று பாலையும், சோற்றையும் வைத்துக் கொண்டு பட்டினியாக இரவும் பகலுமாகக் காத்துக் கிடந்த உனக்கு—நானிக்கு நான் வந்து நெருப்பை அள்ளிப் போட்டாக வேண்டும்! நினைத்துப் பார்க்க முடியவில்லையே!

போடுகிறேன்; ஆட்சேபிக்க வில்லை. ஆனால் உயிரோடு நினைவோடு உன்னைக் கண்டு என் குற்றத்தை உன்னிடம் வெளியிட்டு உன் மன்னிப்பைப் பெற்றால்... என் குறை ஒருவாறு நீங்குமோ! "நான் 'பிழைப்பேனா!'" என்று ஏங்கினாய். பொங்கி அழுதாய். அதுமாத்திரமா! என்றாவது நம் கணவனுக்குப் புத்தி தெளியும், நாமில்லா விட்டால் அவர் என்ன ஆவார் என்றல்லவா தவித்திருக்கிறாய்!

ஆமாமடி என் தங்கமே, அந்த முகமும், கண்களும் அதை எனக்கு அன்று சொன்னதை, அப்பொழுது காணாமல், இதோ இந்த முகமறியாத இருட்டில் காண்கிறேனடி!

என் மன நிலை சீர்ப்பட்டுச் சந்தோஷத்தைக் கண்ட பிறகு நீ வாழ நினைத்திருந்தாய். காத்திருந்தாய், காத்திருந்தாய்...நான்! உன்னைச் சமாப்தி செய்து விட்டேன். காப்பாற்றுவதாகக் கைப் பிடித்தேன். பதறப் பதற ஏசிப் பட்டினி போட்டு வதைத்தேன். உன் மௌனத்தைப் பழித்தேன். உன் நிதானத்தை நிந்தித்தேன்.

அதற் கெல்லாம் இதோ கைமேல் பலன் கிடைத்து விட்டது. இனி நான் அலறினாலுமில்லை. கதறினாலுமில்லை. போய் விட்டாயோ, போகப் போகிறாயோ! ஐயோ, பாவிகள்! இரண்டு நாட்களுக்கு முன்பே எழுதக் கூடாதா! யார் எழுதுவார்கள்! யாருக்குக் கவலை எழுத!

அம்மாவுக்குப் பாவம் பிள்ளை படவிருக்கிற துக்கத்தை இரண்டு நாளாவது ஒத்திப் போடுவோமே என்று இருந்திருப்பாள். "என்னடா சதா மாமியார் வீடு, படிக்கிற பிள்ளைக்கு. வெட்கமாக இல்லை!" என்று கேட்டவள் தானே.

வெட்கம் போய் விட்டது! இனி அம்மாவின் பிள்ளையாக வீட்டிலேயே இருக்கலாம்.

சாரதா, மூர்க்கனுடன் வாழ்ந்து துயரத்துக்கும், துக்கத்துக்கும் பலிக்கும் இரையாவதைவிட

சாவதே மேல்! உன் நிர்மல சித்தம் கலங்கி, பொங்கி, குன்றி, குறுகி மடிந்து விட்டது. கடைசியில், ஐயையோ. நினைப்பின் விஷத் தீண்டுதலைச் சகிக்க முடியவில்லையே! ரயிலடிக்காவது போய்த் தொலைகிறேன். இப்பொழுதே போய் என்ன செய்கிறது! இங்கே என்ன செய்கிறேன்? இந்தத் துடிப்பை விட அங்கே போய் நாலுபேர் முகத்தைப் பார்க்கலாம்......

அட பாவி! துயரத்தை எந்த விதத்தில் மறக்கலாம் என்று தான் தோன்றுகிறதே யொழிய...... ஒரு வேளை ஏதாவது தந்தி வந்தாலும் வரலாம்; 'சாரதா போய் விட்டாள்' என்று.

பகவானே, என்னைத் தண்டிப்பதற்காக, நன்றாயிருந்த என் மனைவியை அழைத்துக் கொண்டு விடுகிறாயா! ஆம். நீ செய்தது சரி. என் இறுமாப்பில் பொறுமையே உருவான சாரதா கட்டுப்பட்டிருந்தது உனக்கு ஏற்கவில்லை!

பொல்லாதது போகிற வழியில் சாதாரணமாகப் போய் விடுமா! துக்கம் மித மிஞ்சியதால் தன்னை மறந்து பெஞ்சியின் மீது சாய்ந்தான் சீனு.

** ** **

இரவு பன்னிரண்டு மணி. வெளியில் மழை சோவென்று பெய்து கொண்டிருந்தது.

உள்ளே கட்டிலின்மீது குற்றுயிராகக் கிடந்த சாரதாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவள் தாயார் பெண்ணின் முகத்தையும், மூச்சையும் கவனித்துக் கொண்டே இருந்தாள். அவள் கண்ணாலேயும் மூக்காலேயும் ஜலம் வடிந்தவாறிருந்தது.

சாரதா அடிக்கொரு தரம் கண்ணைத் திறந்து சுற்றும் முற்றும் பார்ப்பதும் பார்வை சோர்ந்து அவள் கருநீல விழிகள் தாமாக மூடிக் கொள்ளுவதுமாக இருந்தாள்.

அஸ்தமித்தது முதலாகத் தென்பட்ட அந்தத் 'திருக்' 'திருக்'கென்ற விழிப்பைக் கண்டதும் 'சரி' என்று தீர்மானித்தாள் தனக்குள்.

ஒரு தடவை கண் விழித்தாள் சாரதா.

அவள் முகத்தோடு முகம் வைத்து, "என்னடியம்மா பார்க்கிறாய்! தண்ணீர் வேண்டுமா, கொஞ்சம் காப்பி தரட்டுமா!" என்றெல்லாம் கேட்டுப் பார்த்தாள் தாயார்—அவள் நினைவு சரியாக இருக்கிறதா வென்று அறிய.

'இல்லை' என்பது போல அந்தக் கண்கள் மூடிக் கொண்டன. ஆதியோடந்தமாகத் தாயின் உள்ளம் சிந்திக்கத் தொடங்கியது. தான் தவமிருந்து அவளைப் பெற்றது. பெயரிட்டது, வளர்த்தது. கல்யாணம் பண்ணிக் கொடுத்தது, ஆசை போன போக்கிலெல்லாம் அவளுக்குச் சீர் செய்தது. செல்வம் கொண்டாடியது இதற்குத் தானா! இதற்காகவா வளர்த்தேன்! கடனுக்கா இவ்வளவு பாடு பட்டேன்! கடன் காரியாய் ஆகப் போகிறாயடி சாரதா......

"சௌந்தரம், நீ கொஞ்சம் படுத்துக்கொள். நான் பார்த்துக் கொள்கிறேன் அவளை" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் சௌந்தரம்.

"நான் எங்கே படுக்கிறது! மெதுவாகப் படுத்தால் போச்சு. உன் பிள்ளைக்கு வண்டி எப்போ! எப்போ வருவான்!"

"இந்த நேரத்தில் வண்டியேறி இருப்பான். உதயத்திலே வந்து விடுவான்."

"ஹூம். அதுவரைக்கும் தாங்குமா! பிழைத்திருந்தால் பார்த்துக்கலாம்."

"என்னடி பாவி, என்ன சொல்றே!"

"என்ன இருக்கு சொல்ல. ஒன்றுமில்லை. உன்னுடைய பிள்ளை வந்ததும் ஒரு வார்த்தை சொல்லணும். சொல்லி விட்டால் உடனே போய் விடுவாள்."

"சௌந்தரம், லாப நஷ்டம் என்னைச் சேர்ந்தது. அதுக்காகவாவது நான்......"

"ஆமாம். யாரில்லை என்றார்கள்! ஏதோ நீ உடம்பும் உயிருமாய் என்னோடு பழகினவள். என் பெண் சுபாவம் தெரிந்தவள் என்றுதான் தைரியமாகப் பெண்ணைக் கொடுத்தேன். அவளுக்கு ஆயுசு முடிந்து செத்து விட்டால் அழுவே





மூன்று நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து ஒரு நாடகம் ஆண்டு தோறும் நடந்து வருகிறது என்றால் பெரிய காரியமல்லவா? இந்த அற்புதம் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள தேப்பெருமாள் நல்லூரில் நடந்து வருகிறது. புராதன பாகவத சம்பிரதாயத்தை யொட்டிய "பிரஹலாதா" என்ற நாடகம் மே மீ 16ல் அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த நாடகத்தை நடத்தி வரும் ஸ்ரீ டி. வி. நடேச பாகவதருக்கு "நடனமணி" என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டினர். மேற்படி நாடகத்தில் கலந்து கொண்டு நடித்தவர்களை மேலே காணலாம்.

மாட்டேன். ஏதோ ஜன்மாந்திர பாவம், பூர்வத்திலே வாங்கின கடன். அடைத்தாகி விட்டது, அவ்வளவு தான்."

"போதுமே சௌந்தரம், கன்னு பின்னு என்று பேசாதே! இன்று சாயங்திரம் கூட டாக்டரைக் கேட்டேன். 'பிராணபயமே இல்லை' என்று நிச்சயமாகச் சொல்லியிருக்கிறார். உன் கர்ப்பகத் தாயேதான் தந்தி கொடுத்தது சீனுவுக்கு."

கோபம் பொங்க, "இல்லாவிட்டால்!" என்று குறுக்கிட்டாள் சௌந்தரம்

"விவரமாகக் கடுதாசு எழுதி, மறு நாள் லீவு எடுத்துக் கொண்டு வா என்று சொல்லலாம்."

"அத்தனைக்கு இங்கே இல்லையம்மா...!"

"அம்மா, அம்மா!" என்று கூவியபடி கண் திறந்தாள் சாரதா.

"என்னம்மா வேணும்!" என்று முகத்தருகில் குனிந்து கேட்டாள் சௌந்தரம்.

"இப்போது ஏன், எங்க மாமியாரை..." என்றதும் கமலம்மாள் அருகில் வந்து, "ஏண்டியம்மா, என்ன வேணும்! துளி காப்பி கொண்டு வந்து தரட்டுமா கடக்கட!" என்றாள்.

"வேண்டாம் மாமி, அவர்!......"

"சீனுதானே, காலையில் வந்து விடுவான்! உனக்கு உடம்பு ஒன்றுமில்லை, தைரியமா இரு. காசிலிங்கம் கைராசிக்காரன் என்றுதானே நான் உன்னை இங்கே அழைத்து வந்தேன். ஆச்சு, விடியப் போகிறது! தாகத்துக்குக் கொஞ்சம் காப்பி சாப்பிடேன்! இதோ கொண்டு வரேன்" என்று உள்ளே போனாள் கமலம்மாள்.

"இதோ பார், அம்மா! அவர் வந்ததும் ஏதாவது அசட்டுப் பிசட்டு என்று பேசி விடாதே. உனக்குத்தான் மூன் கோபமாச்சே என்று சொல்றேன். அப்புறம் அவருக்குக் கோபம் வந்து..." என்றபடியே ஓய்ந்தது அவள் வாய். கண்கள் தாமாக மூடிக் கொண்டன.

"சாகிறபோது கூட பயமாடி உனக்கு!" என்று மனம் நொந்து அழுதாள் பெற்றவள்.

அன்று இரவு முழுதும் கண்ணைத் திறப்பதும் அலங்கமலங்க விழிப்பதும், பார்வை படிந்து மூடுவதுமாகக் கழிந்தது.

வேதனையிலாழ்ந்து தன்னை மறந்திருந்த சௌந்தரத்துக்குக் கடகட வென்று இரைந்து ராட்டினம் சுழன்ற சத்தம் கேட்டுச் சுய பிரக்ஞை வந்து விடிந்து விட்டதா என்று நினைக்கும் போதே அடுத்த வீட்டில் வாசல் பெருக்கும் சத்தம் கேட்டது. ஜன்னல் புறமாக வந்து எட்டிப் பார்த்த பொழுது தட தட வென்று வீட்டு வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அடுத்த வினாடி சீனு உள்ளே பாய்ந்து வந்து "இருக்காளா சாரதா!" என்று கேட்டபடி அவள் படுக்கையருகில் பதறிக் கொண்டு வந்து மனைவியைப் பார்த்தான். மாமியாரைப் பார்த்தான்.

வயிற்றைக் கலக்கிற்று அவனுக்கு. "அப்பா, வந்தாயா! இனிமேல் வரும் பெண்ணையாவது நன்றாக வைத்துக் கொண்டிரு. நாளைக்கே நீ புது மாப்பிள்ளை — எப்படியாவது நன்றாகயிருந்து உனக்கொரு பிள்ளை பிறந்து அவனைக் கரையேத்தட்டும். நான் வந்த காரியமாச்சு. சாரதா! இன்னொரு அம்மா வயிற்றிலே பிறந்து கஷ்டப் படாதே! எங்கேடி, என் சாரதாவின் அழகு முகம்! அடி செல்வமே! உன்னைப் படிக்க வைத்து, பாட வைத்து, பாவாடை, சித்தாடை, புடவை கட்டி, பொன்னும் மணியும் சூட்டிப் பெண்ணாகப் பார்த்த கண்ணாலே பிணமாக உன்னைப் பார்க்க மாட்டேன். நான் போகிறேன். என் பட்டத்தரசியைப் பாலூருக்குப் பலி கொடுத்து விட்டுப் போகிறேண்டி!"

தாயும், மகனும் பிரமை நீங்கிச் சாரதாவைப் பார்க்கும் போது அவளில்லை...!

அலறிக் கொண்டு அவள் மீது பாய்ந்த மகனைத் தூக்கி யெடுத்தாள் தாய்.

"சாரதா, நான் கூப்பிடுவது கேட்க வில்லையா, உனக்கு!" என்று வீறிட்டான் சீனு.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்தாள் சாரதா. "என்ன, இது! ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்!" சீனுவின் தோளைப் பிடித்து உலுப்பி எழுப்பிக் கேட்டாள்.

"விளக்கைப் போடு முதலில்" என்றான் சீனு.

விளக்கைப் போட்டாள் சாரதா.

"என்ன கனவு கண்டீர்கள்!" என்று வியப்புடன் கேட்டாள் சாரதா.


இதோ ஓர் முற்றிலும் மாறுபட்ட
அற்புதமான ரேடியோ பாட்டரி
உங்களுடைய
ரேடியோவிற்காக
புதிய
சக்தி நிறைந்தது
விலை குறைவானது
நம்பிக்கைக்குகந்தது
நீடித்து உழைக்கக்கூடியது
EVEREADY
MINI-MAX
"எவரெடி" "மினிமாக்ஸ்" ரேடியோ பாட்டரி உங்களுக்கு இந்த அனுகூலங்களை எல்லாம் சேர்ந்து அளிக்கிறது ஏனெனில் அது பாட்டரி தயாரிப்பில் முற்றிலும் புரட்சிகரமான முறையின் பயனாக உற்பத்தி செய்யப்பட்டது. குறைந்த இடத்தில் அமைக்கக்கூடிய தட்டையான செல்கள் நிறைந்துள்ள இந்த பாட்டரி அடக்கமாகவும் நம்பிக்கைக்குகந்ததாகவும் இலேசாகவும் இருக்கிறது. மேலும் நீடித்துழைக்கக்கூடியது. இது உங்களுக்கு சக்தியை திரட்டி அளிக்கிறது. ஏனெனில் இந்த பாட்டரியின் உள்ளே ஒவ்வொரு கன அங்குல இடத்திலும் இதுவரையிலும் தயாரிக்கப்பட்ட மற்றெந்த ரேடியோ பாட்டரியையும்விட அதிகப்படியான வேலை செய்யக்கூடிய பொருள்கள் பொருத்தப்பட்டுள்ளன
உங்கள் பணத்திற்கு அதிக மதிப்பு நீங்கள் செலவழிக்கும் பணம் சக்திக்காக—பாக்கேஜ் வனப்புக்களுக்காக அல்ல!
"எவரெடி" "மினிமாக்ஸ்" என் இதர ரேடியோ பாட்டரிகளை விடச் சிறந்தது என்று உங்களுடைய ரேடியோ பாட்டரி வியாபாரியை கேளுங்கள்
EVEREADY
TRADE-MARKS
MINI-MAX
"எவரெடி" "மினிமாக்ஸ்"
ரேடியோ பாட்டரிகள்
ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு
NCM 8901

கண்ட கனவை ஒப்புவித்தான் சீனு. சாரதா கல கல வென்று சிரித்துவிட்டு "கனவிலே செத்து விட்டதினாலே இனிமேல் எனக்குச் சாவே கிடையாது" என்றாள்.

"சாரதா, கனவு மூலமாக என்னைப் பயமுறுத்தி வழிகாட்டினார் ஆண்டவன். என்னை மன்னித்து விடு. மனதில் ஒன்றும் வைத்துக் கொள்ளாதே! உடம்பு குணமாக வேணும் உனக்கு."

"நன்றாயிருக்கு. மனிதர் என்று இருந்தால் உடம்புக்கு வராதா என்ன......"

"அது சரி..." என்று அவன் முகத்தோடு முகம் வைத்து "என்னை மன்னித்து விட்டாயா! சாரதா......" என்று குமுறினான் சீனு. அவன் கண்கள் நீரை உதிர்த்தன. உடல் நடுங்கிற்று.

"என்ன பைத்தியம் இது. கனவு கண்டு யாராவது இப்படி நடுங்குவார்களா! யாரை யார் மன்னிப்பது!"

"காரணமில்லாமல் உன்னைப் படுத்தின சீனுவை நீ மன்னித்து விடு" என்ற சீனுவின் வாய் மீது கை வைத்து "மூடுங்கள் வாயை" என்றாள் சாரதா.

இருவரும் வாயை மூடிக் கொண்டாலும் மனத்திடை எண்ணங்கள் பேசிக் கொண்டே வந்தன! இருவர் மனத்திலுமிருந்த பாரம் இறங்கியது.

படித்துப் பாருங்கள்!

ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் மொழியமுதம்

ஞான குருவாக வாழ்ந்து உலகப் பிரசித்தி பெற்று விளங்கிய மகா புருஷரான ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸர் தம் வாழ்நாளில் எண்ணிறந்த சீடர்களைப் பெற்றிருந்தார். மேற்படி சீடர்களுடன் பரம ஹம்ஸர் நடத்திய ஞானவாழ்வின் நல்லுபதேசங்கள் இந் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு, உலகப் பிரசித்தி பெற்று விளங்கும் இவ்வுபதேசங்கள் வேதாந்த சாரம் எனப் போற்றப்படுபவை; உபநிடதங்களின் உருவம் என்று கொள்ளத் தகுந்தவை; பன்முறை படித்தும் கேட்டும் மனத்தில் இருத்திக் கொள்ளத் தக்கவை. மேற்படி உபதேசங்களின் தொகுப்பு நல்ல தாளில் நல்ல முறையில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை – 4. விலை ரூ. 6–8–0.

தமிழ் இன்பம்

தேமதுரத் தமிழுக்கு இன்பம் என்றே ஒரு பெயருண்டு. அத்தகைய இன்பத்தைச் சுவைக்க விரும்புகிறவர்களுக்கு இது மிகச் சிறந்த நூல்.

சொல்லின் செல்வரும் தமிழ்ப் பேராசிரியருமான திரு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் இயற்றிய சொற்பொழிவுகள், பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் நூலாக்கப்பட்டிருக்கின்றன.

மேடைப் பேச்சு, இயற்கை இன்பம், காவிய இன்பம், கற்பனை இன்பம், அறிவும் திருவும், மொழியும் நெறியும், இருமையில் ஒருமை, பாரதியார் பாட்டின்பம் என்ற எட்டுப் பிரிவுகள் கொண்டு பல்வேறு பொருள்களைப் பற்றிய கட்டுரைகள் இந்நூலில் சிறப்பொடு மிளிர்கின்றன.

தேவாரம், கம்ப ராமாயணம், புறநானூறு, குற்றாலக் குறவஞ்சி, சிலப்பதிகாரம் முதலிய பழம் பெரும் நூல்களில் படிந்து, தீஞ்சுவை பயக்கும் தீந்தமிழ்க் கவிதைகளை ஆங்காங்கு அள்ளி வீசிக் கட்டுரைகளைக் கவினுற அமைத்திருக்கிறார் ஆசிரியர். ஒவ்வொரு கட்டுரையும் கருத்து நிறைந்தும் பொருள் பொதிந்தும் படிப்போரது சிந்தனையை ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. இந்நூலாசிரியரின் உரை நடை உயிருள்ள நடை; தமிழின் தன்மையை விளக்கும் தகைமை வாய்ந்த நடை; மெருகு பெற்ற மேன்மையான நடை; மேற்படி நடை யழகில் ஈடுபட்டு இன்புறவே இந்நூலைப் பன்முறை படிக்கலாம். உதாரணம்:

"பசியும் பகையும் இன்றி, வசியும் வளனும் பெருகிய அம்மலையின் மீது அமைந்த அரண்மனையில், கருணையின் வடிவமாக வீற்றிருந்தான் பாரி. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அவன் உற்ற துணைவன்; பசிப்பிணி என்னும் பாவியின் பெரும் பகைவன்; கங்கு கரையற்ற அவ்வள்ளலின் கருணை, மன்னுயிர் முதலாகப் புல்லுயிர் ஈறாக உள்ள அனைத்துயிரையும் ஆதரிப்பதாயிற்று. ஒரு நாள் பாரி, தன் அழகிய தேர் மீது ஏறி, நாட்டு வளங் காணப் புறப்பட்டான்; செல்லும் வழியில் ஒரு முல்லைக் கொடியைக் கண்டான்; குறுகிக் கிடந்த அதன் நிலை கண்டு மனம் உருகினான்; தழைத்துச் செழித்துப் படருவதற்கு ஏற்ற கொழு கொம்பின்றிக் குழைந்து வாடிய கொடியின் துயர் கண்டு வருந்தினான்; அப்புல்லுயிரின் துன்பத்தைப் போக்கக் கருதித் தன் பெரிய தேரை அதன் அருகே கொண்டு நிறுத்தினான்; கொடியை எடுத்துத் தேர்மீது படரவிட்டு, கவலையற்ற முகத்தோடு தன் கோட்டையை நோக்கி நடந்தான்."

இந்நூல் முழுவதும் இம்மாதிரியே தமிழ் உரை நடை வளம் நலியாது செல்கின்றது.

ஆசிரியர்: திரு ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்., பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், 4, வெங்கடேச நாய்க்கன் தெரு, வாலாஜா ரோடு, சென்னை-5; விலை: ரூ. 4—0—0.


பிள்ளைப் பாட்டு

தமிழ் நாட்டில் பக்தர்கள் ஈசனையும் திருமாலையும், முருகனையும் அம்பிகையையும் குழந்தையாகப் பாவித்துப் பல அருந் தமிழ்ப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். குழந்தை வளர்ச்சியிலுள்ள ஒவ்வொரு பருவத்துக்கும் தீந்தமிழ்ப் பாடல்கள் செய்திருக்கிறார்கள். இவற்றுக்குப் "பிள்ளைத் தமிழ்" என்ற பெயர் தமிழ் இலக்கியத்தில் வழங்கி வருகிறது. இந்தப் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களில் சிலவற்றைத் தொகுத்து இந்நூலின் பதிப்பாசிரியரான திரு ராய. சொ. அரும்பத விளக்க உரையும் கொடுத்திருக்கிறார். அத்துடன், இந்நூலில் திரு ராய. சொ. அவர்கள் பாடியுள்ள காந்தி பிள்ளைத் தமிழும் இடம் பெற்றிருக்கிறது. அதில் இரண்டு அடிகளைப் பாருங்கள்:

கன்னல் அனைய திருமொழிபகர்
காந்தி! வருக, வருகவே!
கருத்திற்கு இசைந்த கஸ்தூரி
கணவா! வருக, வருகவே!

இப்படிப்பட்ட அருமையான நூல் ராயவரம் திரு ப. வ. ராம. குழந்தையன் செட்டியாரவர்களின் புதல்வி அடைக்கம்மையின் "புதுமை"த் திருநாளில் வெளியிடப்பட்டிருக்கிறது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.





வாரம் ஒரு அணா செலவிற்கு பற்களுக்கு முழுப் பாதுகாப்பளிக்கிறது!

சாம்பல், கரிபோன்ற கரகரப்பான பொருள்கள் பற்களில் கீறல் விழச் செய்கின்றன. இந்த கீறல் வழியாக பாக்டீரியா புகுந்து கெடுதல் விளைவிக்கிறது. பற்கள் பூரண ஆரோக்கியத்தோடு இருக்க விஞ்ஞான முறையில் தயாரித்த ஒரு பல் துலக்கும் வஸ்து உங்களுக்குத் தேவை. ஆகையால் கிப்ஸ் டென்டிபிரிஸ் வாங்குங்கள். பற்களுக்கு பூரண ஆரோக்கியத்தைத் தரும் எல்லா பொருள்களையும் ஒன்று சேர்த்து கெட்டியாகச் செய்ததுதான் கிப்ஸ். அன்றியும் ஒரு டூத்பேஸ்ட் செய்யும் எல்லா வேலைகளையும் அதன் பாதி விலைக்குச் செய்கிறது. இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். புரஷையோ அல்லது விரலையோ தண்ணீரில் நனைத்துக் கொண்டு கட்டியின்மேல் தேய்க்கவும். அதன் சுவையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அன்றியும் அதன் மிருதுவான ஊடுருவிப்பாயும் நுரை உங்கள் பற்களை பளிச்சென்று வெண்மையாக இருக்கச்செய்யும்!



உங்களுக்குப் பிரியமான கிப்ஸின் க்ளோரோபில் சேர்ந்திருக்க விரும்பினால் கிப்ஸ் க்ளோரோபில் டென்டிபிரிஸ் கேளுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படும் வெள்ளை டப்பாவில் பெயரை கவனித்து வாங்குங்கள்.




நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்

கிப்ஸ் டென்டிபிரிஸ்

GD. 37-50 TM டி. அன்டு டபிள்யு. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGISTERED No. M. 4392
Registered as a newspaper in Ceylon

வீட்டு உணவும் விஷமாகலாம்!





"என் குழந்தைகளின்
நோய்க்கு காரணம் நானே
என்று டாக்டர் சொன்னபோது
நான் துணுக்குற்றேன்.

சென்ற ஆறு மாதத்திற்குள் என் குழந்தைகள் இருமுறை வயிற்று நோயால் அவதிப்பட்டார்கள். போனமாதம் என் கணவர் வேறு சீக்காய்ப் படுத்தார். என்ன கஷ்டம்! வீட்டுச் செலவை சமாளிப்பதே சிரமமாயிருக்கும் பொழுது டாக்டருக்கு வேறு கொடுக்க வேண்டுமென்றால் என்ன செய்வது?

ஒருவர் மாற்றி ஒருவர் சீக்காய் படுத்தது என் மனோ நிம்மதியைக் குலைத்தது. நானே டாக்டரிடம் சென்றேன்.

டாக்டர்: நீங்கள் சமைப்பதில் கோளாறு ஒன்றுமில்லையே?

நான்: ஏன், எப்பொழுதும்போல்தான் சமைக்கிறேன்.

டாக்டர்: ஆமாம், நீங்கள் தாவரக்கொழுப்பை எப்படி வாங்குகிறீர்கள்?

நான்: சில்லறையாகத்தான் வாங்குகிறேன்.

டாக்டர்: அப்படிச் சொல்லுங்கள். சில்லறையாக விற்கப்படும் கொழுப்பு கலப்புப் பொருள்கள், அழுக்கான கைகள், ஈக்கள் இவைகளால் அசுத்தப் படுத்தப்பட்டு பலவகைக் கிருமிகள் வசிப்பதாயிருக்கலாம். அதுவே உங்கள் வீட்டில் வியாதிக்குக் காரணமாயிருக்கும்.

சில்லறையாக கொழுப்பு வாங்கினால் பணம் மிச்சப்படும் என்று நினைத்தேன். ஆனால் அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்கும்பொழுது அது ஒரு லாபமே இல்லை.

இப்பொழுது நான் காற்றுப்புகாத சீல் செய்த டின்னில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே வாங்குகிறேன். டால்டா வனஸ்பதி உணவிற்கு சிறந்த ருசியை அளிக்கிறது என்பதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும். என் வீட்டில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு திரும்பத்திரும்ப கேட்டு சாப்பிடும் தமாஷே போதாதா?"

டால்டா வனஸ்பதி வாங்கினால் புத்தம் புதிய, சுத்தமான ஒரு சிறந்த ரக தாவரக் கொழுப்பு உங்களுக்கு கிடைக்கிறது. எப்பொழுதும் டால்டா வனஸ்பதி கிடைக்கும் பொழுது, கொழுப்புகளை சில்லறையாக வாங்கி ஏன் அவதிப்பட வேண்டும். இப்பொழுது டால்டா வனஸ்பதியில் விடமின் 'ஏ', 'டி' சேர்ந்திருக்கிறது. எல்லோரும் வாங்கக் கூடிய விலையில் 10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்யத்தை
அபிவிருத்தி செய்வதெப்படி?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



மர அடையாளமுள்ள
டின்னைப் பார்த்து
வாங்குங்கள்.

ஆரோக்கியமாயிருக்க

டால்டா வனஸ்பதியில் சமையுங்கள்

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 212-50 TM